லெனின் வாழ்கிறார்

நெ.து. சுந்தரவடிவேலு



தமிழ் வளர்ச்சித் துறை

லெனின் வாழ்கிறார்

நெ.து. சுந்தரவடிவேலு

தமிழ் வளர்ச்சி இயக்ககம்
எழும்பூர், சென்னை - 600 008.

நூல் விவரக் குறிப்பு

நூலின் பெயர்	:	**லெனின் வாழ்கிறார்**
ஆசிரியர்	:	**நெ.து. சுந்தரவடிவேலு**
வெளியீட்டாளர்	:	இயக்குநர் தமிழ் வளர்ச்சி இயக்ககம் எழும்பூர், சென்னை-600 008
பதிப்புரிமை	:	தமிழ்நாடு அரசு
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	2017
விலை	:	50
பக்கம்	:	72
படிகள்	:	1500
தாள்	:	70 ஜிஎஸ்எம், டிஎன்பிஎல்
நூலின் அளவு	:	1/8 டெமி
அச்சிட்டோர்	:	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இரண்டாம் முதன்மைச் சாலை சி.ஐ.டி. வளாகம், தரமணி சென்னை - 600 113
நூல் கிடைக்குமிடம்	:	தமிழ் வளர்ச்சி இயக்ககம் தமிழ் வளாகம், ஆல்சு சாலை, எழும்பூர், சென்னை-600 008.

முனைவர் **கோ.விசயராகவன்** எம்.ஏ., எம். ஃபில்.,எம்.பி.ஏ.,பி.எட்., பி எச்.டி.
இயக்குநர் (பொறுப்பு)
தமிழ் வளர்ச்சித்துறை
எழும்பூர், சென்னை-600 008

அணிந்துரை

தமிழக அரசு சிறந்த தமிழறிஞர்களின் நூல்களை நாட்டு உடைமை ஆக்கி, அதன் மூலம் அந்நூல்கள் எல்லோருக்கும் எளிதில் கிடைத்துப் பயன்பெறுமாறு அவற்றை மறு அச்சுச் செய்து வெளியிட்டு வருகின்றது. இவ்வரிசையில் **'லெனின் வாழ்கிறார்'** என்னும் இந்த நூலும் அடங்கும்.

உலக நாடுகளில் ஒப்பற்ற தலைவர்கள் அவ்வப்போது தோன்றிக் கொண்டே இருப்பார்கள். காலம் அவர்களைத் தோற்றுவிக்கும்.போட்டி,பொறாமை,பூசல்,உள்நாட்டுப்போர், பொருளாதாரச் சீரழிவு, நிலையற்ற அரசியல் என அனைத்து நிலையிலும் சிதறிக் கிடந்த ருசிய நாட்டைஒற்றுமைப்படுத்தி வலிமை மிக்க நாடாக ஆக்கி அரசியல் நிலைப்பாட்டை உருவாக்கி மக்களுக்கு வாழ்வளிக்கத் தோன்றியவரே லெனின் என்னும் மாமேதை. அடக்குமுறை , துன்பம், துயரம், அவமானம் என அனைத்தையும் தாங்கித் தலைவராக உயர்ந்த லெனினின் வாழ்க்கை வரலாறே 'லெனின் வாழ்கிறார்' என்னும் இந்த நூல்.

பேராசிரியர் நெ.து. சுந்தர வடிவேலு அவர்கள் இந்த நூலை ஆக்கியுள்ளார்.அவர் சோவியத்நாடு சென்று வந்த பெருமகனார். பெருந்தலைவர் காமராசருடன் அணுக்கமாக இருந்து தமிழகக் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்தவர். அதற்காகப் பகல் உணவுத் திட்டத்தைப் பள்ளிகளில் நடைமுறைப்படுத்தியவர். சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக இருந்தவர். சிறந்த கல்வியாளர். கல்வி, அரசியல் குறித்து நூல்கள் பல எழுதிய கறைபடாத கைகளுக்குச் சொந்தக்காரர்.

இந்நூல் மறு அச்சாகி மக்களுக்கு எளிதில் கிடைத்திட வேண்டும் எனும் அரிய வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்துள்ள தமிழும், தமிழ்நாடும் வாழ்ந்திட, அல்லும் பகலும் அயராது உழைத்த மேனாள் தமிழ்நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு

புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கும் மற்றும் இந்நாள் தமிழ்நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்களுக்கும் இதயம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து வரும் மாண்புமிகு தமிழ் மொழி, தமிழ் பண்பாட்டுத் துறை, அமைச்சர் **கோ. பாண்டியராஜன்** அவர்களுக்கும் நன்றி.

தமிழ் வளர்ச்சிப் பணிகளில் ஆர்வத்தோடு நாட்டம் செலுத்தித் தமிழ்த் தொண்டாற்றிவரும் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர் **இரா.வெங்கடேசன் இ.ஆ.ப.** அவர்களுக்கும் இதயம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் சிறப்பான முறையில் மறு அச்சுப் பெற முனைந்து உழைத்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் மற்றும் அனைத்துப் பணியாளர்களுக்கும் அச்சகத்தார்க்கும் நன்றி.

இயக்குநர்

முன்னுரை

உலகில் வாழும் உயிர் வகைகள் எண்ணற்றன. அவற்றில் மக்கள் இனம் ஒன்று. மக்கள் இனம் மட்டுமே ஆறாவது அறிவினைப் பெற்றது. அவ்வறிவின் உந்துதலால், மாந்தர் பெற்றுள்ள மாற்றங்கள், வளர்ச்சிகள், பற்பல; அவை பெரியன. விதைத்துப் பயிரிடும் தொழில் முதல், விண்வெளிப் பயணம் ஆய்வு வரை, மக்களால் சாதிக்க முடிந்திருக்கிறது.

அறிவிலே, ஆற்றலிலே, நுட்பத் திறமையிலே, சாதனையிலே சிறந்து, சிறந்து வளர்ந்துள்ள மக்கள் குலத்தின் பெரும்பகுதி பட்டினி, நோய், அறியாமை, விலங்குப் போக்கு ஆகியவற்றிற்கு ஆட்பட்டு அல்லல்பட்டு வந்தது.

இங்கும் அங்கும் சிற்சிலர் இன்பத்தில் திளைத்தனர்; செல்வத்தில் புரண்டனர்; கேளிக்கையில் கெட்டனர். அதே போது, கோடி கோடி மாந்தர், உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, இருக்க இடமின்றி அலைந்தனர். கஞ்சி குடிப்பதற்கு இல்லாத, கோடானு மக்கள் அதன் காரணங்கள் இவையென்று அறியாதிருந்தார்கள்.

'ஆறு பெருக்கெடுத்து, ஓடினாலும் நாய் நக்கித்தானே குடிக்க வேண்டும்! இட்டார்க்கு இட்ட பலன்; முன்னை நல்வினையால், சிலர் செல்வராசு வாழ்கிறார்கள். முற்பிறவியில் செய்த தீவினையால், கோடி கோடி மக்கள் வறுமையில் மடிகிறார்கள்' என்று ஆறுதல் கூறப்பட்டது. இதற்கு மருந்து உண்டா? உண்டு. அது என்ன?

'வாய்த்ததை முணுமுணுக்காமல் ஏற்றுக்கொண்டு, ஆமைகளாக, ஊமைகளாக இருந்து, மேலோர்க்குத் தொண்டு செய்க. இம்மை இன்பத்தைத் தேடாமல், மறுமையே சிந்தனையாகக் கிடக்க' இப்படி மயக்கப்பட்டார்கள், மக்கள்; பல நூறு ஆண்டுகளாக மயக்கப்பட்டார்கள். மக்கள் இனத்தின் நீண்ட வரலாற்றில், ஒரே வேளை, புதிய பார்வையும் புரட்சிச் சிந்தனையும் முற்போக்குக் கருத்துகளும் கொண்ட சிற்சில மாமனிதர்கள் தோன்றியதைக் காண்கிறோம்.

கார்ல் மார்க்சு, எங்கெல்சு என்ற இரு பேரறிஞர்கள், மேற்கூறிய வழிகாட்டிகள் வரிசையில் வந்தார்கள். புதியதோர் உலகஞ் செய்ய

வழி சொன்னார்கள். பொது உடைமைக் கொள்கை திசையெட்டும் முழங்கச் செய்தார்கள்.

'அந்தந்த நாட்டின் இயற்கை வளங்களும், உற்பத்திச் சாதனங்களும் போக்குவரத்துக் கருவிகளும் தனித்தனி கூறுகளாக- பலவேளை கட்டுபிடியாகாத சிதறல்களாக இருப்பதை மாற்ற வேண்டும். அதனையும் ஒன்றாக்க வேண்டும். அவற்றை நாட்டு மக்கள் அனைவருக்கும் பொதுவாக்குவோம். எல்லோரும் உழைப்போம்; எல்லோர்க்குமாக உழைப்போம். அத்தகைய பொது உடைமை வாழ்க்கை முறையே, எல்லோரையும் வாழ வைக்கும்; நான்றாக வாழ வைக்கும்; ஒன்றாக வாழ வைக்கும்' இப்படி வழிகாட்டியவர்கள் இவ்விருவரும்.

கார்ல் மார்க்சின் கோட்பாடு, சிலகாலம் கருத்து மண்டலத்தோடு நின்றது. அதற்கு, முதன் முதல் செயலுருவம் கொடுத்த பெருமை, மாவீரர் லெனினைச் சாரும். அறுபத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, மாபெரும் அக்டோபர் புரட்சியினை வெற்றி பெற நடத்திக் காட்டியவர், தலைவர் லெனின் ஆவார். பொது உடைமை வாழ்க்கை முறை, பகற்கனவல்ல; நடைமுறைக்குப் பொருந்தியதே, என்று மெய்ப்பித்துக் காட்டியவர், தன்னேரில்லாத லெனின்.

உலகத்தின் முதல் சமதர்ம, பாட்டாளி, ஆட்சியை நிறுவி, நிலைபெறச் செய்த சாதனைக்கு ஈடு இணையில்லை. தோழர் லெனின் உலகத்தின் நிலப்பரப்பில் ஆறில் ஒரு பகுதியில் சமதர்ம ஆட்சியை நிலை நிறுத்தினார். அதன் சிறப்பையுணர்ந்த பல நாடுகள், பின்னர் சமதர்ம நெடுஞ்சாலையில் வீறுநடை போடத் தலைப்பட்டன. இன்று உலகத்தின் மூன்றிலொரு பகுதி, சமதர்ம முறையைப் பின்பற்றக் காண்கிறோம்.

இத்தகைய யுகப்புரட்சிக்கு வித்திட்ட தோழர் லெனின், பல்துறைப் பேரறிவாளர்; ஓயாத பொதுத் தொண்டர்; சலியாத பெரும்புரட்சியாளர்; இணையற்ற வெற்றி பெற்ற மாமனிதர்; அந்நிலையிலும் எளிய, தற்குறிக் குடியானவர்களையும் மதித்துப் பழகிய பண்பின் சிகரம்.

உலகத்தின் பெருஞ் சாதனையாளர்களின் வரிசையில் முன்னே ஒளிவிடும் லெனின் அவர்களுடைய நூற்றுப் பத்தாவது ஆண்டு நிறைவு விழா இவ்வாண்டு ஏப்ரல் திங்கள் உலகமெங்கும் கொண்டாடப் பட்டது. அச்சீரிய நிகழ்ச்சி, என் கடமையுணர்வைத் தூண்டியது; தமிழ் பெருமக்களுக்கு அப்பெரியாரின் வரலாற்றை எழுதி வழங்கத் தூண்டிற்று.

சென்னையிலிருந்து வெளியாகும் 'மக்கள் செய்தி' என்னும் நாளிதழ் அதற்கு இடம் கொடுத்தது. இந்நாளிதழ் வெளியாவதே, ஒரு புதுமை. சென்னை மாநகரிலும் புற நகரிலும் உள்ள உழைக்கும் மக்களே பங்கு போட்டு, ஒரு பொதுக் கம்பெனியை நிறுவி, துணிந்து 'மக்கள் செய்தி'யை நடத்தி வருகிறார்கள். அதில் லெனின் பற்றி தொடர்ந்து பதினாறு கட்டுரைகளை எழுதினேன். அவை, **லெனின் வாழ்கிறார்** என்னும் பெயர் தாங்கி, நூலாக இப்போது வெளிவருகிறது. இவ்வேளை, 'மக்கள் செய்தி'க்கு நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

கலைச் செல்வங்கள் பலவற்றைக் கொண்டு வந்து சேர்த்து, போற்றற்கரிய தமிழ்த் தொண்டும், அறிவுத் தொண்டும் ஆற்றும் நிறுவனம் **நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்** ஏற்கெனவே என்னுடைய நூல்களாகிய **அங்கும் இங்கும், எல்லோரும் வாழ்வோம், நான் கண்ட சோவியத் ஒன்றியம், சோவியத் கல்வி முறை** ஆகியவற்றை நல்ல வண்ணம் அந்நிறுவனத்தார் வெளியிட்டுள்ளார்கள். இப்போது **லெனின் வாழ்கிறார்** என்னும் இந்நூலை, பல படங்களோடு வெளியிட்டு, தமிழ் இலக்கியத்தை வளப்படுத்துகிறார்கள். அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றி.

தோழர் லெனின், உலகத்தின் பொதுச் சொத்து. அவருடைய வரலாறு வரும் தலைமுறைகளுக்கு நம்பிக்கை ஊற்று. அதை எழுதுவது என்னுடைய கடமை. அதைப் பயன்படுத்திக் கொள்வது தங்கள் விருப்பம்.

நெ.து. சுந்தரவடிவேலு

பொருளடக்கம்

1. வணக்கம் தலைவரே! தோழரே!..1
2. லெனினுடைய இளமைப் பருவம்..5
3. வெளியேற்றப்பட்ட மாணவன்..8
4. சைபீரிய சிறையிருப்பு..12
5. நாடு கடந்த வாழ்க்கை..16
6. புரட்சியின் மின்னல்கள்..20
7. புரட்சியின் தொடக்கம்..24
8. லெனின் தலைமையில் ஆட்சி..28
9. சோவியத் ஆட்சியின் அடிவைப்புகள்..32
10. தொல்லைகள் தொடர்ந்தன..36
11. அரைப்பட்டினி அமைச்சர்கள்..40
12. படியுங்கள்! படியுங்கள்! மேலும் படியுங்கள்..43
13. கனவு உலகவாசியா லெனின்?..47
14. நோய்வாய்ப்பட்டார்..51
15. லெனின் உயிர் நீத்தார்..55
16. லெனின் வாழ்கிறார்; வாழ்விப்பார்..59

லெனின் வாழ்கிறார்

1. வணக்கம் தலைவரே! தோழரே!

உலகத்தில் மூன்றிலொரு பாகம் சிகப்பாயிருக்கிறது; அதாவது சமதர்ம முறைக்கு மாறிவிட்டது.

சமதர்ம முறை என்றால் என்ன? எல்லோரும் வாழ்தல்; நன்றாக வாழ்தல்; ஒன்றாக வாழ்தல்.

சமதர்ம சமுதாயத்தில், எல்லோருக்கும் வேலை உண்டு. எந்த வேலைக்கும் வாழ்க்கைக்குப் போதாத ஊதியம் கிடையாது.

எல்லோருக்கும் வீடு உண்டு. எவரும் தெருவோரம் தூங்க வேண்டாம்.

எல்லோருக்கும் உடை உண்டு. குளிருக்குப் போதுமான உடை உண்டு.

உணவு உண்டு; எல்லோருக்குமே உண்டு; வயிறு நிறைய உணவு உண்டு.

இத்தனையும் அகவிலை இன்றி கிடைக்கும். வெள்ளைச் சந்தையில் வாங்கலாம். அப்புறம்?

சமதர்ம நாடு மக்களைக் கூலிகளாகக் கருதாது; சம பங்காளிகளாக மதிக்கும். எனவே, எல்லோருக்கும் வாய்ப்புகள் உண்டு. கல்வி கொடுக்கும்; பயிற்சி கொடுக்கும்; எல்லாப் பிள்ளைகளுக்கும் ஒரே வகையான கல்வி கொடுக்கும்; ஆண்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புகள் பெண்களுக்கும் கிடைக்கும். விரும்பும் தொழிலில் பயிற்சி பெறலாம்.

இத்தனையும் முடிகிறதா? முடிகிறது. எதனால்? இலட்சக்கணக்கான ஓட்டைகளை அடைத்ததால், தனியாட்களின் இலாபக் கண்ணோட்டங்கள் ஓட்டைகள்; அவற்றை அடைப்பது எப்படி?

உற்பத்திச் சாதனங்களை நாட்டுடைமையாக்குவதால்.

நிலம்? எவரும் கொண்டு வந்தது அல்ல; எவரும் கொண்டு போகக்கூடியதல்ல.

மாடமாளிகைகளை? மகானும் கொண்டு வரவில்லை. மகராசர்களும் கொண்டு வரவில்லை. எவரும் கொண்டு போக முடியாது.

இப்படியே பிற உற்பத்திச் சாதனங்களும்; அவற்றையும் எவரும் கொண்டு வரவில்லை; மறையும்போது கொண்டு போக முடியாது.

கோடி கோடி பட்டாக்களுக்குப் பதில்; பலவற்றைப் பொதுவில் இணைத்து இலட்சம் பட்டாக்களாக்குவது, பொது உடைமை. தனித் தனிப் பங்குதாரர்களின் பேரேட்டிற்குப் பதில், ஒரே பேரேடாக்குவது, பொது உடைமை.

இப்பொது உடைமை முறையை முதலில் செயல்படுத்திய நாடு எது? சோவியத் நாடாகும். செய்ல்படுத்திய தலைவர் யார்? மாமேதை லெனின் ஆவார். செயல்படுத்திய கட்சி? இரஷ்ஷியா போல்ஷ்விக் (பொது உடைமைக்) கட்சியாகும்.

விளையும் பயிர் முளையிலே. லெனின் இளமையிலேயே சூடபுத்தி உடையவர்.

அவரது அண்ணன், அலெக்சாண்டர் தூக்கிலிடப்பட்டார். எதற்காக? சார் மன்னனைக் கொல்ல முயன்றதற்காக. அந்நிகழ்ச்சி லெனினுடைய சிந்தனையைக் கிளறிற்று; ஆழ்ந்து சிந்தித்தார்; பலமுறை சிந்தித்தார்; அரிய முடிவுக்கு வந்தார். என்ன முடிவு?

தனியாள் வன்முறை, ஆட்சியை மாற்றாது; சமதர்ம ஆட்சியைக் கொண்டு வராது. பின் எது சமதர்மத்தைக் கொண்டுவரும்? பொதுமக்கள் எழுச்சி, கிளர்ச்சி, போராட்டம் கொண்டு வரும்.

முடிவைச் செயல்படுத்த முனைந்தார். மாணவர்களிடையே சமதர்மக் கொள்கையைப் பரப்பினார்; பாட்டாளிகளிடையே பரப்பினார்.

மக்களைப் பக்குவப்படுத்தி வரும்போது? அரசின் கண்காணிப்புக்கு ஆளானார். தண்டனையும் தொடர்ந்தது. என்ன தண்டனை? நாடு கடத்தல்; முதலில் தொலைவிலுள்ள நகருக்குத் துரத்தப்படல். பிறகு? சைபீரியாவுக்கு கடத்தப்படல்.

லெனின் மனந்தளரவில்லை. காலத்தை வீணாக்கவில்லை. சட்டப்படிப்பில் ஆழ்ந்தார். தனியாகத் தேர்வு எழுதினார். சிறப்பாக தேர்ச்சி பெற்றார். சமதர்மக் கட்டுரைகளை எழுதிக் குவித்தார். நொடியும் வீணடிக்கவில்லை.

சைபீரியாவில் சிறைப்பட்டிருந்தபோது, அவர் க்ருப்ஸ்கயாவை மணந்தார். அம்மையார், லெனினுடைய புரட்சிக்குத் துணை நின்றார். இன்பத்திலும், துன்பத்திலும் வாழ்க்கைத் துணையாகவே விளங்கினார்.

சைபீரியாவிலிருந்து திரும்பிய பிறகு, சமதர்ம அணி திரட்டுவதில் மீண்டும் முனைந்தார். மீண்டும் கண்காணிப்புத் தொல்லைகள்; சிறிது காலத்தில், லெனின் நாட்டை விட்டு வெளியேறினார். ஓய்ந்தாரா லெனின்?

இல்லை. வெளிநாடுகளில் இருந்தபடியே, இரஷ்ஷியாவில் சமதர்ம உணர்வை வளர்த்துக் கொண்டிருந்தார். கட்டுரைகளை எழுதி அனுப்புவார். இரஷ்ஷியாவில் பரப்பப்படும். பாட்டாளிகள் மறைத்து வைத்துப் படிப்பார்கள். உணர்வு பெறுவார்கள்; உறுதி கொள்வார்கள். சில வேளை வெளிநாட்டில் வெளியாகும். இரஷ்ஷியாவிற்குள் சந்தடியின்றி நுழையும்.

1917 பிப்ரவரியில், இரஷ்ஷியாவில் ஒரு புரட்சி ஏற்பட்டது. மன்னர் ஆட்சி மாறவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்கள் கொலு ஏற்பட்டது. மக்களுக்குப் போதிய நன்மை கிடைக்கவில்லை.

1917 அக்டோபரில் பெரும் புரட்சி வெடித்தது. அது உலகைக் குலுக்கியது. இரஷ்ஷியப் பேரரசிலிருந்து சார் ஆட்சியை விரட்டியது. பாட்டாளி ஆட்சியை நிறுவியது.

லெனின் தலைமையிலான பாட்டாளி ஆட்சி, நிலமும், நீரும், கனிப்பொருட்களும், வனப்பொருட்களும், ஆலைகளும், சாலை வாகனங்களும் பொது உடைமை என்று முரசு கொட்டிவிட்டது.

சும்மா இருந்தார்களா நிலக்கிழார்கள்? ஏற்றுக்கொண்டார்களா செல்வர்கள்? இராணுவ அதிகாரிகள்? எதிர்ப் புரட்சியைத் தொடங்கினார்கள்.

பல்வகை முதலாளிகளும் எதிர்ப்புரட்சியில் ஈடுபட்டார்கள். நான்காண்டு உள்நாட்டுப்போர் தொடர்ந்தது. அதோடு வெளிநாடுகள் படையெடுப்பு வேறே! பதினான்கு முதலாளி நாடுகள், சோவியத் நாட்டோடு போரிட்டன. நான்காண்டு நீடித்த அப்போரை, லெனின் வெற்றிகரமாகச் சமாளித்தார்.

உள்நாட்டுப் போரும் ஓய்ந்தது. வெளிநாடுகளின் படை யெடுப்புகளும் நின்றன. அதற்கு முன்பே, அழிவுகளுக்கிடையிலே, ஆயிரம் சிக்கல்களின் நடுவிலே, பஞ்சமும் பட்டினியும் பெருகும் நிலையிலே, தொலை நோக்கோடு, லெனின், ஒரு பேரியக்கத்தை முடுக்கி விட்டார். என்ன இயக்கம்?

முதியோர் எழுத்தறிவு இயக்கம். இது நாடு முழுவதிலும் செயல்பட்டது. ஆண் பெண் இருபாலர்களின் கண்களையும் திறந்து விட்டது. எழுத்தறிவு கல்வியாக ஆக, தொழிற்சங்கங்களின் கண்களையும் திறந்துவிட்டது. எழுத்தறிவு கல்வியாக ஆக, தொழிற்திறன் வளர்ந்தது. சுய சிந்தனை படர்ந்தது. பாட்டாளிகள்

ஆட்சியில் பங்கு கொள்ள முடிந்தது. எல்லா மட்டங்களிலும் ஆட்சிப் பொறுப்பேற்க முடிந்தது.

லெனின் அக்டோபர் புரட்சிக்குத் தலைமை ஏற்று வெற்றி கண்டார்; லெனின், பாட்டாளி மக்களின் கைகளுக்கு ஆட்சிப் பொறுப்பை மாற்றுவதில் வெற்றி கண்டார்; லெனின் சோவியத் நாட்டை மின்மயமாக்குந் திட்டந்தீட்டி வெற்றி கண்டார்.

அன்று, சேவியத் நாடு மட்டுமே, சமதர்ம நாடு. எப்பக்கம் திரும்பினும் தனியுடைமை நாடுகள்; பகை கக்கும் நாடுகள். அந்நிலையிலும் லெனின் கலங்கவில்லை. மாறாக, வரும் தலைமுறைகளுக்கு வெற்றி வழியைக் கட்டினார். அது என்ன?

சோவியத் நாடு மாறுபட்ட அமைப்புகளையுடைய நாடுகளோடு, சகவாழ்வு வாழ்தல்; அவற்றிற்கும் கூடிய வரையில் உதவி புரிதல்.

இத்தகைய முற்போக்குப் பாதையில் வீறுநடை போடுகிறது சோவியத் நாடு. இந்தியா போன்று, புதிதாக விடுதலை பெற்ற, அறுபத்தைந்து நாடுகளுக்கு, நவீன தொழில் உதவி, பொருளுதவி புரிகிறது. அவை தத்தம் கால்களில் நிற்கும் நிலையை உருவாக்கிக் கொடுக்கிறது.

அறுபத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்பு? உலகப் பரப்பில் ஆறில் ஒரு பகுதியில் சமதர்மப் பயிர் முளைத்தது. இன்று? மூன்றில் ஒரு பகுதியில் அப்பயிர் செழித்து வளர்கிறது. நாளை? மூன்றில் இரு பகுதிகளில் அது பரவும். அது காலத்தின் கட்டாயம். அதற்குப் பக்குவமாதல் அறிவுடைமை.

லெனினை நினைத்தல், போற்றுதல், முதற்கடமை, பின்பற்றுதல் தொடரட்டும்.

★★★

2. லெனினுடைய இளமைப் பருவம்

இருந்தார்கள்;கோடிகோடி மாந்தர் இருந்தார்கள்.இருக்கிறோம்; நானூறு கோடி மாந்தர் இருக்கிறோம்; இவர்களில் வாழ்ந்தவர் சிலரே; பிறர்க்காக வாழ்ந்தவர் சிலரே; வரலாற்று நாயகர்களாக வாழ்ந்தவர்கள் மிகச்சிலரே; அவர்களில் உயர்ந்தவர்,லெனின்.லெனின் சீரிய சிந்தனையாளர்; புரட்சி சிந்தனையாளர்; சாதனை யாளர்; ஈடு இணையற்ற சாதனையாளர். கருத்து மண்டலத்தில் உலவியது சமதர்மக்கோட்பாடு.அதற்குச் செயல் உருவம் தந்தவர் லெனின்.சமதர் மத்தை ஒரு பெருநாட்டின் வாழ்க்கை முறையாக்கிவிட்டவர்,லெனின். அதனால், அது பல நாடுகளுக்குப் பரவ, வித்திட்டவர் லெனின்.

லெனின் என்பது இயற்பெயரா? இல்லை; புனைப் பெயர். பெற்றோர் இட்ட பெயர்தான் என்ன? விளாடிமிர் இலியிச் உல்யனோவ் என்பது, பெற்றோர் இட்ட பெயர். பிற்காலத்தில், புரட்சிகரமான கட்டுரைகளுக்காக, அவரே புனைந்து கொண்ட பெயர், லெனின் என்பதாகும். மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியை ‘மகாத்மா’ என்று அடையாளம் காண்பதுபோல், ஈ.வெ. ராமசாமியை, பெரியார் என்று பரிவோடு அழைப்பதுபோல், உல்யனோவ்வை, லெனின் என்றே உலகம் அறியும்.லெனினுடைய முன்னோர் எவர்? தந்தையைப் பெற்ற பாட்டனார், நிக்கோலாய் உல்யனோவ் என்பவர். அவர் ஒரு பண்ணையில் அடிமையாக இருந்தவர். விடுதலை கிடைத்த பிறகு, அஸ்ட்ரகான் என்னும் நகரத்தில் குடியேறினார். அங்கே, தையற் தொழில் செய்தார். வறுமையில் வாடினார். வறுமையில் மறைந்தார். லெனினுடைய தந்தையின் பெயர் என்ன? இலியா நிகோலாவிச் என்பதாகும். அவர் பல திறமைகளைப் பெற்றவர். அதோடு அயராது உழைத்தவர். எனவே, பள்ளியிறுதியில் தேர்ச்சி பெற்றார். காசான் பல்கலைக் கழகத்தில் படித்துப்பட்டம் பெற்றார். பிறகு?

பென்சா, நிக்னிநவ் கிராட், நகரங்களில், பல பள்ளிகளில் கணக்கும், பௌதிகமும் கற்றுக் கொடுத்தார். பின்னர்? **1869** ஆம் ஆண்டில் அரசின் பள்ளிகளுக்கு ஆய்வாளரானார்; கால ஓட்டத்தில் இயக்குனரும் ஆனார். லெனினுடைய தந்தை எத்தகைய மனிதர்? பொதுமக்கள் பால் பரிவு கொண்ட மனிதர்; ஆர்வம் மிகுந்த கல்வியாளர். பொதுக் கல்வியை வளர்ப்பதில், சளையாது பாடுபட்டவர். அதோடு பொதுமக்களின் முன்னேற்றத்திற்காகவே, தனது உழைப்பையும், அறிவையும் முழுமையாகப் பயன்படுத்தினார்.

லெனினும் அவருடைய உடன் பிறப்புகளும் தந்தையை எப்படி மதித்தார்கள்? உயர்ந்த பண்பிற்கு எடுத்துக்காட்டாக, கல்விக்கு வழிகாட்டியாக, உழைப்பின் திருவுருவமாக, மாற்றறியாத நேர்மையாளராக, பெருந்தன்மையாளராக, மதித்தார்கள். அவர், தம் மக்களிடம் பொதுமக்கள்பால் பாசத்தை வளர்த்தவர். லெனினுடைய அன்னை எவரோ? என்ன பேரோ? அம்மாதர் திலகம், ஒரு மருத்துவரின் மகள். மரிய அலெக்சாண்டரோவ்னா உல்யனோ என்பது அவருடைய பெயர். அவரும் ஆற்றல் மிக்கவர். பலவகைத் திறமை பெற்றிருந்தார். அத்திறமைகளைப் பள்ளியில் கற்றாரா? இல்லை. வீட்டிலிருந்தபடியே கற்றுத் தேர்ந்தார். பிறகு? தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கான தேர்வு எழுதி, வெற்றி கண்டார். தன் கணவரைப் போன்று அவரும் ஓயாத உழைப்பாளி.

அம்மையார், பன்மொழி கற்றவர்; இசையறிவு நிரம்பியவர்; பியானோ வாசிக்கத் தெரிந்தவர். பின்னல் வேலையில் வல்லுனர். பரந்த அறிவும், இடையறா முயற்சியும் உடைய அம்மையார், உள்ள உறுதியில் உயர்ந்தவர். முணுகலை அறியாதவர். தம் மக்களைத் துணிவுடையவர் களாக, வளர்ப்பதில் பெரிதும் நாட்டம் காட்டினார். துருதுருவென்று துடிப்போடு இருந்த தம் மக்களுக்கு அவர், தோழராகவும் விளங்கினார். அம்மையார் பெற்ற பிள்ளைகள் அறுவர். அவர்களில் ஒல்கா என்னும் பெண் சிறுவயதில் இறந்துவிட்டார். மற்ற அய்வரும் புரட்சியில் பங்கு கொண்டார்கள். இதுவன்றோ நல்ல குடும்பம்?

அந்த அய்வர் பெயர்கள் என்ன? அலெக்சாண்டர், லெனின், டிமிட்ரி, அன்னா, மரியா என்பவாம். லெனின் எப்போது பிறந்தார்? 1870ஆம் ஆண்டு, எத் திங்கள்? ஏப்ரல் திங்கள். எத்தனையாம் நாள்? இருபத்திரெண்டாம் நாள். எங்கே பிறந்தார்? சிம்பிர்ஸ்க் என்னும் நகரில். அது வால்கா என்னும் பேராற்றின் கரையில் அமைந்தது. இப்போது உல்யனோவ்ஸ்க் என்னும் பெயரில் இருப்பது. லெனின், இயற்கையில் மதிநுட்பம் மிகுந்தவர். அயராத உழைப்பு, அவர் குருதியில் கலந்தது. எனவே, சில ஆண்டுகள் வீட்டிலேயே கல்வி கற்றார். ஒன்பது வயதில் சிம்பிர்ஸ்க் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார். படிப்பில் ஒளிவிட்டார். இலக்கியம், வரலாறு, மொழிகள், லெனினுக்கு அதிகம் பிடித்தமானவை. அவர் லத்தீன், கிரேக்கம் ஆகிய இரு மொழிகளையும் கற்றார். அவற்றோடு பல அய்ரோப்பிய மொழிகளை நன்றாகப் பேசவும் எழுதவும் கற்றுக்கொண்டார்.

குடும்பச் சூழல், பெற்றோரின் எடுத்துக்காட்டு, சமுதாயத்தின் நலிவு ஆகியவை, லெனினுடைய நோக்கையும் போக்கையும் புரட்சி வழியில் திருப்பின. பள்ளி ஆய்வாளரான தந்தை பக்கத்து ஊர்களுக்குச் சென்று வந்தார். அங்கு மக்கள் படும் அவதிகளை குடும்பத்திற்குச் சொல்லத் தவறமாட்டார். உழைக்கும் மக்கள் உணவிற்குப்படும்

பாட்டினை விவரிப்பார். நோய்நொடிகளால் துன்பப்படுவதை எடுத்துக் காட்டுவார். இவை, இளைஞர் லெனினுடைய நெஞ்சில் உறுத்தின. அவர்களிடம் பள்ளிப்பருவத்திலேயே, சமுதாயக் கொடுமைகளின்பால் வெறுப்பை வளர்த்தன; ஏற்றத்தாழ்வுகளை ஒழிக்கப் பாடுபடும் அவாவினைச் சுரக்க வைத்தன; அவா, உறுதியாக நிலைத்துவிட்டது. எல்லோரிடமும் நிலைத்து விட்டது.

இதனால், லெனின் தன்னுடைய படிப்பைக் கோட்டை விடவில்லை; கல்வியின்பால் கருத்தாயிருந்தார். எந்த அளவு அக்கறை? ஒவ்வோர் வகுப்பிலும் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார். 1887 ஆம் ஆண்டு பள்ளியிறுதித் தேர்விலும் முதல் இடம் பெற்றார். அதற்கான தங்கப் பதக்கத்தைப் பரிசாகப் பெற்றார். படிப்பில் முதல் மாணவராக விளங்கிய லெனின் நன்னடத்தையிலும் முதல் இடத்தில் ஒளிவிட்டார். பள்ளியிறுதித் தேர்வுகள், நெருங்கிக் கொண்டிருக்கும் போது லெனினுக்கு வேதனையான செய்தி ஒன்று வந்தது. அது என்ன? அண்ணன் அலெக்சாண்டர் கைது செய்யப்பட்டார், என்ற செய்தி. சில நாட்களுக்குப் பிறகு அலெக்சாண்டர் தூக்கிலிடப்பட்டார். எதற்காக? பீட்டர்ஸ்பர்க் பல்கலைக் கழக மாணவராகிய அவர், சிலரோடு சேர்ந்து சார் மன்னரை கொல்ல சதி செய்ததற்காக. அண்ணன் அலெக் சாண்டரிடம், லெனினுக்குப் பாசம் நிறைய; மதிப்பும் அதிகம். அவரோடு சமுதாயக் கேடுகளைப் பற்றி லெனின் கலந்துரையாடுவார்; அரசியல் அடக்குமுறைகளைப் பற்றி விவாதிப்பார். இருவரும் உள்ளந்திறந்து பேசுவர். இருப்பினும் அலெக்சாண்டர் தனது சதித்திட்டம்பற்றி வீட்டில் எவரிடமும் வாய் திறந்ததில்லை. அவ்வளவு இரகசியமாக, வன்முறைத் திட்டத்தை மறைத்து வைத்திருந்தார். அலெக்சாண்டர், வன்முறை இயக்கத்தைச் சேர்ந்தவர். அவர்கள் கோட்பாடு என்ன?

பொதுமக்கள் வெறும் 'முன்பளு பின்பளு' அவர்கள் கண்ணை மூடிக்கொண்டு வீரர்களைப் பின்பற்றும் போக்கினர். எனவே, சில சுறுசுறுப்பான, எதற்கும் துணிந்த, வன்முறையாளர்களே, சமுதாய அரசியல் கேடுகளுக்கு மாற்று காணமுடியும்; காணவேண்டும். மேற்கூறிய நம்பிக்கை கொண்டவர்கள் சிலர். உடைக்க முடியாத சதிகாரர்களாகச் செயல்பட வேண்டும். சார் மன்னர், அவருடைய அமைச்சர்கள், முதலியவர்கள் மீது, வன்முறை காட்ட வேண்டும். அவ்வழியில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுதல், கடமை. அப்படிக் கைப்பற்றினால் ஏதுமறியாக் குடியானவர்கள் கும்பல், புரட்சியாளர்களைப் பின்பற்றும். இக்கோட்பாட்டினை ஏற்றுக்கொண்ட, அலெக்சாண்டர் கொல்லப்பட்டது லெனினுக்கு வேதனை சொரியும் செய்தி. அதையும் தாங்கிக் கொண்டு, தேர்வில் சிதையாமல், நன்றாக எழுதி, முதல் இடத்தில் தேர்வு பெற்ற லெனின் அன்றோ, தலைசிறந்த மாணாக்கர்!

★★★

3. வெளியேற்றப்பட்ட மாணவன்

மதிநுட்பம் மிகுந்தவர் விளாடிமிர் இலியிச்; பள்ளியிறுதித் தேர்வில் முதல் மாணாக்கராகத் தேர்ச்சி பெற்றவர்; தங்கப் பதக்கம் பெற்றவர். அத்தகைய லெனினுக்கு பல்கலைக் கழகப் படிப்பில் நாட்டம் இருந்தது; இயற்கை.

ஆனால் சில சிக்கல்கள் குறுக்கிட்டன. அவை என்ன?

லெனினுடைய தந்தை இறந்து ஏறத்தாழ ஓராண்டு ஆகிவிட்டது. அதனால் குடும்ப வருவாய் குறைந்துவிட்டது. அரசு கொடுத்த குடும்பப் பென்சனோ கொஞ்சம்; தம்பி தங்கைகளின் பள்ளிப் படிப்பு முடியவில்லை. அவர்களின் செலவுகளுக்குப் பணம் கண்டுபிடிப்பதோடு லெனினுடைய படிப்பிற்கும் பணம் கண்டுபிடிக்க வேண்டும்.

உள்ள உறுதியும் பரிவும் கொண்ட தாய் சளைக்கவில்லை. சோர்வு கொள்ளவில்லை. லெனினுடைய நியாயமான படிப்பார்வத்தைப் புரிந்து கொண்டார். எப்படியாவது குடும்பத்தை சிக்கனமாக நடத்தி, லெனினுடைய, உயர் கல்விக்கு உதவ உறுதிபூண்டார்.

லெனின், பல்கலைக் கழகமொன்றில் சேர முயன்றார். தூக்கிலிடப்பட்ட அலெக்சாண்டரின் தம்பி, விளாடிமிருக்கு, பீட்டர்ஸ்பர்க் பல்கலைக் கழகத்தில் இடம்கிடைக்கவில்லை. தங்கப் பதக்கம் பெற்றும் இடம் கிடைக்கவில்லை. ஆனால், காசான் பல்கலைக் கழகம் இடம் கொடுத்தது.

லெனின் அதிற் சேர்ந்தார். 'என்ன படிப்பை மேற்கொண்டார்?' அரசியல், பொருளாதார, பாடங்களை எடுத்துக் கொண்டார். ஆழ்ந்து படித்துக்கொண்டிருந்தார். பாடங்களைக் கரைத்துக் குடித்துக் கொண்டிருந் தார் என்று சொல்லலாம். அந்நிலையில் பேரிடி வீழ்ந்தது.

சாரின் கொடுங்கோல் ஆட்சியில் அந்நாடு முழுவதுமே சிறைக் கூடம் போல் இருந்தது. எங்கெங்கும் உளவாளிகள். தெருக்களிலே உளவாளிகள்; பொதுக் கூட்டங்களிலே உளவாளிகள்; கல்வி நிலையங்களிலும் உளவாளிகள்; சார் மன்னரின் உளவாளிகளாக

ஆய்வாளர்கள்கூட செயல்பட நேர்ந்தது. அடக்குமுறை பெருகப் பெருக, எதிர்ப்பும் விரைந்து, ஊடுருவுதல் இயற்கை.

உயர்கல்வி பெற வந்த இளைஞர்கள், உரிமை உணர்வு பெறத் தொடங்கினார்கள். உரத்துக் குரல் எழுப்பத் தலைப்பட்டார்கள்.

காசான் பல்கலைக்கழக மாணவர்களும் இப்போக்கினை, மேற்கொண்டார்கள். ஓர்நாள், நடுப்பகல் பல்கலைக்கழக மண்டபத்தில் கூடினார்கள்.

கூட்டத்தலைவன் பேசினான்.

“தோழர்களே! சூளுரைப்போம்! ஒருவருக்கு ஒருவர் ஆதரவாக நிற்கச் சூளுரைப்போம். ஒன்றிணைந்து போராடுவோம். எதற்காகப் போராடுவோம்? உரிமை, சட்ட உரிமைகள், வாழ்வில் உண்மையாகும்படிப் போராடுவோம்.”

இப்படித் தொடங்கியதும் ஆய்வாளர் நுழைந்தார். கலைந்து போகச் சொன்னார். சட்டத்தின் பேரால் ஆணையிட்டார். மாணவர்கள் கேட்கவில்லை. மாறாக,

“வெளியேறு! ஒழி” என்று முழக்கமிட்டார்கள். பிறகு? பல்கலைக் கழகத் தலைவரே விரைந்து வந்தார். இதமாகப் பேச முயன்றார். மாணவர்கள் மயங்கவில்லை. பல்கலைக் கழகத் தலைவரிடம் விண்ணப்பமொன்றைக் கொடுத்தார்கள்.

“படமுடியாதினித் துயரம்; இரஷ்ஷிய வாழ்க்கை - மாணவர் வாழ்க்கை பொறுக்க முடியாத நிலைக்கு வந்து விட்டது” என்று அதில் கண்டிருந்தார்கள்.

“அந்த அவல நிலையை எதிர்க்கிறோம். அதற்கு அடையாளமாக வெளியேறுகிறோம். ஆகவே, மாணவர் சீட்டை திருப்பிக் கொடுத்து விடுகிறோம்” என்று முழங்கினார்கள்.

நொடிப்பொழுதில், மாணவர்கள் நுழைவுச் சீட்டுகளைத் திருப்பிக் கொடுத்தார்கள். ஒருவரா? இருவரா? தொண்ணூற்று ஒன்பது மாணவர்கள் அப்படிச் செய்தார்கள். அவர்களில் லெனினும் ஒருவர். ஆட்சி பேன் குத்திக் கொண்டிருக்குமா? இராது; விரைந்து செயல்பட்டது. லெனின், பல்கலைக் கழகத்திலிருந்து நீக்கப்பட்டார்.

அன்றிரவு, காவல்துறையினர், லெனினைக் கைது செய்தார்கள். தொலைவிலுள்ள கக்கூஷ்கினோ என்னும் சிற்றூருக்கு அனுப்பினார்கள். அங்கே லெனின், காவல்துறையின் கண்காணிப்பில் குடியிருக்க நேர்ந்தது.

லெனின் மனந்தளர்ந்தாரா? இல்லை. சோர்வு கொண்டாரா? இல்லை. இதையும் அதையும் எண்ணி எண்ணிப் பொழுதைப்

பாழாக்கினாரா? இல்லை. தந்தையை, அண்ணனை நினைந்து, நினைந்து, காலத்தைக் கழித்தாரா? இல்லை. பின் என்ன செய்தார்?

படித்தார்; படித்தார்; மேலும் மேலும் படித்தார். சட்டப் படிப்பில் மூழ்கினார்; பொருளியல் அரசியல் நூல்களைக் கற்றார். அதோடு, புரட்சிகரமான எழுத்தாளர்களின் நூல்களையும் படித்தார்.

லெனினுக்குப் பிடித்த எழுத்தாளர்களில் ஒருவர் செர்னிஷேவ்ஸ்கீ என்பவராவார். ஏன்? செர்னியின் எழுத்தில் உண்மை இருந்தது; புரட்சி மணம் வீசிற்று.

இரஷ்ஷிய சமுதாயத்தில், பொதுமக்கள் படும் அல்லல்களை செர்னி நன்றாகப் படம்பிடித்துக் காட்டினார். கோடிக்கணக்கான வர்கள் நலிந்து மெலிந்து வாடிக் கிடக்கிறார்கள். சார்கும் அதிகார வர்க்கமும், தொழிலதிபர்களும், பெருநிலப் பண்ணையாளர்களுமே ஆட்சி செய்கிறார்கள்; தங்கள் நலனுக்காகவே செய்கிறார்கள். இவற்றை நன்றாகப் படம்பிடித்துக் காட்டினார், செர்னி. அதோடு நின்றாரா?

புரட்சி செய்ய அழைத்தார். சமூகக் கொடுமைகளை ஒழிக்கப் புரட்சி செய்ய அழைத்தார். செர்னியின் கருத்துக்கள் லெனினைக் கவர்ந்தன. சிற்றூரில் சிறைப்பட்டிருந்த லெனின், படித்தவற்றை ஆழ்ந்து சிந்தித்தார். பலமுறை சிந்தித்தார்.

மார்க்சியக் கோட்பாடுகளை, ஏற்கெனவே, லெனின் படித்திருந்தார்.

சிலர்பால், செல்வம் மலையெனக் குவிகிறது. அதேநேரத்தில் கோடி கோடி மாந்தர் ஓட்டப்பராகிக் கொண்டிருக்கிறார்கள். இம்முரண்பாடு, முதலாளித்துவம் பெற்றெடுக்கும் தீய பிள்ளை. முரண்பாடு எப்படி தொலையும்? உழைக்கும் மக்கள் விழிப்படையும்போது; விழிப்பு போராட்ட உணர்வாக மாறும் போது; ஒன்றிணைந்த வர்க்கப் போராட்டத்தின் வழியாக, உழைக்கும் மக்கள் ஆட்சியைக் கைப்பற்றும்போது; பெற்ற ஆட்சியைக் கொண்டு, உற்பத்தி சாதனங்களை சமுதாய உடைமையாக்கும் போது; அவற்றை சமுதாய நலனுக்காகவே பயன்படுத்தும்போது; அதாவது சமதர்ம முறையைச் செயலாக்கும்போது, முரண்பாடு மறையும்.

லெனின், இக்கருத்துக்களைப் பற்றி சிந்தித்தார். ஆழ்ந்த சிந்தனைக்குப் பின் ஏற்றுக்கொண்டார்.

அக்கோட்பாடு செயல்பட வேண்டும்; விரைந்து செயல்பட வேண்டும். அதற்குத் தூண்டுகோலாக, நெம்புகோலாகத்தான் இருக்க வேண்டுமென்றும் உறுதியான முடிவுக்கு வந்தார்.

அடுத்து, லெனின் வழிமுறைப்பற்றி சிந்திக்கத் தொடங்கினார். எவ்வழி நல்வழி? வெற்றி வழி? இதைப்பற்றிச் சிந்தித்தார்.

அண்ணன் காட்டிய வழி, தியாக வழி, தியாகம் மட்டும் குறிக்கோளை எட்டிப்பிடிக்கப் போதுமா? போதாது. சரியான வழியில், பொழியப்படும் தியாகமே, வெற்றியைப் பிடித்து விடும்.

ஒரு மன்னரைக் கொன்றால் அடுத்த மன்னன். தலை நீட்டுவான். சில அதிகாரிகளைக் கொன்றாலும் பல அதிகாரிகளை போட்டி போட்டுக் கொண்டு வரலாம்.

ஆட்சி மாற்றத்திற்கு வன்முறை பயன்படாது. நடைமுறை மாற்றத்திற்கும் 'வீரர்கள்' வன்முறை போதாது. பின் என்ன தேவை?

பரவலான மக்கள் எழுச்சி வீறு கொண்ட உழைப்பாளிகளின் போராட்டம்; வர்க்க உணர்வுடைய பாட்டாளிகளின் போராட்டம். தனியுடைமை முறையைத் தகர்க்கும் குறிக்கோளைக் கொண்ட, பெரும் போராட்டம். இவையே சமுதாயத்தைத் தலைகீழாக மாற்றும்; எல்லாருக்கும் எல்லாம் கிடைக்கச் செய்யும்.

எனவே, உழைக்கும் மக்களை ஆயத்தம் செய்ய; சார் ஆட்சியையும், பணக்காரரர் ஏழை முறையையும் எதிர்ப்பதற்கு ஆயத்தம் செய்ய; வர்க்கப்போராட்டத்திற்கு ஆயத்தம் செய்ய, லெனின் முடிவு செய்தார்.

தனது அன்றாட வாழ்க்கைக்கான உழைப்பை மேற்கொள்ளவும் விரும்பினார். அதற்காக, சட்டப் படிப்பை முடிக்க விரும்பினார்; பட்டம் பெறத் துடித்தார். உரிய காலத்தில் காசான் பல்கலைக் கழகத்தில் மீண்டும் சேர விண்ணப்பித்தார். சேர்த்துக் கொள்ளப்பட்டாரா? இல்லை.

★★★

4. சைபீரிய சிறையிருப்பு

சேர்க்க முடியாது; எல்லா வகுப்புகளிலும் முதல் இடம் பெபற்றிருந்தும் சேர்க்க முடியாது; விளாடிமிர் இலியிச்சைச் சேர்க்க முடியாது. என்ன குறை? புரட்சிகரமான கருத்து கொண்டிருந்ததே.

லெனினுடைய தாயார் அமைச்சருக்கு முறையிட்டார். அமைச்சரும் கையை விரித்துவிட்டார்.

லெனினே அமைச்சருக்கு விண்ணப்பித்தார். அதுவும் பலிக்கவில்லை.

அறிவாளி, எதையும் சமாளித்து, நல்லதாக்கிக் கொள்வான். லெனின், பீட்டர்ஸ்பர்க் பல்கலைக் கழகத்திற்கு எழுதினார். தானே, வீட்டில் படித்து, தேர்வு எழுத, இசைவு கோரினார். ஒப்புதல் கிடைத்தது. அது லெனினுக்கு நன்மையாயிற்று. எப்படி?

பல்கலைக் கழகத்தில் சேர்ந்தால், நாற்பத்து எட்டு திங்கள் படித்த பிறகே தேர்வு எழுதலாம். வீட்டில் படித்த லெனின், பதினெட்டு திங்களில், எல்லாவற்றையும் படித்து முடித்து விட்டார்; பழுதறக் கற்றுவிட்டார்!

பீட்டர்ஸ்பர்க்கில் நடந்த தேர்வுக்குச் சென்றார். தேர்வாளர்கள், சட்டத்தில் புலிகள்; நுணுக்கங்களில் பழுத்த பழங்கள். அப்பேராசிரியர்கள் கேட்ட, கடினமான, கேள்விகளைக் கண்டு, லெனின் மிரளவில்லை. சரளமாக, தெளிவாக, சரியாக, விடைகொடுத்தார். மிக உயர்ந்த மதிப்பெண்களோடு தேர்ச்சி பெற்றார். இது, ஒருமித்த முடிவு.

அம்மகிழ்ச்சியை மூட, மேகமொன்று வந்தது. லெனினுடைய தங்கை, பீட்டர்ஸ்பர்க்கில் படித்துக் கொண்டிருந்த ஓல்கா, காய்ச்சலால் இறந்தார். லெனினுடைய தாயாருக்கு இடிமேல் இடி. லெனினுக்குந்தான்.

'ஏதவத்தைப் பட்டாலும் முத்தர் மனம் இருக்கும் மோனத்தே.' அதேபோல் லெனின், வர்க்கப் போராட்டத்திற்கு ஆயத்தம் செய்வதிலேயே குறியாக இருந்தார்.

தாயாருக்கு ஆறுதலாக, சிறிது காலம் சமாரா என்னும் நகரில், அவரோடு தங்கியிருந்தார். அங்கு வழக்குரைஞராகத் தொழில் நடத்தினார். ஏழைகளின் வழக்குரைஞராக ஒளிவிட்டார். லெனின், தொழில் ஈடுபாட்டோடு நின்றுவிடவில்லை. நாளும் புதியனவற்றைக் கற்றுக்கொண்டே இருந்தார். மேலும் மக்கள் நடுவில் மார்க்சீய கருத்துகளை இரகசியமாகப் பரப்பினார். பின்னர்?

தம்பி திமீத்ரியையும், தங்கை மரியாவையும் படிப்பிற்காக மாஸ்கோவிற்கு அனுப்பினார். தாயாரும் உடன் சென்றார். லெனின், பீட்டர்ஸ்பர்க்கிற்குச் சென்றார். வழக்குரைஞராகப் பணிபுரியத் தொடங்கினார்.

பீட்டர்ஸ்பர்க்கில், தொழிலாளர் வாழும் பகுதிகளில், மார்க்சீய கருத்துடையவர்கள் பலர் இருந்தனர். அவர்கள் ஆங்காங்கே போராட்டச் சங்கங்களை அமைத்திருந்தனர். லெனின் அவர்களோடு தொடர்பு கொண்டார்; ஒன்றிணைக்க முயன்றார்; பெரும்பாலும் வெற்றி கண்டார்.

லெனின், உழைக்கும் மக்களிடையே, அரசியல் உணர்வை, ஊட்டினார். துண்டுப் பிரசுரங்களைத் தானே எழுதினார், இரகசியமாக, பாட்டாளிகளிடம் பரவச் செய்தார். ஒருவர் படித்து முடித்ததும் அடுத்தவர் கைக்கு மாறும். இப்படிப் பலர் படித்து வீறுகொள்வார்கள்.

'அரசியல்உணர்வு உள்ள, தொழிலாளர்கள், அடிதடிப் போராட்டம் நடத்தக் கூடாது. வர்க்கப் போராட்டத்திற்கு ஆயத்தமாக வேண்டும்' இப்படிப் போதித்தார்.

இரகசிய நடவடிக்கைகளில், நதேழ்தா கன்ஸ்தன் தீனவ்னா க்ருப்ஸ்கயா என்னும் கன்னி, லெனினுக்கு உதவினார். அவருக்கு வேண்டிய தகவல்களைப் பொது நூலகத்திலிருந்து திரட்டி வந்து தருவாள். உளவாளிகள் பார்வை இருவர் மேலும் வீழ்ந்தது. சிலகாலம், எப்படியோ பிடிபடாமல் தப்பி வந்தார்கள். கடைசியில், லெனினைக் கைது செய்தார்கள். சிறையில் அடைத்தார்கள். கலங்கினார் இல்லை; புலம்பினார் இல்லை, லெனின். புரட்சி இலக்கியங்களைப் படிப்பதிலும் மூழ்கினார். ஏராளமான நூல்களை எடுத்து வந்து கொடுக்கச் செய்தார்.

வெளியில் இருந்த தோழர்களுக்குச் செய்திகளை அனுப்புவார். எப்படி? ரொட்டியின் மெதுவான பாகத்தைப் பிசைந்து, மைக்கூடு போல் செய்வார். அதில் பாலை ஊற்றி, அதைத் தொட்டு, அச்சிட்ட வரிகளுக்கிடையே எழுதி அனுப்புவார். நண்பர்கள் அப்பக்கங்களைச் சூடாக்குவார்கள். எழுத்துக்கள் தெரியும். இரகசியக் குறியீடுகள் வழியாகவும் ஆலோசனைகளை அனுப்புவார். விளைவு?

நெடுந்தொலைவில் உள்ள சைபீரியாவுக்குச் சென்று வாழும்படி தண்டிக்கப்பட்டார். அப்பணிப் பாலையில், ஆளரவம் ஆற்ற பாலையிலே ஷீஷென்ஸ் கொயே என்னும் சிற்றூரில், தனி வீட்டில் சிறைப்பட்டிருந்தார். அதுவும் அவருடைய உருக்கு உள்ளத்தைத் தாக்கவில்லை. வழக்கம்போல் படிப்பிலும், எழுத்திலும் காலத்தைச் செலவிட்டார். 'ருஷ்யாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி' என்னும் தலைப்பில் நூலொன்றை எழுதினார். லெனின், ஓராண்டு காலம் சைபீரியாவில் சிறையிலிருந்த பிறகு, க்ருப்ஸ்கயாவும் அத்தகைய தண்டனை பெற்று, அங்கு வந்து சேர்ந்தார். க்ருப்ஸ்கயாவின் தாயாரும் உடன் வந்தார்.

இனம் இனத்தோடே, சைபீரியச் சிறை தண்டனை பெற்ற க்ருப்ஸ்கயா லெனினோடு தங்க, அரசின் இசைவைப் பெற்று வந்தார். இருவரும் வாழ்க்கைத் துணைவர்கள் ஆயினர். லெனினுடைய பொதுத் தொண்டிற்கும், புரட்சித் தொண்டிற்கும் க்ருப்ஸ்கயா உற்ற துணை புரிந்தார். அதோடு, தானும் தனியாக வெளியீடுகளை ஆயத்தஞ் செய்தார். மாதர் நிலை, நலன்பற்றி, கல்வி பற்றி, க்ருப்ஸ்கயா தனிக்கவனஞ் செலுத்தினார்.

சைபீரியாவுக்கு அனுப்பப்பட்ட அரசியல் கைதிகளை, ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ள முடியாத தொலைவில். சிறைப்படுத்தியிருந்தார்கள். இருப்பினும் லெனின் பலரோடு இரகசியத் தொடர்பு கொண்டு ஊக்கப்படுத்தினார். மே தினத்தைத் தோழர்களோடு கொண்டாடினார். அப்பகுதி வாழ் ஏழை மக்களுக்கு ஆதரவாகச் செயல்பட்டார். கடைசியில்,

லெனினுடைய சைபீரியச் சிறைத்தண்டனை முடிந்தது. க்ருப்ஸ்கயாவின் தண்டனை முடியவில்லை. அந்நிலையில் க்ருப்ஸ்கயாவையும், அவரது தாயாரையும் சைபீரியாவில் விட்டுவிட்டு, லெனின் இரஷ்ஷியாவிற்குத் திரும்பினார். பஸ்கோவ் என்னும் சிறுநகரில் குடியேறினார்.

லெனின், சைபீரியாவிலும், திரும்பும் பயணத்திலும் ஒன்றைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தார். கட்சியை மறுமலர்ச்சி செய்ய வேண்டும். அதற்குத் துணையாகச் செய்தித்தாள் ஒன்றைத் தொடங்க வேண்டும். அதற்கு என்ன பெயரிடலாம்? 'இஸ்க்ரா' என்று பெயரிட முடிவு செய்திருந்தார். அப்பெயருக்குப் பொருள் என்ன? 'தீப்பொறி' என்பதாகும். சிறு பொறி பெருந்தீயாகும் என்பதில் லெனின் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார். அச் செய்தித்தாள் எப்படியிருக்க வேண்டும்? தலை முதல் அடிவரை எப்படியிருக்க வேண்டுமென்று, எண்ணிப் பார்த்து திட்டத்தோடு திரும்பி வந்தார்.

நண்பர்களோடு இஸ்க்ரா பற்றி கலந்து முடிவு செய்தார். அச்செய்தித்தாளை ஊரறிய வெளியிட முடியாது. இரகசிய

அச்சகத்தில் வெளியிட்டு இரகசியமாகவே பரப்ப வேண்டும். இரஷ்ஷியாவிலிருந்து இரகசியமாக வெளியிட முடியாது என்பதும் புலனாயிற்று. வெளிநாட்டில் அச்சிட்டு, மறைத்து வைத்த இரஷ்ஷியாவிற்குள் அனுப்புவதென்று முடிவு எடுத்தார்கள். அதன்படி செயல்பட்டார் லெனின்.

உடல்நலம் பற்றி வெளிநாடுகளில் தங்க அனுமதி கோரினார்; ஒப்புதல் கிடைத்தது.

இதற்கிடையில், லெனின் இரஷ்ஷியாவில், பல ஊர்களுக்குச் சென்றார். எவர் எவர் எவை பற்றி கட்டுரைகள் எழுதி அனுப்புவது என்று திட்டந்தீட்டினார். கட்டுரை எழுதி அனுப்ப சிலர் இசைந்தனர்.

இஸ்க்ரா கட்டுரைகளை எங்கே, எப்படி, எவர் பெறுவது? எவர் பரப்புவது? இவற்றைப் பற்றியும் நண்பர்களோடு கலந்து தக்க ஏற்பாடுகளைச் செய்தார்.

பிறகு ஜெர்மனியில் உள்ள லெப்சிக் நகரத்திற்குச் சென்றார். அங்கிருந்து இஸ்க்ராவை அச்சிட்டு அனுப்பினார். அது, அதிகாரிகள் கைகளில் சிக்காமல், இரஷ்ஷியாவிற்குள் வந்தது; தொழிலாளர் கைகளுக்குள் புகுந்தது. ஒளித்து வைத்துப் படித்தார்கள்; பலருக்கும் கொடுத்து படிக்கச் செய்தார்கள்.

★★★

5. நாடு கடந்த வாழ்க்கை

1905ஆம் ஆண்டு தொடங்கிய புரட்சி தணியவும் சொற்போர் வளர்ந்தது.

தொழிலாளர், ஆயுதப்போர் நடத்தியது சரிதானா? இதுபற்றி கருத்து வேறுபாடு ஒலித்தது.

அது, தேவையற்ற நடவடிக்கை என்றார்கள், மென்ஷிவிக்குகள். போல்ஷ்விக்குகளின் தலைவர் லெனினுடைய கருத்து என்ன?

ஆயுதந்தாங்கி தொழிலாளர்கள், போராட்டம் நடத்தியது தேவைப்பட்டது. அவர்கள் எழுச்சி பயனுள்ளதாக இருந்தது. பாட்டாளி வர்க்கம், நெருப்பில் புடம்போட்ட பொன்னாகியது. இவை, லெனினுடைய கருத்துகள். சரியான கருத்துகள் என்று காலம் மெய்ப்பித்து விட்டது.

வெற்றியைக் காணும் முன்பு, தணிந்த புரட்சி, அடக்குமுறைக்குத் தூபமிட்டது. பழிவாங்கும் படலம் தொடங்கிற்று. சிறை; சைபீரிய சிறை; மரணதண்டனை ஆகியவை கட்டவிழ்த்து விடப்பட்டன.

அடிக்கடி குடியிருப்பை மாற்றி வந்த லெனின், பின்லாந்தில் குடியிருக்க நேர்ந்தது. பீட்டர்ஸ்பர்க்கிற்கு அருகாமையில் தங்கியிருந்தார். அங்கிருந்தபடியே, போல்ஷ்விக் மையங்களோடு தொடர்பு கொண்டார், அவற்றை ஊக்குவித்தார். அதோடு **'பாட்டாளி'** என்னும் பத்திரிகையின் ஆசிரியராகவும் பணிபுரிந்தார். அது சட்டத்திற்கு புறம்பான பத்திரிகை.

எனவே, சாரின் அதிகாரிகள் ஆத்திரங்கொண்டார்கள். லெனினை எப்படியும் தேடிக் கண்டுபிடிக்க வேண்டுமென்று ஆணையிடப்பட்டது. அன்றைய பின்லாந்து சாரின் ஆட்சியின்கீழ் இருந்தது.

எனவே, லெனினை வெளிநாடுகளுக்கு அனுப்ப, போல்ஷ்விக்குகள் ஏற்பாடு செய்தார்கள். அதன்படி, லெனின் எல்சிங்கியிலிருந்து, இரயில் வழியாக, அபோ நகரத்துக்குச் சென்று கொண்டிருந்தார். அபோவிலிருந்து கப்பல் ஏறி, ஸ்வீடன் செல்வதாக ஏற்பாடு.

ஆனால், இரயில் பெட்டியில், உளவாளி இருப்பதைக் கண்டுவிட்டார், லெனின். அபோவில் இறங்கியதும் அரசியல்

காவலர்கள் தன்னைச் சிறைப்படுத்தி விடுவார்கள், என்பது புலப்பட்டது.

தப்பிவிட முடிவு செய்தார். இரயில் அபோவுக்கு பன்னிரெண்டு கிலோ மீட்டர் தொலைவில் ஓடிக்கொண்டிருந்தது. லெனின் வண்டியிலிருந்து குதித்தார். பனிப்பாளங்கள் காப்பாற்றின போலும்! நடந்தே, அபோ நகரஞ் சென்றார்.

அவர், அங்கு சேர்வதற்குள் ஸ்வீடனுக்குச் செல்லும் கப்பல் புறப்பட்டு விட்டது. உள்ளூர் தொடர்பானத் தோழர், இரு வலைஞர்களிடம் லெனினை ஒப்படைத்தார்கள். அவர்கள் என்ன செய்தார்கள்?

கடலோரம் செறிந்து கிடந்த, தீவுகளில் ஒன்றிற்கு அவரைத் தலைமறைவாக இட்டுச் சென்றார்கள். காரிருள் சூழ்ந்த இரவில், பனிமழையில், பனிப்பாளங்களின் மேல் நடத்திச் சென்றார்கள். கழிகளை ஊன்றி நோட்டம் பார்த்து நடந்த, அப்பயணம், மிக ஆபத்தானது. அம்மாவீரன் அதை ஏற்றுக்கொண்டு நடந்தார். ஓரிடத்தில் பனிப்பாளம் வெடித்து ஓர் புறமாகச் சாய்ந்தது. நொடியில் லெனின் கடலில் மூழ்கியிருப்பார். மின்னல் வேகத்தில், வலைஞர்களில் ஒருவர், கைநீட்டி லெனினைப் பிடித்து இழுத்துக் கொண்டார். வரலாற்று நாயகராம் லெனின் உயிர் பிழைத்தார். அப்புறம்?

தேடிச் சென்ற தீவை அடைந்தார்கள். அங்கே ஸ்வீடன் நாட்டுக் கப்பல் காத்திருந்தது. ஏன்? வழியிலிருந்த பனிக் குவியல்களை அடைத்து வழிவிடுவதில் ஓர் கப்பல் ஈடுபட்டிருந்தது. இந்த தாமதம் நல்லதாயிற்று. வலைஞர்கள், லெனினை ஸ்வீடன் செல்லும் கப்பலில் ஏற்றி விட்டார்கள். அவர், ஸ்டாக்கோம் போய்ச் சேர்ந்தார். க்ருப்ஸ்கயாவின் வருகைக்காகக் காத்திருந்தார். துணைவியார் வந்ததும் இருவருமாக, மீண்டும் ஜெனிவாவிற்குச் சென்றார்கள்.

லெனின் பல அய்ரோப்பிய நகரங்களுக்குச் சென்றார். மார்க்சீயத்தை விளக்கி உரையாற்றினார். ஓர் முறை ஸ்டாக் கோமில் போல்ஷ்விக்குகளிடையே உரையாற்றச் சென்றார். அங்கே லெனினுடைய தாயும், தங்கையும் வந்திருப்பதைக் கண்டு உளம் மகிழ்ந்தார். பத்துநாட்கள் அவர்களோடு அந்நகரில் தங்கியிருந்தார். பிறகு தாய், தாய்நாட்டிற்குத் திரும்பினார். மீண்டும் இருவரும் ஒருவரை ஒருவர் காணவில்லை. கொள்கையாளர் கொடுக்கும் விலை!

தாயை இரஷ்ஷியாவிற்கு அனுப்பிவிட்டு லெனினும், க்ருப்ஸ்கயாவும் பாரிசு நகரம் சென்றனர். அந்நகரிற்குப் பதினைந்து கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சிற்றூரில் தங்கினர். அவ்வூரின் பெயர் லோன்முமோ என்பதாகும். அப்போது பிரான்ஸ் நாட்டில் ஆயிரக்கணக்கான இரஷ்ஷியப் புரட்சியாளர்கள் குடியிருந்தார்கள்.

அவர்களுக்காக லெனின் பள்ளியொன்றை நடத்தினார். என்ன கற்றுக் கொடுத்தார்? மார்க்சீய கோட்பாடுகளைக் கற்றுத் தந்தார். நான்கு திங்கள் பாடங்கேட்பர்.

தெளிவும், உறுதியும், வழியும் பெற்று, தொண்டாற்ற தாயகம் திரும்பினார்கள்.

ஓர் ஞாயிற்றுக்கிழமை, பள்ளிக்குச் செல்லும் வழியில் லெனின், பிரஞ்சுத் தொழிலாளியைக் கண்டார். அவருடைய நலிந்த கோலத்தைக் கண்டார். அருகில் சீமாட்டி சொகுசாகக் குடைநிழலில் இருப்பதையும் கண்டார். தொழிலாளியின் மதிப்பீட்டையும் கேட்டார். என்ன மதிப்பீடு?

பணக்காரர்களையும், ஏழைகளையும் ஆண்டவன் படைத்திருக் கிறான். ஆகவே, இது முறையானதே என்பது தொழிலாளியின் முடிவு. அதாவது பலர் வாட, சிலர் மட்டுமே வாழ ஆண்டவன் கட்டளையிட்டுள்ளார். அதனால் அந்நிலை சரி என்பதாகும்.

தொழிலாளி மேலும் கூறினான். உலகைப் படைத்தவன் ஆண்டவன். அதைக் குறைகூற நாம் யார்? என்று.

அன்றைய பாடம் அதிலிருந்து தொடங்கிற்று. பாட சுருக்கம் என்ன?

"கடவுளே, கருணை காட்டு, என்று முணுமுணுக்கும், வேறு எதுவும் அறியாதிருக்கும், அந்தத் தொழிலாளி போன்ற மனிதன், எங்காவது புரட்சியின் பொருட்டு போராடுவானா?"

"மாட்டான், அப்படிப் பின்தங்கியிருப்பது புரட்சிக்கு உதவாது. ஆகவே, தொழிலாளர்கள் கற்க வேண்டும்; அவர்கள் கல்வித் தேர்ச்சியும் அறிவும் முற்போக்குச் சிந்தனையும் பெற்றிருக்க வேண்டும்; அரசியலை அவர்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்."

"கடவுளின் சட்டங்கள் நமக்கு ஒத்துவரா. பணக்காரர்களுக்குக் கல்தா கொடுத்து விட்டு, புதிய சமுதாயத்தை அமைக்க வேண்டும்."

லெனின் உழைக்கும் மக்களைச் சமதர்மப் புரட்சிக்கு ஆயத்தஞ் செய்து கொண்டிருக்கையில் உலகப்போர் மூண்டது. 1914ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் அது தொடங்கியது. அப்போது லெனின் போலந்து நாட்டின் சிற்றூராகிய பரோனில் இருந்தார். அந்நாடு, ஆஸ்திரியாவின் ஆட்சியில் இருந்தது. ஆஸ்திரிய அரசியல் காவலர்கள், போர் மூண்டதும் லெனினைக் கைது செய்துவிட்டார்கள். ஏன்? லெனின், இரஷ்ஷிய ஒற்றராக இருக்கலாமென்று அஞ்சினர்.

போர்க் காலத்தில் ஒற்றர்களுக்கு மரண தண்டனையும் கிடைக்கலாம். அந்த தண்டனையிலிருந்து லெனினுடைய

தோழர்கள் அவரைக் காப்பாற்றினார்கள். இரு வாரங்களுக்குப் பின் லெனின் சிறையிலிருந்து மீண்டார்.

முதல் உலகப் போரில் சேராத, சுவிட்சர்லாந்திற்கு லெனினும், க்ருப்ஸ்கயாவும் சென்றார்கள். அங்கு பெர்னில் தங்கினார்கள். அருகில் அடர்ந்த காடு இருந்தது. அதில், போல்ஷ்விக்குகள், இரகசியமாகக் கூடுவதற்கு, க்ருப்ஸ்கயா ஏற்பாடு செய்திருந்தார். குறித்த நேரத்தில், லெனின் அங்கு போய்ச் சேர்ந்தார். தோழர்களிடம் பேசினார். போர் எதிர்ப்புப் போருக்கு அவர்களை ஊக்குவித்தார். ஏன்? லெனின் சொற்களையே படிப்போம்.

'ருஷ்ய மக்கள் மீதும் மற்ற நாடுகளின் மக்கள் மீதும் போர் என்னும் திடீர் விபத்து சுமந்திருக்கிறது. போரால் யாருக்கு இலாபம்? முதலாளிகளுக்கு மட்டுமே. போரில், முதலாளிகள், கோடிகோடியாக பணம் குவிப்பார்கள்.'

'முதலாளிகள், மேலும் மேலும் இலாபம் பெறும் நோக்கத்துடன் புதிய புதிய நாடுகளைக் கைப்பற்றப் போட்டியிடுகிறார்கள்.'

'படை வீரர்களையும், தொழிலாளர்களையும் தாய் நாட்டைக் காக்கப் போரிடுங்கள் என்று கூறி ஏமாற்றுகிறார்கள். உண்மையில், இது தாய்நாட்டைக் காப்பது அல்ல. முதலாளிகளின் இலாபங்களைக் காப்பதே ஆகும்.'

'படை வீரர்களே! தொழிலாளர்களே! குடியானவர்களே! உங்கள் கைகளில் போர்க் கருவிகள் கிடைத்துள்ளன. எல்லா நாடுகளையும் சேர்ந்த படை வீரர்களே, பாட்டாளிகளே, உங்கள் போர்க் கருவிகளை உங்கள் அரசர்களுக்கும், முதலாளிகளுக்கும் எதிராக திருப்புங்கள். புரட்சி செய்யுங்கள். நியாயம் அற்ற போர் ஒழிக; போர் எதிர்ப்புப் போர் நடத்துவோம்.'

போல்ஷ்விக்குகள் இப்புரட்சிக் கருத்தைப் பரப்பினார்கள். படை வீரர்களின், தொழிலாளர்களின் காதுகளில் இவை மீண்டும் மீண்டும் ஒலித்தன. பிறகு?

ஜூரிக் நகருக்குச் சென்றார்கள். அங்குள்ள நல்ல நூலகத்தில் படிப்பதில், லெனின் மூழ்கினார். ஏகாதிபத்தியம் என்னும் நூலை எழுதுவதில் முனைந்திருந்தார். அப்படியிருக்கையில், **1917** ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் இரஷ்ஷியாவில் மீண்டும் புரட்சி வெடித்தது. அச்செய்தியைக் கேட்டு குதூகலித்தார் லெனின். இரஷ்ஷிய போல்ஷ்விக்குகளோடு தொடர்பு கொண்டார். புரட்சிப் போக்குகளை அப்போதைக்கப்போது அறிந்தார். வழிகாட்டல் களைக் கொடுத்தார். தாயகம் திரும்பத் துடித்தார்.

★★★

6. புரட்சியின் மின்னல்கள்

தாய்நாட்டிற்குச் செல்லத் துடித்த லெனினுக்கு சுவிட்சர்லாந்து நண்பர்கள் உதவி புரிந்தார்கள். லெனினும் அவரோடு முப்பது, நாடு கடந்த ருஷ்யர்களும் இரஷ்ஷியா செல்ல அனுமதிச் சீட்டுகள் பெற்றார்கள்.

இரண்டு மணிகளில் ஆயத்தமானார்கள். ஜூரிக்கிலிருந்து பெர்ன் நகரம் சேர்ந்தார்கள். அங்கிருந்து இரயில் வழியாக ஜெர்மனியைக் கடந்தார்கள். பால்டிக் கடல் வழியே சரக்குக் கப்பலில் சுவீடன் போய்ச் சேர்ந்தார்கள். அடுத்து, பின்லாந்திற்கு நீண்ட பயணம். அங்கிருந்து பீட்டர்ஸ்பர்க் வந்தடைந்தார்கள். நடுநிசி; பனிமழை. இருந்தால் என்ன?

தாய்நாடு திரும்பும் லெனின் தம்பதியரை வரவேற்கப் பெருங்கூட்டம். தொழிலாளர், செங்காவற் படையினர், கடற் படையினர் திரண்டிருந்தார்கள். பிளாட்பாரத்தில் மட்டுமா? இல்லை. வெளியே உள்ள சதுக்கத்திலும் குழுமியிருந்தார்கள். எள் போட்டால் கீழே விழாதபடி மக்கள் நெரிசல்.

முதலில் படையின் மரியாதை அணிவகுப்பு. அது முடிந்தது. லெனின் சதுக்கத்திற்கு வந்தார். கவச மோட்டார் காத்திருந்தது.

'லெனின் நீடூழி வாழ்க, போர் ஒழிக, புரட்சி நீடூழி வாழ்க' - ஆயிரமாயிரம் குரல்கள் இப்படி ஒலித்தன. பிறகு?

லெனினைக் கவசமோட்டார்மேல் ஏற்றி விட்டார்கள்.

மக்கள் கடலைக் கண்ட லெனின், "நீங்கள் புரட்சி செய்து, சாரை அகற்றி விட்டீர்கள். ஆனால் ஆட்சி அதிகாரத்தை முதலாளிகள் கைப்பற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நம்மை ஆள விரும்புகிறார்கள்.

நமக்கோ உழைப்பாளிகளின் ஆட்சி வேண்டும். எட்டு மணி நேர வேலை நாள் வேண்டும்.

"நிலம் குடியானவர்களுக்கு,
உணவு பசித்தவர்களுக்கு.

சமாதானம் மக்களுக்கு,
நமக்கு வேண்டியது -
சோஷலிசப் புரட்சி”

இப்படி முழங்கினார் லெனின்.

வழிநெடுகிலும் மக்கள் திரண்டிருந்தார்கள். லெனினை வரவேற்று வாழ்த்தினார்கள். லெனின் வீடு போய்ச்சேர நெடுநேரமாகிவிட்டது.

ஒருமணிநேரம் உறங்கியிருப்பார்; அதற்குமேல் உறக்கம் வரவில்லை. கண் விழித்தார். தாயின் நாற்காலியைக் கண்டார். அவரின் நினைவு வந்தது. மறைந்த அன்னை சொன்ன விறுவிறுப்பான கதைகள் எத்தனை! ஒரு பிள்ளை தூக்கு மேடையில்; ஒருவன் சிறையில்; ஒருவன் சைபீரியாவில். எத்தனை சிறைப் பறவைகளைப் பெற்றாயம்மா! அன்பு அம்மா! புது வாழ்வு மலரும் வரை, நீ வாழ்ந்திருக்கவில்லையே! இப்படி வேதனை பொங்கிற்று.

லெனின், கல்லறைக்குப் புறப்பட்டார். அன்னையின் கல்லறையைக் கண்டார்; தலை வணங்கினார்; தங்கை ஒல்காவின் கல்லறையும் பக்கத்தில், அவளையும் நினைந்து உருகினார்.

கடமை அழைத்தது. புறப்பட்டார்; போல்ஷ்விக்குகளின் கூட்டத்திற்குச் சென்றார். அங்கே ஆற்ற வேண்டிய உரையை, இரயில் பயணத்தில் ஆயத்தஞ் செய்து வைத்திருந்தார். அவ்வுரையின் சாரம் என்ன?

‘தற்காலிக ஆட்சி, அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளது. அந்த ஆட்சியில் எவர் உறுப்பினர்கள்? நிலப்பிரபுக்களும், முதலாளிகளும், அவர்கள் அக்கறையெல்லாம் தங்கள் செல்வத்தைப்பற்றியே.’

‘ஆகவே போல்ஷ்விக்குகள் தற்காலிக ஆட்சியை ஆதரிக்கக் கூடாது. மாறாக, குடியானவர்கள் தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவியத்துகளையே ஆதரிப்போம்.’

சோவியத்துகளைப் பலப்படுத்துவோம். அவற்றின் உதவியுடன் பண்ணையாளர்களிடமிருந்து நிலத்தையும், முதலாளிகளிடமிருந்து தொழிற்சாலைகளையும் பறித்துக் கொள்ள வேண்டும். நிலமும், தொழிற்சாலைகளும் எல்லா மக்களுக்கும் உடைமையாகிவிடும். அதோடு போருக்கும் முடிவு கட்டிவிடுவோம்.

லெனின், புதியதோர் உலகஞ் செய்ய, திட்டத்தை அறிவித்து விட்டார். அதை ஆதரித்து நாள்தோறும் பிராவ்தாவில் கட்டுரை எழுதினார். அவைகள் பாட்டாளிகளிடையே பரபரப்பை ஊட்டியது. அவர்கள் போல்ஷ்விக்குகளை ஆதரிக்க முற்பட்டார்கள். திரும்பிய பக்கமெல்லாம் கிளர்ச்சியின் வாடை. ஆட்சி சும்மா இருந்ததா? இல்லை. என்ன செய்தது?

"லெனினை சட்ட விரோதி" என்று அறிவித்து விட்டது. அப்படியென்றால் எவன் வேண்டுமானாலும் லெனினைக் கொல்லலாம். அப்படிச் செய்தவர்மேல் வழக்குப் போடாது என்பது பொருள். போல்ஷ்விக் மையக்குழு வரவிருக்கும் ஆபத்தை மோப்பம் பிடித்துவிட்டது. புரட்சிக்காரர்கள் வேட்டையாடப்படுவார்கள்; அதற்காக வேவு பார்த்தல் பெருகும். சிறைக் கதவுகள் அடிக்கடி திறக்கும். அதற்குமுன் லெனின் ஒளிந்து கொள்ள வேண்டும் என்று மையக்குழு முடிவு செய்தது.

அப்படி ஒளிந்து கொள்வதற்கான ஏற்பாட்டை மையக் குழுவே செய்தது. நம்பிக்கைக்குரிய தொழிலாளி யெமெல்யானவ் இடம் இப்பொறுப்பைக் கொடுத்தார்கள்.

லெனின் பின்லாந்து குடியானவர் வேடம் பூண்டார். லெனின் தாடியை மழித்துவிட்டார். மீசையைக் கத்தரித்து விட்டிருந்தார். நாட்டுப்புறச் சட்டையும், கோட்டும் போட்டுக் கொண்டார். புல்லறுக்கும் தொழிலாளி வேடத்தில், லெனினை யெமெல்யானவ் ரஸ்லீவ் ஏரிக்கரையின் ஓரத்திலிருந்த குடிசையொன்றில் குடியேற்றினார்; குடிசையின் கூரைமேல், புல்லறுக்கும் அரிவாள் செருகி வைக்கப்பட்டது. அடுத்துள்ள புல்வெளியை யெமெல்யானவ் குத்தகைக்கு எடுத்திருந்தார். அதில் புல்லறுத்தல் லெனினுடைய வேலையென்பதாக நடிப்பு.

பின்லாந்துக்கார வேடத்தில் இருக்கும் லெனினிடம் இரஷ்ஷியர்கள் பேச்சுக் கொடுத்தால் இரஷ்ஷிய மொழி தெரியாதவர்போல் சாடை காட்ட வேண்டுமென்பது ஏற்பாடு. அப்படியே லெனின் நடித்தார்.

லெனினுக்கு நம்பிக்கையான தோழர் வழியாக ஒருவேளை உணவு வரும். அதோடு எல்லாச் செய்தித் தாள்களும் கொண்டுவந்து கொடுக்கப்படும்.

லெனின் எழுதுவதற்கு என்ன ஏற்பாடு செய்திருந்தார்? அடுத்திருந்த புதருக்குப் பின்னால் இரண்டு வெட்டுக் கட்டைகளைப் போட்டிருந்தார்கள். ஒன்று குட்டையானது. அது உட்காருவதற்கானது. மற்றொன்று உயரமான வெட்டுக்கட்டை. அது மேசையாகப் பயன்பட்டது.

இரஷ்ஷியக் காவல் துறையிடமிருந்து தப்பிவிட்ட லெனின் அக்குடிசையில் கொசுக்கடியால் தொல்லைப்பட்டார். மழை கொட்டக் கொட்ட, உள்ளே அடைப்பட்டுக் கிடக்க நேரும். தேனீர் கொதிக்க வைத்துக் குடிக்கவும் முடியாது.

இத்துன்பங்கள் லெனினுடைய உறுதியைக் குலைக்கவில்லை. அந்நிலையிலும் கட்டுரைகள் எழுதினார்.

அவ்வமயம், பீட்டர்ஸ்பர்க்கில், போல்ஷ்விக்குகளின் ஆறாவது காங்கிரசு நடந்தது. நம்பிக்கையானவர்கள், யாருமறியாதவண்ணம், வந்து லெனினுடைய ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டு சென்றார்கள். லெனினுடைய ஆலோசனை என்ன?

ஆயுதந்தாங்கிய எழுச்சிக்கு ஆயத்தஞ் செய்ய வேண்டும். பாட்டாளிகளும் ஏழைக் குடியானவர்களும் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்பதாகும்.

அதை ஏற்றுக் கொண்ட காங்கிரஸ், இந்தப் போராட்டத்திற்கு நம் கட்சி வீசிப் பறக்கும் கொடி ஏந்திச் செல்கிறது. பழைய உலகுக்குச் சாவு மணி அடிக்கப் போகிறது என்று மாநாட்டு அறிக்கையில் சேர்த்தது.

தற்காலிக ஆட்சி, எப்படியும் லெனினைப் பிடித்தாக வேண்டும் என்று முடிவு செய்து, அவரைப் பிடிக்க நூற்றுக்கணக்கான உளவாளிகளை அனுப்பியது.

இச்செய்தியை அறிந்த போல்ஷ்விக் மையக்குழு, லெனினைத் தப்புவிக்க முடிவு செய்தது; விரைந்து செயல்பட்டது.

யெமெல்யானவ்வழியாகஓர் தந்திரம்கையாளப்பட்டது. ஆயுதத் தொழிற்சாலையில் வேலை செய்த பல தொழிலாளர், அடுத்துள்ள பின்லாந்தில் குடியிருந்தார்கள். அவர்கள், அங்கு, அன்றாடம் போய்வர, அனுமதிச்சீட்டு உண்டு. அதைத் தொழிற்சாலை நிர்வாகத் தலைவர் வழங்குவார். அவருடைய மேசைமேல், வெற்று அனுமதிச் சீட்டுகள் இருக்கும். இது யெமெல்யானவுக்குத் தெரியும். எனவே, அதிகாலையில், நிர்வாகத் தலைவரைக் காணப்போகும் சாக்கில் யெமெல்யானவ் அவ்வறைக்குச் சென்றார். வெற்றுச்சீட்டு ஒன்றை எடுத்துச் சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டு வெளியேறினார்.

லெனின், "கன்ஸ்தன்தீன் பெத்ரோவிச் இவனோவ்" என்னும் மாற்றுப் பெயரைக் கொண்டார். தாடி மீசைகளை மழுங்கச் சிரைத்துவிட்டார். புருவங்களுக்குச் சாயம் போட்டுக் கொண்டார்.

போல்ஷ்விக் இரயில் ஓட்டி ஒருவர் உதவியால், லெனின் எஞ்சினில் பயணம் செய்து பின்லாந்துக்கு தப்பிப் போய்விட்டார்.

★★★

7. புரட்சியின் தொடக்கம்,

புகைவண்டி எஞ்சினில், கரி தள்ளுவோனாக, நடித்துக் கொண்டு, லெனின். பின்லாந்தின் தலைநகரமாகிய எல்சிங்குக்குப் போய்ச் சேர்ந்தார்.

'ஒளியப்போய், தலையாரி வீட்டில் ஒளிந்தாற்போல்' என்பது தமிழ்ப் பழமொழி. அப்படி ஒளிதல் ஆபத்து என்பது பொருள், ஏன்? தலையாரி காட்டிக் கொடுத்து விடக்கூடும்.

லெனின் எவர் வீட்டில் ஒளிந்தார்? எல்சிங்கியின், காவல் துறையின் தலைமை அதிகாரி வீட்டில் அவர் பெயர் என்ன? ரோவியோ என்பதாகும். என்ன வேடத்தில் தங்கியிருந்தார்? பாதிரியார் வேடத்தில் அங்கிருந்தார். அதற்குப் பொருத்தமான ஒப்பனை செய்து கொண்டிருந்தார்.

ரோவியோ ஓர் இளைஞர்; போல்ஷ்விக்; அப்பகுதி மக்கள், அவரை மக்கள் காவற்படைத் தலைவராகத் தேர்ந்தெடுத் திருந்தார்கள். அவர் துணிந்து லெனினைத் தன் வீட்டில் மறைத்து வைத்திருந்தார். எல்சிங்கியிலுள்ள லெனினோடு இரஷ்ஷிய போல்ஷ்விக்குகள் தொடர்பு கொள்ள உதவினார். லெனினுக்கு நேரே, அஞ்சல் வழிக் கடிதம் வருவதில்லை. இரயில் அஞ்சல் துறை ஊழியர் வழியாக வரும்; போகும். அவ்வூழியரிடமிருந்து கடிதத்தைப் பெற்று வருவது, ரோவியோ. லெனின் அனுப்பும் கடிதங்களைக் கொண்டுபோய் அஞ்சல் ஊழியர் வழியாக அனுப்பி வைப்பதும் ரோவியோ.

ரோவியோவை, பின்லாந்தின் ஆளுநர் கூப்பிட்டு அனுப்பினார்.

லெனின், பின்லாந்தில் மறைந்திருக்க வேண்டுமென்று, இரஷ்ஷிய ஆட்சி கருதுகிறது; அவரை எப்படியும் தேடிக் கண்டுபிடிக்க வேண்டுமென்று கண்டிப்பாகக் கூறினார். ரோவியோ அப்படியே செய்வதாகக் கூறிவிட்டு வந்தார். விடை கொடுத்து அனுப்பும் போது,

'லெனினைப் பிடித்துக் கொடுத்தால் தக்க பரிசு கிடைக்கு' மென்று ஆசை காட்டி அனுப்பினார்.

அந்தப் போல்ஷ்விக் ரோவியோவோ ஆளுநரின் கண்டிப்புக்கும் அஞ்சவில்லை; ஆசை காட்டியதற்கும் சபலப்படவில்லை.

மாறாக, பின்லாந்திற்கும், இரஷ்ஷியாவிற்கும் எல்லையில் இருந்த வீபர்க் கிராமத்தில், பாதிரி வேட லெனின் குடியேற, உதவினார். இரஷ்ஷியாவோடு இடையறாத தொடர்பு கொள்ள உதவினார்.

இரஷ்ஷிய நிலை அனுகூலமாக மாறும் வேளை. லெனின் அங்கு செல்வதற்கு ரோவியோ உதவினார். எப்படித் திரும்பிப் போவார்?

முன்பு வந்த அதே எஞ்சின் எண் 293இல், கரி தள்ளுவோர் வேடத்தில், திரும்பிச் சென்றார். முன்பு இரயில் ஏறிய அதே உதேவ்னயா, இரயில் நிலையத்தில் இறங்கினார். பத்துக்கல் வெட்ட வெளியில், நடந்தார். செர்தபோல்ஸ்கயா என்னும் ஊரில் குறிப்பிட்ட இடத்தைச் சேர்ந்தார். அங்கே க்ரூப்ஸ்கயா லெனினுக்காகக் காத்திருந்தார். அவ்வூரில் உளவாளிகள் நிறைந்திருந்தார்கள். ஆகவே, போல்ஷ்விக் மையக்குழு உறுப்பினர்களுக்குக்கூட லெனின் மறைந்திருக்கும் இடத்தை அறிவிக்கவில்லை. தொடர்பு ஆள் ராஹியா, க்ரூப்ஸ்கயா இருவர் மட்டுமே, அந்த இரகசியத்தை அறிந்திருந்தனர். பிறகு?

1917 அக்டோபர் திங்களில் ஓர் இரவு, ராஹியா லெனினை மாறுவேடத்தில் அழைத்துச் சென்றார். எவ்விடத்திற்கு?

போல்ஷ்விக் கட்சியின் மையக்குழுக் கூட்டத்திற்கு, இரகசியமாக அங்கு போய்ச் சேர்ந்தார் லெனின்.

அப்போது பீட்டர்ஸ்பர்க் நகரின் நிலை என்ன? ரொட்டிக்கும் பஞ்சம். இரவு முழுவதும், மாதர், மூடிக்கிடந்த ரொட்டிக் கடைகளுக்கு முன்பு, நீண்ட வரிசைகளில் காத்துக் கிடந்தார்கள். இந்நிலையே நாடு முழுவதிலும்.

தொழிற்சாலைகளை முதலாளிகள் மூடிக் கொண்டிருந் தார்கள். தொழிலாளர்கள் வேலையின்றி அலைந்தார்கள்.

உலகப்போர் தொடர்ந்து நடந்து வந்தது. இரஷ்ஷிய வீரர்கள், போர்க்களங்களில், மடிந்து கொண்டே இருந்தார்கள். இதனால் பொதுமக்களிடையே மனக்குமுறல் பெருகிப் பரவியிருந்தது.

அந்நிலையில் போல்ஷ்விக் மையக்குழு, பிறர் அறியாதபடி கூடிற்று. லெனின், அக்குழுவின் முன் நேரில் வைத்த திட்டம் என்ன?

"இனியும் காத்திருக்காமல், ஆயுதந் தாங்கிய புரட்சி செய்ய வேண்டும். அதன் வழியாக ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும்"

"அதற்காக, பல்வேறு பகுதிகளுக்கும் நகரங்களுக்கும் ஆற்றல் மிக்க செயல் வீரர்களை அனுப்ப வேண்டும். அவர்கள்,

ஆங்காங்குள்ள, தொழிலாளர்களோடு, தொடர்பு கொள்ள வேண்டும். அவர்களை ஊக்கப்படுத்தி, செங்காவற் படைக்குக் கருவிகள் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்."

"படை வீரர்களை, தொழிலாளர்களின் எழுச்சிக்கு ஆதரவாகப் பக்குவப்படுத்த வேண்டும். அதைச் செய்ய ஏற்ற அறிவாளியை ஒவ்வோர் பிரிவுகளும் நியமிக்க வேண்டும்."

"எந்தெந்த செங்காவற் படை எங்கெங்கே செல்லும்? இதைத் திட்டவட்டமாக வரையறை செய்யவும், அது ஒருங்கிணைந்த திட்டமாக இருக்க வேண்டும்."

"மக்கள் எழுச்சியைத் தலைமை தாங்கி, நடத்திச் செல்ல, இராணுவப் புரட்சிக் குழுவை நிறுவ வேண்டும். அக்குழு, போராட்டம் தொடங்கும் நேரத்தை முன்கூட்டியே முடிவு செய்யும்."

லெனினுடைய திட்டத்தை மையக்குழு ஏற்றுக் கொண்டது. ஆனால், இருவர் மட்டும் எதிர்த்தார்கள். அவர்கள் பெயர்கள் சினோவியேவும், காமினெவும் ஆகும். அவர்கள் வாதம் என்ன?

"தொழிலாளி வர்க்கம் அரசை நடத்த வல்லதா? இல்லை இது அவர்கள் வாதம். இருவரும் நாவன்மை படைத்தவர்கள். இருவரும் எதிர்த்து வாதிட்டும் மற்றவர்கள் மயங்கவில்லை; லெனினை ஆதரித்தார்கள்."

அந்நிலையில், அவ்விருவரும் சேர்ந்து திட்டத்தை முழுமையாக அம்பலப்படுத்தி விட்டார்கள். தாங்கள் போராட்டத்தை எதிர்ப்பதாகவும், நாடறிய வெளியிட்டார்கள். முதுகில் குத்திய இந்நிகழ்ச்சி, லெனினுடைய உறுதியைக் குலைக்கவில்லை. போராட்டத்திற்கான ஆயத்தங்களைச் செய்வதில் மையக்குழு முனைந்தது.

பீட்டர்ஸ்பர்க்கில் ஸ்மோல்னீ மாளிகை என்னும் இடத்தில் அந்நகர சோவியத் (ஆட்சி மன்றம்) அமைக்கப்பட்டது. இராணுவப் புரட்சிக் குழுவின் அலுவலகம் அங்கே உருவாயிற்று.

புரட்சிக் குழு எல்லா தொழிற்சாலைகளோடும் தொடர்பு கொண்டது. ஒவ்வொன்றிலும் செங்காவற் படையை நிறுவிற்று. பீட்டர்ஸ்பர்க்கில் இருபதாயிரம் தொழிலாளர்கள் ஆயுதம் தாங்க ஆயத்தமானார்கள்.

கப்பற்படையோடும் புரட்சிக்குழு தொடர்பு கொண்டது. அதையும் போராட்டத்திற்கு ஆயத்தப்படுத்தியது. எல்லோரும் போர்க்குரலுக்காகத் துடிப்போடு காத்திருந்தார்கள். தரைப் படையின் முழுப்பட்டாளங்கள், புரட்சிக் குழுவின் பக்கம் வந்துவிட்டன. தற்காலிக அரசும் மளமளவென்று எதிர் நடவடிக்கையில் இறங்கிற்று.

படைவீரர்களைத் திரட்டி பீட்டர்ஸ்பர்க் நகரைச் சுற்றி காவல் போட்டது. தொழிலாளர் ஆயுதங்கள் ஏந்திச் செல்லக் கூடாதென்று தடைவிதித்தது. லெனினையும், எல்லா மையக்குழு உறுப்பினர் களையும் உடனடி கைதுசெய்து சிறையிலிட ஆணையிட்டது.

மையக்குழுவின் வழிகாட்டலின்படி அப்போதும் லெனின் ஒளிந்திருந்தார். எனினும் புரட்சிக் குழுவோடு அப்போதைக்கப் போது தொடர்புகொள்ள ஏற்பாடு செய்திருந்தார்கள். அதைப் பயன்படுத்திக் கொண்டார். அவருடைய ஆலோசனைப்படி 1917 அக்டோபர் 25ஆம் நாள், ஸ்மோல்னீயில் சோவியத்துகளின் இரண்டாவது காங்கிரசு கூட ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்கு முன் நாள் மாலை, லெனின் மையக்குழுவிற்கு ஓர் கடிதத்தை இரகசியமாக அனுப்பி வைத்தார்.

“காலதாமதத்திற்கு இடமளிக்காத அளவு, நெருக்கடி வந்துள்ளது. இனிமேல் எழுச்சி தொடங்கத் தாமதிப்பது. மெய்யாகவே, சாவுக்குச் சமம் என்பது தெளிவு. இன்று நாம் உறுதியான நடவடிக்கை எடுக்காவிட்டால் வரலாறு நம்மை மன்னிக்காது. இன்று கடைசியான, முடிவான தருணம்.”

“இன்றே செயல்பட வேண்டும், தற்காலிக ஆட்சியைக் கவிழ்க்க வேண்டும். ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும்.”

இப்படி எழுதி அனுப்பியபின் சில மணித்துளிகளில், ராஹியா, லெனினிடம் வந்தார். நகரில் கொந்தளிப்பு தொடங்கி விட்டதைக் கூறினார். பாலங்களைப் பிரித்து விட தற்காலிக அரசு ஆணையிட்டது. ஒரு பாலத்தை மட்டுமே அப்படிச் செய்ய முடிந்தது. அதற்குள் செங்காவற்படை வந்து, அத்தகைய நடவடிக்கையைத் தடுத்து விட்டது.

இங்கும் அங்கும் வேட்டு ஒலி; துப்பாக்கிச் சூடுகள்; செங்காவற் படையினர் சுற்றி வருதல்; இந்நிலவரங்களைக் கேட்டார் லெனின்.

மறுநொடி, லெனின் நரைத்த டோப்பாவை எடுத்து அணிந்து கொண்டார். கிழிந்த கோட்டை மாட்டிக் கொண்டார். கன்னத்தில் கட்டுப் போட்டுக் கொண்டார். ராஹியா உடன்வர, புரட்சிக் குழுவின் அலுவலகத்தை நோக்கி நடந்தார். அது பதினெட்டு கிலோ மீட்டர் தொலைவில் இருந்தது. பாதிதூரம் சென்றபின், காலியான டிராம் கிடைத்தது. அதில் சிறிது தூரம் பயணஞ் செய்தனர். கடைசிப் பகுதியை கால்நடையாகப் பயணஞ் செய்தனர். இடைப்பட்ட இராணுவக் கல்லூரி பயிற்சியாளரை அப்பாவித் தோற்றத்தில் ஏமாற்றினார்கள்; அலுவலகம் சென்றார்கள்.

★★★

8. லெனின் தலைமையில் ஆட்சி

மாவீரன் லெனின் புரட்சிக் குழுவின் தலைமை அடைந்தபோது, கண்டதென்ன? அலுவலகம் முழுவதும் சுறுசுறுப்பாக இருந்தது. நள்ளிரவிலும் தொடர்பு ஆட்கள் வந்தார்கள்; ஆணைகளைப் பெற்றுக் கொண்டு சென்றார்கள்.

அலுவலகத்தின் எதிரில் இருந்த திடலில் மக்கள் கூட்டம் பெருகியிருந்தது. அவர்கள் யார்? தொழிலாளர், படைவீரர், கப்பற்படையினர், செங்காவற் படையினர் ஆகியோர். அலை அலையாக, லாரி லாரியாகப் பலர் வந்தார்கள். தொடர்பாளர்கள் பலர், அங்குவந்து ஆங்காங்குள்ள ஏற்பாடுகளை எடுத்துரைத்தார்கள்.

லெனின் புரட்சித் தலைமை அலுவலகத்திற்குள் நுழைந்தபோது, குழு உறுப்பினர்கள் அனைவரும் கூடியிருந்தார்கள். அரை நாளாகக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. எங்கே எப்போது எவ்வெப்பிரிவினர் தாக்குவது என்பதைப்பற்றி கலந்துரையாடிக் கொண்டிருந்தார்கள்.

லெனின் அங்கு போய்ச் சேர்ந்ததால், அவர்கள் ஆர்வம் பொங்கிற்று. லெனினுடைய வழிகாட்டலை எதிர்பார்த்து, ஆவலோடு இருந்தார்கள்.

லெனின், உறுதியாகவும் தெளிவாகவும் ஆணையிட்டார். என்ன ஆணை?

"இன்று இரவே தந்தி, தொலைபேசி, இரயில் நிலையங்களையும், அரசாங்க அலுவலகங்களையும் கைப்பற்றுக" என்பது லெனினுடைய வழிகாட்டல்.

"செங்காவற் படை அணிவகுக்க" என்ற முழக்கம் அடுத்த நொடி கேட்டது. பல பிரிவுப் படைகளும் புறப்பட்டன. 'உழைக்கும் மக்களும் போராட்டக் கருவிகளோடு புறப்பட்டார்கள். அனைவரும் பீட்டர்ஸ்பர்க்கிலுள்ள பனிக்கால அரண்மனையை நோக்கி விரைந்தனர்.'

அவ்வேளை, பனிக்கால அரண்மனையில், தற்காலிக அரசாங்கம் கூடி ஆலோசனை நடத்திக் கொண்டிருந்தது.

புரட்சியாளர்கள், அரண்மனையைச் சுற்றிலுமுள்ள எல்லாச் சாலைகளையும் பிடித்துக் கொண்டார்கள். அரண்மனையைச் சூழ்ந்து நின்று, முற்றுகையிட்டார்கள். அரண்மனையைக் கைப்பற்றி, அரசாங்க உறுப்பினர்களைக் கைது செய்யத் துடித்தார்கள்.

புரட்சிக்குழு உறுப்பினர்களும், ஆணையாளர்களும், மோட்டார்களிலும் குதிரைகளிலும் ஏறி அங்கு வந்தார்கள். சுற்றிப் பார்த்து விழிப்பூட்டினார்கள். குவிந்திருந்த புரட்சியாளர்கள், "எவ்வளவு நேரம் இழுத்தடிக்கப் போகிறீர்கள்? நமக்குத் தலைமை வகிப்பவர் யார்?" என்று அங்கலாய்த்தார்கள்.

"கண்காணிக்க வந்தவர்கள் லெனின்தலைமையேற்று நடத்துகிறார், உரிய நேரத்தில் ஆணையிடுவார்" என்று அமைதிப்படுத்திவிட்டுச் சென்றார்கள்.

புரட்சித் தலைமையலுவலகத்தில் செய்திகள் குவிந்த வண்ணம் இருந்தன. எந்தெந்த சாலைகளில் எந்தப் பிரிவுகள் உள்ளன. எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள்? கடற்படை எங்கே இருக்கிறது, இத்தகவல்கள் லெனினுக்குத் தொடர்ந்து வந்தன. 'அரோரா' என்னும் பெயர் உடைய போர்க்கப்பல் அரண்மனைக்கு அருகில் ஆயத்தமாக உள்ள செய்தி, லெனினுக்கு எட்டியது.

அடுத்த வினாடி தாக்குதலைத் தொடங்கும்படி, லெனின் ஆணையிட்டார். அச்செய்தியை, அஞ்சல் வீரன், மோட்டார் சைக்கிளில் கொண்டு சென்றான்.

1917 ஆம் ஆண்டு அக்டோபர் 26ஆம் நாள் இரவு ஊர் உறங்கும் வேளை; அரோரா கப்பலிலிருந்து பீரங்கிகள் வெடி முழக்கஞ் செய்தன. புரட்சியை, போராட்டத்தைத் தொடங்க, அடையாள வெடி அது. உடனே பனிக்கால அரண்மனையைச் சூழ்ந்திருந்த புரட்சியாளர்கள், அரண்மனையை நோக்கிப் பாய்ந்தார்கள். துப்பாக்கிகளும், பீரங்கிகளும் வெடித்தன.

அரண்மனையைக் காக்க, அரசு ஏற்பாடு செய்திருந்த தடுப்பு அரண் நொறுங்கிற்று; பற்றியெரிந்தது. இராணுவ பயிற்சியாளர்கள், அஞ்சி ஓடிப் பதுங்கிக் கொண்டார்கள்.

செங்காவற்படை அரண்மனைக்குள் நுழைந்தது. அதைக் கைப்பற்றியது. அங்கு ஓர் மண்டபத்தில் கூடியிருந்த அமைச்சர்களைக் கைது செய்தது.

அரண்மனைக்குள் வெற்றிகரமாகப் படையெடுத்த, போர் வீரர்களில் ஒருவன், எதிரில் தென்பட்ட நிலைக் கண்ணாடி ஒன்றை குத்தீட்டியால் ஓங்கிக் குத்தினான். நிலைக்கண்ணாடி தூள் தூளாக ஒடைந்து சிதறியது.

மற்ற போர் வீரர்கள் என்ன செய்தார்கள்? அவனைக் கண்டித் தார்கள். ஏன்?

“இனி, இங்குள்ள எதுவும் சார் மன்னரின் செல்வம் அல்ல; நம்முடையது; பொது மக்களுடையது. எனவே, எதையும் அழிக்கக் கூடாது” என்று கண்டித்தார்கள்; அதனால், பொதுச் சொத்துக்களை காக்க வேண்டுமென்பதை தொடக்கத்திலேயே கற்றுத் தந்தார்கள்.

சோவியத் மக்கள் அனைவரும் இன்றும் அப்பாடத்தை மறக்கவில்லை. நினைவில் கொண்டு செயல்படுகிறார்கள்.

பனிக்கால அரண்மனையைப் புரட்சியாளர்கள் கைப்பற்றி, அமைச்சர்களைக் கைது செய்ததும் அம்மகிழ்ச்சியான செய்தி யோடு, இராணுவப் புரட்சிக் குழுவின் தலைவர், பத்வோய்ஸ்கி, லெனினிடம் விரைந்து சென்றார்; வெற்றியை அறிவித்தார்.

லெனின் இந்தச் செய்திக்காக எத்தனை ஆண்டுகள் காத்திருந்தார்! எத்தனை துன்பங்களை ஏற்றார்! எத்தனை முறை சிறை, தலைமறைவு வாழ்க்கை! இதற்காக எவ்வளவு எழுதி எழுதி தொழிலாளர்களை ஆயத்தம் செய்தார்.

எதிர்பார்த்த வெற்றிச் செய்தியைக் கேட்ட லெனின், துள்ளி எழுந்தார். வெற்றிச் செய்தியைக் கொண்டு வந்தவரை கட்டித் தழுவிக் கொண்டார்.

இரண்டு பகல்களும், இரண்டு இரவுகளும் உறங்காதிருந்த லெனின் அப்போதாவது உறங்க வேண்டுமென்பது, க்ருப்ஸ்கயாவின் விருப்பம். அங்கிருந்த தோழர் போன்ச் புருயேவிச்சின் இல்லம் அருகில் இருந்தது. அங்கு சென்றார்கள்.

லெனின் காரில் அமர்ந்ததும் உறங்கி விட்டார். வீடு சேர்ந்ததும் தாமே விழித்துக் கொண்டார்.

போன்ச் புருயேவிச், அடுப்பங்கறையிலிருந்து ரொட்டியும் கொஞ்சம் பாலாடைக் கட்டியும் எடுத்து வந்தார். ஒலி எழுப்பாமல் அமைதியாக உண்டார்கள். சிந்தனை இயங்கத் தொடங்கி விட்டது; உறக்கம் கலைந்தது.

வீட்டுக்காரரர் வற்புறுத்த, க்ருப்ஸ்கயா வீட்டுக்காரியின் அறைக்குச் சென்றார். விளக்கை அணைத்தார். தூங்குவது போல் நடித்தார். மற்றவர்கள் ஆழ்ந்து உறங்கி விட்டார்கள் அப்போது?

லெனின் எழுந்து உட்கார்ந்தார். அடுத்த நாள், உலகின் முதல் தொழிலாளர் உழவர், அரசை நிறுவப்போவதைப் பற்றி சிந்தித்தார். அமைதியாக தம் எண்ணங்களை ஒருமுகப்படுத்தினார். சில நொடிகள் ஓடின.

லெனின் விளக்கைப் போட்டார். பேனாவை எடுத்தார். மளமளவென்று எழுதத் தொடங்கினார். எழுதி முடித்ததும் மன நிறைவு வந்தது. நினைத்ததை முடித்துவிட்ட மன நிறைவு பொங்கிற்று. உறக்கம் பின் தொடர்ந்தது. வெளியே பார்த்தார். கிழக்கு வெளுக்கும் நேரம் என்று தோன்றியது.

இரண்டு மணிகள் உறங்கலாம் என்று எதிர்பார்த்துப் படுத்தார். அடுத்த வினாடி ஆழ்ந்து உறங்கி விட்டார்.

எழு ஞாயிறு, லெனினுடைய அறைக்குள் ஒளியைப் பாய்ச்சியது. அவர் உறங்கிக் கொண்டிருக்கையில், அவர் எழுதியது பளிச்சிட்டது. அதோ தலைப்பு! 'நிலம் பற்றிய அரசாணை' என்னும் தலைப்பு. அதன் உள்ளடக்கம் என்ன?

"நிலப்பிரபுக்களுக்கும், சர்ச்சுகளுக்கும், மடங்களுக்கும் எல்லாவகைப் பணக்காரர்களுக்கும் உரிய நிலங்கள் குடியானவர் களுக்கு இலவசமாக வழங்கப்படும். நிலத்தில் உழைக்காதவனுக்கு நிலம் கிடையாது. நிலத்தில் உழைப்பவர்களுக்கே நிலம் சொந்தம்."

இப்படி லெனின், மறுநாள் பொறுப்பேற்க இருக்கும், சோவியத் ஆட்சியின் ஆணையை எழுதி வைத்திருந்தார்.

புது நாள் புலர்ந்தது! புதிய ஆட்சி அமைந்தது.

ஸ்மோல்னீ மாளிகையின் வெள்ளை மண்டபம், முன்னர் சீமான்களும் சீமாட்டிகளுமே கால் எடுத்து வைத்த இடம் ஆகும். அன்றோ! அங்கு குடியானவர்களின், தொழிலாளிகளின், படை வீரர்களின் பிரதிநிதிகள் குழுமியிருந்தார்கள். அன்று சோவியத்து களின் இரண்டாவது காங்கிரசு தொடங்கிற்று. இராணுவப் புரட்சிக் குழுவின் தலைவர் பத்வோய்ஸ்கி தலைமையேற்று லெனினைப் பேச அழைத்தார். லெனின் மேடையேறினார். வாழ்த்தொலி முழங்கின. கையை உயர்த்தி அமைதிப் படுத்தினார். சோவியத் ஆட்சி அமைக்கப்பட்டு விட்டது என்று அறிவித்தார்.

உழவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும், போர் தேவை யில்லை. பொது மக்கள் அமைதியை விரும்புகிறார்கள். எனவே, சோவியத் ஆட்சி போரை விரும்பவில்லை. ஜெர்மனியோடு நடந்து கொண்டிருக்கும் போரிலிருந்து, விலகுவதாக அறிவித்தார். பின்னர் நிலம் பற்றிய அரசாணையைப் படித்தார். இரண்டும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. அமைச்சர்கள் பட்டியலைக் காங்கிரசு ஏற்றுக் கொண்டது. அமைச்சரவையின் தலைவராக லெனினைத் தேர்ந்தெடுத்தது.

★★★

9. சோவியத் ஆட்சியின் அடிவைப்புகள்

மாவீரன் லெனினை புதிய சோவியத் ஆட்சியின் பிரதமராக் கியதோடு, சோவியத்துகளின் காங்கிரசு கலையவில்லை; மாறாக, பொழுது விடியும் வரை நடந்தது. பல முடிவுகளை எடுத்தது. அப்புறம் கலையும்போது,

"தோழர்களே! விரைந்து உங்கள் இடங்களுக்குத் திரும்பிச் செல்லுங்கள். தொழிலாளர்களின் புரட்சி வென்றுவிட்டதை அறிவியுங்கள். சோவியத் ஆட்சி நடப்பதைத் தெரிவியுங்கள். நாடு முழுவதிலும் சோவியத் ஆட்சியை வலுப்படுத்துங்கள்" என்று லெனின் வழிகாட்டினார்.

லெனின் என்ன செய்தார்? வீடு திரும்பவில்லை. இராணுவப் புரட்சிக் குழுவின் தலைமையகத்திலேயே தங்கி, பணிபுரியத் தொடங்கினார். லெனின் தங்கியிருந்த இடம் நீண்ட அறை, அவ்வளவே. அதை தாழ்ந்த தடுப்பினால் இரண்டாகப் பிரித்திருந்தார்கள். ஒருபாதியில் இருகட்டில்கள். அது படுக்கையறை. மற்றோர் பாதியில், சிறிய மேசை. அதைச் சுற்றிச் சில நாற்காலிகள். அதுவே உணவுக் கூடம்; வேலை செய்யும் அறை; உலகத்தின் மிகப்பெரிய சோவியத் நாட்டின் பிரதமர் லெனின், பிரதமரான பிறகும் ஒரே அறையில் வாழ்ந்தார். எத்துணை எளிய வாழ்க்கை! மனைவி க்ருப்ஸ்கயாவாகிலும் முணுமுணுத்தாரா? இல்லை.

உலகப் போரால், இரஷ்ஷியா பாழடைந்திருந்தது. பரவலான உணவுப் பஞ்சம். எங்கெங்கும் கரி, விறகு பற்றாக்குறை, நாளைக்கு ஆளுக்குக் கால் ராத்தல் ரொட்டி கிடைத்தது. லெனினுக்கும் அந்த அளவே. லெனின் அறையிலும் கணப்பு இல்லை.

பிரதமர் லெனினுடைய பொது அலுவல்களைக் கவனிப்போம். விடியற்காலை முதல் இரவு நெடுநேரம் வரை, வேலை செய்ய வேண்டியிருந்தது. எப்படி வேலை செய்தார்? அமைச்சரவையைக் கலந்து கொண்டார். கட்சியின் மையக் குழுவோடு உரையாடிக் கருத்தறிந்தார். சாதாரண குடியானவர்கள், பாட்டாளிகள் சொன்ன கருத்துக்களுக்குச் செவி சாய்த்தார். பிறகு முடிவு எடுத்தார்.

ஸ்மோல்னீ மாளிகையில் வேலை செய்து கொண்டிருந்த, சாரின் ஆட்கள், ஓடிவிட்டனர். எனவே, சோவியத் மூன்று தொழிலாளர்களை அங்கு அனுப்பியது. அவர்களோ அரசு அலுவலகங்களுக்குப் போய் பழகாதவர்கள், தட்டுத்தடுமாறி உரிய இடத்தை சேர்ந்தார்கள். பிரதமர் லெனினைக் கண்டார்கள். லெனின் அவர்கள் பக்கத்தில் உட்கார்ந்தார்; அளவளாவினார்.

அலுவலக வேலை பிடிபடவில்லையென்று முறையிட்டார்கள். லெனின் வெகுளவில்லை, மாறாக எனக்கும் பிரதமர் அலுவல் புதிதுதானே. மற்ற அமைச்சர்களும் இவ்வேலையில் பழக்கமில்லாதவர்கள், முடியாதவற்றை, புதியவற்றைக் கற்றுக்கொள்வோம். 'இவ்வேலைகளை நமக்குப் பதில் வேறு எவர் செய்யப் போகிறார்?' என்று ஆறுதல் கூறி, ஊக்குவித்தார். அத்தொழிலாளர்கள் அலுவலக நெளிவுசுழிவுகளைத் தெரிந்து கொள்வதென்ற உறுதியோடு சென்றார்கள்.

நாடு தழுவிய நலிவு, பஞ்சம், பட்டினி; இவற்றையே பிரதமர் லெனின் பெற்றார். அதற்காகச் சலித்துக் கொள்ளவில்லை. அமைச்சரவையை அடிக்கடி கூட்டினார். எங்கெங்கே, உணவு தானியங்கள் எச்சாக உள்ளன. அவற்றைக் கொள்முதல் செய்வது எப்படி? இவற்றைப் பற்றி அமைச்சரவை ஆலோசித்தது. உலகப் போரில் இருந்து விடுபடுவது, முதல் அடிவைப்பு என்று முடிவு செய்தது.

புதிய சோவியத் ஆட்சி, ஜெர்மன் படைத்தலைமை அலுவலகத்திற்குத் தூது அனுப்பியது. அமைதி வழியை மேற்கொள்ளப்போவதாகச் சொல்லி அனுப்பியது. ஜெர்மனியரோடு உடன்பாட்டிற்கு வரச் சொல்லி அனுப்பியது.

ஜெர்மானியர்கள், கொடுமையான நிபந்தனையை விதித்தார்கள்.

அது என்ன? ஜெர்மனியர்கள், ருஷ்யாவில் கைப்பற்றியுள்ள, நிலப்பரப்பை அவர்களே வைத்துக் கொள்வார்கள். இதுவே நிபந்தனை.

பொதுமக்களுக்குப் புதுவாழ்வு தேவை; சீரமைப்பு தேவை; எனவே, லெனின் ஆலோசனைப்படி, இதையும் சோவியத் ஆட்சியாளர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

சோவியத் ஆட்சியின் சார்பில் தூது சென்றவர் எவர்? திரோத்ஸ் கீ என்பவர், தூது சென்றார். அவர், ஜெர்மனிய படைத் தலைமையோடு, உடன்படிக்கை செய்து கொள்வதற்குப்பதில், போரை நிறுத்திவிட்டோம் என்று அறிவித்து விட்டு வந்தார். இரஷ்ஷியப் போர் வீரர்கள் களங்களிலிருந்து வீடு திரும்பிவிட்டார்கள்.

அச்சூழலைப் பயன்படுத்திக் கொண்டு, ஜெர்மன் படைகள் மேலும் மேலும் இரஷ்ஷியாவிற்குள் நுழைந்தன. தலைநகர், பீட்டர்ஸ்பர்க்கைக் கைப்பற்றிவிடும் ஆபத்து முளைத்தது.

எனவே, சோவியத் ஆட்சியின் தலைநகரை மாஸ்கோவிற்கு மாற்றிவிட முடிவு செய்யப்பட்டது. அப்படியே, யாரும் அறியாதவண்ணம், அமைச்சரவையும் அலுவலகங்களும் இரவோடு இரவாக, மாஸ்கோவிற்குத் தனி இரயிலில் சென்றுவிட்டது.

மாஸ்கோவிற்குப் பயணஞ் செய்கையிலும் பிரதமர் லெனின் ஓய்வு கொள்ளவில்லை. சோவியத் ஆட்சியின் அடுத்த கடமைகள் பற்றி சிந்தித்தார். அதை அமைச்சரவையில் வைத்தார்; ஒப்புதல் பெற்றார்.

மாஸ்கோ, கிரெம்ளின் மாளிகையில் புதிய சோவியத் ஆட்சி செயல்படத் தொடங்கியது. அம்மாளிகையிலும் லெனினுடைய உறையுள் எளிமையானதாகவே இருந்தது.

மன்னர் ஆட்சிக் காலத்தில், தொழிலாளர்கள் பன்னிரெண்டு மணி முதல் பதினைந்து மணி வரை வேலை செய்ய வேண்டியிருந்தது. எல்லோர்க்கும் எட்டுமணி நேரமே வேலைநாள் என்று அரசாணை பிறப்பிக்கப்பட்டது. அடுத்து?

மற்றோர் அறிவிப்பு. அது என்ன? ஆலைகள், தொழிற்சாலைகள், இனி, தனியாருக்குச் சொந்தமல்ல; நாடு முழுவதற்கும் உரியனவாம். இருப்புப் பாதைகள், கப்பல்கள் முதலியனவும் நாட்டுடைமைகள். இன்னும் என்ன? ஆறுகள், காடுகள், சுரங்கங்கள், கனிப்பொருட்கள், வங்கிகள் அனைத்தும் சோவியத் சமுதாயம் முழுவதற்கும் சொந்தம். கோயில்கள், மடங்கள் சேர்த்து வைத்திருந்த நிலங்கள், செல்வங்கள் அனைத்தும் நாட்டுடைமை.

எவ்வளவு தலைபோகும் வேலையிருந்தாலும் லெனின், பொதுமக்களை பார்க்கத் தவறுவதில்லை. ஒருமுறை நெடுந் தொலைவிலிருந்து சில குடியானவர்கள் லெனினைப் பார்க்க வந்தார்கள். அவர்களுக்கு உடனே பேட்டி கிடைத்தது. அவர்களோடு எளிமையாகவும், இனிமையாகவும் பேசினார். அவர்கள் உள்ளத்தில் உள்ளதை ஒளிக்காமல் கொட்டினார்கள்.

'ஏழைக் குடியானவர்கள், லெனின் பக்கம் நிற்கிறார்கள். பெருநிலக்கிழார்களோ, சோவியத் ஆட்சிக்குப் பகைவர்கள். புதிய ஆட்சியை எப்படியும் நசுக்கிவிடத் துடிக்கிறார்கள்' என்பது உரையின் சுருக்கம்.

சிற்றூர்களில் தங்கள் தேவைகளுக்கும் அதிகமாக உணவுப் பொருட்கள் உள்ளன. பின்னர் கொள்ளை இலாபம் அடிக்கும்

நோக்கத்தோடு பெருநிலக்கிழார்கள் அவற்றைப் பதுக்கி வைத்திருக்கிறார்கள். இதையும் ஏழைக் குடியானவர்களிடமிருந்து தெரிந்து கொண்டார். பின்னர்?

ஊர்தோறும் ஏழைக் குடியானவர்களின் குழுக்களை அமைக்கச் செய்தார். ஒவ்வோர் ஆலையிலும் தொழிற்சாலையிலும் உணவுப் பொருள் சேமிப்புப் பட்டாளத்தை நிறுவச் செய்தார். அடுத்து?

சிற்றூர்களில் உள்ள, அதிகப்படி, தானியங்களை ஏழைக் குடியானவர்கள் குழுக்களிடமோ, தொழிலாளர் பட்டாளங்களிடமோ ஒப்படைத்துவிட வேண்டும் என்னும் அரசாணையை உருவாக்கினார்; அமைச்சரவையின் முன் வைத்தார். அமைச்சரவை கலந்து பேசி ஏற்றுக்கொண்டது. உடனே அது ஆணையாக அறிவிக்கப்பட்டது. குழுக்களும் உணவுப் பட்டாளங்களும் செயல்பட்டன. விரைந்து செயல்பட்டன; பல இடங்களில், எதிர்ப்பைக் கலவரங்களைக் கண்டன; வென்றன.

பழக்கமும் பயிற்சியும் இல்லாத நிலையில், பல ஊர்களில், முழு வெற்றியில்லாவிடினும் மொத்தத்தில், பதுக்கல் பொருட்கள் வெளிவந்தன; பாழாகாமல் பாதுகாக்கப்பட்டன. பஞ்சம் தாண்டவமாடிய ஊர்களுக்குக் கடிதில் கொண்டு போகப்பட்டன. பங்கீட்டில் வழங்கப்பட்டன.

பிரதமர் லெனினே, பங்கிட்டு அளவிற்கு மேல் இம்மியும் பெறாத சூழலில் வழிகாட்டலில் எல்லார்க்கும் சீரான பங்கு கிடைத்தது. நாடு பட்டினியிலிருந்து காப்பற்றப்பட்டது. பாட்டாளி ஆட்சி, பட்டினியிலிருந்து, பொதுமக்களைக் காப்பாற்ற முடிந்தது, பெருஞ்சாதனையாகும்.

★★★

10. தொல்லைகள் தொடர்ந்தன

உலகத்தின் புதுமை. சோவியத் ஆட்சி. அது, அறிவித்ததோ வாழ்வு; எல்லா இன மக்களுக்கும் வாழ்வு. இரஷ்ஷியாவில் உள்ள எல்லா இன மக்க்ளுக்கும் மொழி உரிமை. எவரும் எவருக்கும் அடிமையில்லை. அரசியல் அமைப்பு என்ன? எல்லாப் பகுதிகளும் விரும்பி இணைத்துள்ள கூட்டாட்சி, அமைதியை விரும்பும் கூட்டாட்சி.

அக்கூட்டாட்சியை ஆள்வது எவர்? மேட்டுக் குடியினர் அல்லர். செல்வர்கள் அல்லர்; தொழிலதிபர்கள் அல்லர்; பின் யார்? பாட்டாளிகள். படைவீரர்கள், குடியானவர்கள் ஆகியோரின் பிரதிநிதிகளைக் கொண்ட மக்கள் மன்றங்கள். அம்மக்கள் மன்றங்களின் பெயர் 'சோவியத்' என்பதாகும்.

சோவியத் ஆட்சி, முதல் உலகப் போரிலிருந்து விலகிய போதிலும், பிற வல்லரசுகள் வலியப் போருக்கு வந்தன. ஏன்? இரஷ்ஷியாவில் பாட்டாளி சமதர்ம ஆட்சியினை நிலைக்க விட்டால், பிற நாடுகளுக்கும் அம்முறை பரவக் கூடுமென்று அஞ்சின. எனவே, சோவியத் ஆட்சியை முளையில் நசுக்கிவிட முனைந்தன.

1918 ஆம் ஆண்டு வசந்த காலத்தில் ஓர் விடியற்காலை, இரஷ்ஷியாவின் வடகோடியில், பிரிட்டிஷ் போர்க்கப்பல் நெருங்கிற்று; பிரெஞ்சுக் கப்பல் நிழல்போல் வந்தது; அமெரிக்கக் கப்பல் வால்பிடித்து வந்தது. அவற்றிலிருந்து போர் வீரர்கள் இறங்கினார்கள்; படையெடுப்பைத் தொடங்கினார்கள். சோவியத் செம்படை வீரர்களும் கடற்படை வீரர்களும் அயல்நாட்டுப் படையெடுப்பைத் தடுக்க முயன்றார்கள். படை பலம் சமமாயில்லை. எனவே, சோவியத் தரப்பில் இழப்பு அதிகம்.

படையெடுப்பு, உள்நாட்டு முதலாளிகளுக்குப் புத்துயிர் அளித்தது. நிலப்பிரபுக்களும், தொழிலதிபர்களும் சார்காலப் படைத் தலைவர்களும் முன்னுக்கு வந்தார்கள். எதிர்ப்புரட்சிக்குப் படை திரட்டினார்கள். சோவியத் ஆட்சிக்கு எதிராக உள்நாட்டுப் போர்களைத் தொடங்கினார்கள். பாதிரிகள் பங்கும் உண்டு. அவர்கள் தூபம் போட்டு, வழிபட்டார்கள்.

வடக்கில் தொடங்கிய எதிர்ப்புரட்சி, தூரக்கிழக்கிற்குப் பரவிற்று. பின்னர், சைபீரியா முழுவதிலும் விரிந்தது.

வல்லரசுகளின் கப்பல்கள் விளாதீவஸ்தோக் துறைமுகத்தில் துருப்புகளை இறக்கின.

சோவியத் நாட்டை வெளிநாட்டுப் பகைவர்களும், உள்நாட்டுக் கலகக்காரர்களும் இணக்கமாக, சுற்றி வளைத்து, ஒடுக்கத் திட்டமிட்டார்கள். அது பலிக்கும்போல் தோன்றிற்று.

மாவீரன் லெனின் கலங்கவில்லை. அலுவலக அறையின் சுவரில் மாட்டியிருந்த நாட்டுப் படத்தை அடிக்கடி பார்த்தார். எங்கெங்கே, எந்தெந்த, படைகள் மோதுகின்றன என்பதை அப்போதைக்கப்போது தெரிந்து கொண்டார். களங்களில் கடும்போர் புரிந்து வந்த படைத் தலைவர்களில் பலரைப்பற்றி லெனின் தெரிந்து வைத்திருந்தார். அவர்களுடைய இயல்பு, தேர்ச்சி, திறமை பற்றியும் லெனின் நிறையத் தெரிந்து வைத்திருந்தார்.

சார் காலப் படைத் தளபதி ஒருவர் லெனினுடைய கோட்பாட்டினை ஏற்றுக் கொண்டிருந்தார். லெனின் அவருடைய ஆலோசனையையும் பயன்படுத்திக் கொண்டார்.

கட்சிக்காரர்களோடு கலந்து, கிழக்குப் பகுதியை விடுவிக்கத் திட்டந் தீட்டினார்.

இதற்கிடையில், மாஸ்கோ நகரில் நாள்தோறும் அமைச்சர் ஒருவர் தொழிலாளர் கூட்டங்களில் பேச ஏற்பாடு செய்திருந்தார்கள்.

ஒரு வெள்ளிக்கிழமையன்று, பிரதமர் லெனின், பேசவேண்டிய முறை. அன்று காலை, பீட்டர்ஸ்பர்க்கில், சோவியத் சார்பில் போராடும் மக்கள் அணியின் தலைவர், உரீத்ஸ்கி, எதிர்ப்புரட்சியர்களால் கொல்லப்பட்டார்.

எனவே, லெனின் மாஸ்கோ தொழிலாளர் கூட்டத்திற்கு அன்று வரவேண்டாமென்று தோழர்கள் வேண்டினார்கள். லெனினோ உடன்படவில்லை; திட்டமிட்டபடி சென்றார். முதற் தொழிற்சாலையில் பெரிய கூட்டம். அத்தொழிற்சாலையில் எறிகுண்டு உற்பத்தி செய்தார்கள்.

லெனின், அக்கூட்டத்தில், உள்நாட்டுப் போர் பற்றிப் பேசினார். சோவியத் ஆட்சியை ஒழிக்கப் போராடும் வெண்படையோடு, நடக்கும் போராட்டத்தை விவரமாகக் கூறினார்.

கூட்டம் முடிந்தது. லெனின் கார் ஏறப்போகும் வேளை; தொழிலாளர்கள் சூழ்ந்துகொண்டு கேள்விகள் கேட்டுத் துளைத்தார்கள்.

திடீரென, வெடிச்சத்தம்! மீண்டும் அதேஒலி லெனின் விலாப்புறம் சாய்ந்தார். மூன்றாவது குண்டு முதுகில் பாய்ந்தது. ஒரு பெண் ரிவால்வரைப் போட்டு விட்டு ஓடினாள். அவளைப் பிடிக்கப் பலர் ஓடினார்கள்.

லெனினோ, ‘வீட்டுக்கு’ என்று ஆணையிட்டார். தோழர்கள் லெனினை தூக்கிக் காரில் அமர்த்தினார்கள். கார் பறந்தது. கிரெம்ளினை அடைந்தது. லெனினுடைய வைரம் பாய்ந்த உள்ளம் தாக்குப் பிடித்தது. பிறர் தாங்க, மாடிப் படிக்கட்டுகளை மெல்ல ஏறிச் சென்றார்.

வேலைக்குச் சென்றிருந்த மனைவி க்ரூப்ஸ்கயா, திரும்பி வந்தபோது, லெனினுடைய நாடி தளர்ந்து போயிருந்தது. அவர் உயிருக்கே உலையோ என்று அஞ்சியவர் எண்ணற்றவர்.

சில நாட்களில் வெற்றி செய்தி வந்தது. செஞ்சேனை வீரர்கள் அனுப்பியிருந்தார்கள். எங்கே வெற்றி?

லெனினுடைய ஒரு காயத்திற்கு ஈடாக அவருடைய நகரமாகிய சிம்பிர்க்ஸைக் கைப்பற்றி விட்டார்கள். மறு காயத்திற்கு ஈடாக, சமாராவை மீட்டார்கள்.

இச்செய்தி மாமருந்தாக வேலை செய்தது. லெனின் குணமடைந்தார். மருத்துவர்கள் அவரை வேலை பார்க்க விட்டார்கள். இதைக் கேட்டு மக்கள் மகிழ்ந்தார்கள்.

அதே நேரத்தில், அயல் நாட்டுப் பகைவர்கள், அலறினார்கள்; பதினான்கு வல்லரசுகள் படையெடுத்தன. சோவியத் நாடு முற்றுகைக்கு உள்ளான, கோட்டைபோல் ஆகிவிட்டது.

லெனின் எப்படிச் சமாளித்தார்? தோழர்கள் செஞ்சேனைகளுக்குப் படைக் கருவிகள் தேவை. ஆகவே, நிறைய உற்பத்தி செய்யுங்கள்.

“தோழர்களே! செஞ்சேனைக்கு உடையும், கால் அணிகளும் தேவை. விரைந்து இவற்றைத் தைத்துக் கொடுங்கள்” என்று கூறினார். உழைப்பை, உற்பத்தியைப் பெருக்கினார்கள்.

அவை போதவில்லை. பொது மக்களிடமிருந்து கம்பளி உடைகளையும் சால்வைகளையும், கையுறைகளையும் திரட்டினார்கள்.

போர் நீள, நீள, பஞ்சம் வளர்ந்தது. பங்கீட்டுப்படி வழங்கவும், உணவுப் பொருள்கள் தட்டுப்பட்டன. எனவே, புதிய சட்டம் பிறப்பிக்க வேண்டியதாயிற்று. அது என்ன கட்டளையிட்டது?

குடியானவர்கள், தங்கள் தேவைகளுக்கு மேல் உபரியாக உள்ள கோதுமை, இறைச்சி, வெண்ணெய், உருளைக்கிழங்கு ஆகியவற்றை

அரசிடம் கொடுக்க வேண்டும். இப்படி இலட்சக்கணக்கானவர்களைக் காக்க முயன்றார் பிரதமர் லெனின். அவருக்கோ மற்றோர் ஆபத்து.

லெனின், மாஸ்கோவிற்கு அருகில் உள்ள சோலைப் பள்ளியொன்றைக் காணச் சென்றார். வழியில் இரயில் பாலத்தண்டை மூன்று கொள்ளைக்காரர்கள் காரை வழிமறித்தார்கள். காரில் இருந்தவர்களை இறக்கி விட்டார்கள். காரை ஓட்டிக் கொண்டு மறைந்து விட்டார்கள்.

லெனின் அருகில் இருந்த சோவியத் அலுவலகத்திற்கு நடந்து சென்றார். அங்கே வேறு காருக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. திட்டமிட்டபடி, ஆனால் தாமதமாக பள்ளியை அடைந்தார். பள்ளிச் சிறுவர் சிறுமியரோடு, புத்தாண்டு விழாவைக் கொண்டாடினார்.

பட்ட காலிலே படும். லெனினுக்கும் அப்படியே! அவருடைய அத்தான், மார்க், லெனினுக்கு உற்ற தோழர். அவர் டைபாயிட் காய்ச்சலால் உயிரிழந்தார். அது ஓர் இடி. மற்றொன்று?

ஆருயிர் தோழர் செலர் திலோவ், ப்ளூக் காய்ச்சலால் மாண்டார். அவர், அகில இரஷ்ஷியா மைய நிர்வாகக் குழுவின் தலைவர். செயல்வீரர்; நம்பிக்கைக்குரியவர்.

சோவியத் நாடு முழுவதும் டைபாயிடும், ப்ளூவும், கணக்கற்ற உயிர்களைப் பலிகொண்டன.

'உள்நாட்டுப் போர்களோடு பட்டினியும், நோய்களும் கைகோர்த்துள்ளன. இனி சோவியத் அட்சி முடிந்துவிடும்' என்று மனப்பால் குடித்தன, வல்லரசுகள்.

ஆனால், சோவியத் நாட்டிலோ மக்கள் சேனை உருவாயிற்று. மக்கள் சேனை என்றால் என்ன? தொழிலாளிகளும், குடியானவர்களும் தத்தம் தொழில்களை விடாது, போர்ப் பயிற்சி பெற்று, அணியாதல் என்று பொருள்.

அத்தகைய மக்கள் சேனை உருவாயிற்று. பல்லாயிரக்கணக்கானவர்கள் பயிற்சி பெற்றார்கள். லெனின் அவர்களது அணிவகுப்பைக் கண்டு மகிழ்ந்தார்.

'படைவீரர்கள் மன்னரையும் செல்வந்தர்களையும் காப்பாற்றக் கற்றது முற்காலம். இப்போது, தங்களையும் தங்களுடைய குடும்பங்களையும், குழந்தைகளையும் காப்பதற்காக, செஞ்சேனை போராடும்' என்று லெனின் கூறினார். அது எல்லோருடைய நரம்புகளிலும் முறுக்கேற்றிற்று. படை வீரர்கள் ஆர்வத்தோடு களம் நோக்கிப் புறப்பட்டார்கள்.

★★★

11. அரைப்பட்டினி அமைச்சர்கள்

மக்கள் சேனை மட்டுமா தியாகஞ் செய்ய முன்வந்தது? அமைச்சர்களும், ஏன் பிரதமர் லெனினும் நாள்தோறும் தியாகஞ் செய்தார்கள். அப்பப்பா! எப்படிப்பட்ட தியாகம் தெரியுமா?

நாள்தோறும் அரைப்பட்டினி, நாட்டில் பஞ்சம் தலைவிரித்தாடிய போது, அத்துன்பத்தை லெனினும் பிற அமைச்சர்களும் பகிர்ந்து கொண்டார்கள். தொடர்ந்து அரைவயிற்றுக்கு உண்டார்கள்; இளைப்பும், களைப்பும் இயற்கை. ஒருநாள் அமைச்சரவைக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. லெனின் தலைமை தாங்கினார். எல்லோரையும் கூர்ந்து கவனித்தார். உணவு அமைச்சர் த்ஸுருப்பா, எலும்பும் தோலுமாக, இளைத்திருக்கக் கண்டார். பட்டினியின் பலன் என்பதை லெனின் நொடியில் புரிந்து கொண்டார். இமைப்பொழுதில் குறிப்பொன்றை எழுதி அனுப்பி வைத்தார். எவருக்கு? உணவு அமைச்சருக்கு. என்ன எழுதினார்?

“அரசின் சொத்தை அக்கறையுடன் பேண வேண்டும். இப்படி அசட்டையாக விடக்கூடாது. அது அறிவுடைமையாகாது.”

லெனின், த்ஸுருப்பாவை அரசின் சொத்து என்று குறிப்பிட்டார். அதைப் படித்த உணவு அமைச்சர் பதில் சொல்லவில்லை; புன்னகை பூத்தார். சில மணித்துளிகள் பறந்தன. த்ஸுருப்பா, பேச எழுந்தார். சட்டென்று சாய்ந்தார். உணவு அமைச்சருக்கு என்ன? பட்டினிக் களைப்பு. அது போதாதா? அனைவரும் அறிய, லெனின் அதை அம்பலப்படுத்தி விட்டார். மற்றவர்கள் நிலையும் கிட்டத்தட்ட அதுவே. சாதாரண குடிமக்களின் பட்டினியைத் தாங்களும் ஏற்றுக்கொண்ட அவர்கள் அல்லவா அமைச்சர்கள்!

அக்கூட்டத்தில், பிரதமர் லெனின் வாதாடினார். எவருக்காக?

குழந்தைகளுக்காக, அவர்கள் வளரும் பருவத்தினர். அவர்களுக்குச் சற்று அதிக உணவு கொடுங்கள். அதேபோல் தனிக்கட்டைகளான கிழங்களை மறந்துவிடாதீர்கள். கிழவர்களிடம் சோவியத் ஆட்சி அக்கறை காட்டாவிட்டால், வேறு எவர் காட்டுவர்? இப்போது ஏழ்மை அதிகமே! இருப்பினும் எப்படியாவது வழி கண்டுபிடியுங்கள்.

இப்படி சகாக்களுக்குப் பரிந்துரைத்தார். ஆட்சியிலிருப்போர் தியாகத்திற்கு மற்றோர் எடுத்துக்காட்டைப் பார்ப்போம். தாம்போவ் பகுதியைச் சேர்ந்த குடியானவர்கள், லெனினுக்கு சிறு பரிசுப் பொட்டலம் ஒன்றை அனுப்பியிருந்தார்கள். உள்ளே என்ன இருந்தது? வாட்டிய இறைச்சியும் கொழுப்பும் இருந்தன.

'எங்கள் பண்டத்தை ருசி பாருங்கள். உடல்வலிமை பெறுங்கள்' என்னும் வேண்டுகோளோடு அனுப்பியிருந்தார்கள். நள்ளிரவுக்குமேல் திரும்பிய, பிரதமர் லெனினிடம், தங்கை மரியா அதைக் காட்டினார். களைப்பு மிகுந்துள்ள அவ்வேளை யாகிலும் அப்பரிசுப் பொருளை உண்ணலாமே என்று நயந்தாள் தங்கை. கேட்டாரா லெனின்? இல்லை. வழக்கம்போல, மற்றவர்களுக்கு அனுப்பி விட்டார். இம்முறை அப்பொட்டலம், எவருக்குப் போய் சேர்ந்தது?

பஞ்சப்பகுதியிலிருந்து, சுவஷ் இனக்குழந்தைகள் மாஸ்கோவிற்கு வந்துள்ளார்கள். அவர்கள் இல்லத்திற்கு, அப்பொட்டலத்தை அனுப்பி வைத்தார். பெற்ற பாலகனையே, மாடு மேய்க்க, அனுப்பிப் பிழைக்கும் பெற்றோர் நிறைந்த உலகில் இப்படியும் ஒரு பிரதமர்; இல்லை மாமனிதர்! அவர் குழந்தைகளுக்கான வாய்ப்புகள் பற்றி எத்தனை கனவுகள் கண்டார்! பசி, பஞ்சம், நோய்கள் தாண்டவமாடிய நிலையிலும், அவற்றிற்கு அஞ்சாது, ஒளிமயமான எதிர்காலம் பற்றிக் கனவுக் கண்டார். கனவும் காண வேண்டும்; செயலும் புரிய வேண்டும். இரண்டையும் இமயமலை அளவு செய்தார் லெனின். பாட்டாளி மக்களின் கைகளில் ஆட்சி உரிமை. இது பெருங்கனவு. புதுமையான கனவு. அதை, நனவாக்க, ஆயத்தஞ் செய்தார்; தொடர்ந்து பாட்டாளிகளை பக்குவப்படுத்தி வந்தார். புரட்சியை வெற்றிகரமாக நடத்திக் காட்டினார்.

காலாகாலத்திற்கும் ஆட்சி, பாட்டாளி ஆட்சியாக இருக்க வேண்டும். அதை எப்படி உறுதிப்படுத்துவது? பாட்டாளிகளின் அறிவுக் கண்களை அகலத் திறப்பதால், அப்பெரும் பணியை எங்கே தொடங்குவது? எழுத்தறிவில் தொடங்குதல் வேண்டும். சிறுவர் சிறுமியர்க்கு மட்டுமா? இல்லை. அவர்கள் ஆள, பல்லாண்டுகள் செல்லும். உடனடி ஆளப் போகிறவர்கள்? முதியோர்-தொழிலாளி, குடியானவர். அவர்கள் நிலை என்ன? தற்குறிகள்-எங்கெங்கு திரும்பினும் தற்குறிகள். நாடு முழுவதுமாக மொத்தக் கணக்கிட்டால்? நூற்றுக்கு எழுபத்தைந்து பேர்கள் கைநாட்டுகள்.

இஸ்லாமியர்களிடையே? நூற்றுக்கு இருவர்கூட எழுத்தறிவு பெறவில்லை. அப்பெண்களில், ஆயிரத்திற்கு இருவர் படித்திருந்தால், அற்புதம். பன்னிரண்டு கோடி தற்குறிகளுக்கு எழுத்தறிவு! எப்போது முடியும் இது? எப்படி முடியும் இது? எவ்வளவு பிடிக்கும் இதற்கு? இப்படி மலைத்து நிற்கவில்லை, லெனின். பின் என்ன செய்தார்?

உள்நாட்டுப் போர், கடுமையாக, வெளிநாட்டுத் தாக்குதல்கள் கோரமாக, நடந்து கொண்டிருந்த நிலையிலேயே முதியோர் எழுத்தறிவு இயக்கத்தைத் தொடங்க ஆணையிட்டார். எப்படிச் செயல்படச் சொன்னார்?

சிற்றூர்தோறும் முதியோர் எழுத்தறிவு மையத்தைத் தொடங்குங்கள். கூட்டம் எங்கே? ஏற்கெனவே, பள்ளியுள்ள ஊர்களில் பள்ளிக்கூடத்தில்; பள்ளியில்லாத ஊர்களில்? தொழுகைக் கூடங்களில்-இவற்றின் நடைமுறைகளுக்கு இடையூறு இல்லாத வேளைகளில், அதுவும் இல்லாத இடங்களில்? தொழிற்சங்கங்களில் நடத்துங்கள். முதியோர் வருவார்களா? கேட்டுக் கொண்டே இருந்தால் காலம் ஓடிவிடும். இட்டு வாருங்கள்; முதியோர் மையத்திற்கு இட்டு வாருங்கள். எவர் பொறுப்பு அது? போல்ஷ்விக் கட்சியாளர்களின் பொறுப்பு அது. இட்டு வந்து விடுகிறோம். கற்றுக் கொடுப்பவர்கள் யார்?

தொண்டர்கள் கற்றுக் கொடுப்பார்கள். ஊதியம் பெறாமல், கற்றுக் கொடுப்பார்கள். ஆசிரியத் தொண்டர்களுக்கு என்ன தகுதி?

ஆர்வம் முதல் தகுதி; தோழமையுணர்வு, அடுத்த தகுதி; படிப்பு வேண்டாமா? வேண்டும். முதல் வகுப்பிற்குச் சொல்லித்தர நான்கு வகுப்புப் படிப்பு, அப்போதைக்குப் போதும். இப்படித் திட்டம் தீட்டிக் கொடுத்தார், மாமேதை லெனின். புதிய குடியாட்சியின், தலைவர் காலினின் தலைமையில், நாட்டுக் குழு அமைத்தது. நகரங்கள் தோறும் சிற்றூர்தோறும் முதியோர் எழுத்தறிவுக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவை செயல்பட்டன; சுறுசுறுப்பாகச் செயல்பட்டன. பல இலட்சம் தொண்டர்கள், இவ்வறப் பணியில் குதித்தார்கள். எங்கெங்கு காணினும் முதியோர் முயற்சி; எழுத்தறிவு பெற முயற்சி. வீடுதோறும் கல்வி மணம்.

எதிர்ப்பே இல்லையா? இருந்தது. எங்கே? மத்திய ஆசியப் பகுதியில். எத்தகைய எதிர்ப்பு? அப்பகுதியில் இஸ்லாமியப் பெண்கள் முகமூடி அணிந்திருந்தார்கள். எழுத்தறிவு பெறும் பொருட்டு, அவர்கள், பொது இடங்களுக்கு வர மறுத்து விட்டார்கள். பல்லாயிரக்கணக்கான ஊர்களில் இப்படி.

லெனின் இதற்கு என்ன செய்தார்? பெண்கள் பள்ளிக்கூடத்திற்கு வராவிட்டால், பள்ளிக்கூடம் அவர்களைத் தேடிப் போகட்டும். அவர்கள் வீடுகளுக்குச் சென்று சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்யுங்கள். பெண் தொண்டர்களை மட்டுமே அனுப்புங்கள். இப்படிச் சமாளித்தார். வெற்றி பெற்றார். எல்லோரும் எழுத்தறிவு பெற்றார்கள். தத்தம் தாய்மொழியில் படித்தார்கள். இதுவோர் புரட்சி.

★★★

12. படியுங்கள்! படியுங்கள்! மேலும் படியுங்கள்

புதியதோர் உலகம் அமைக்க, இரஷ்ஷிய மக்கள் அளப்பருந் தியாகங்களைச் செய்தார்கள்; வெவ்வேறு உருவில் செய்தார்கள்.

படைவீரர்கள், களங்களில் போராடினார்கள்; வீடிழந்து மக்களையும் பிரிந்து, உயிர் விட்டார்கள். குருதியைக் கொட்டி, சமதர்ம நாற்றைக் காத்தார்கள்.

அவர்களுக்கு வழிகாட்டிய, பிரதமர் லெனின் முதல், எல்லா அமைச்சர்களும் அரைப்பட்டினியை ஏற்று, புதுப் பயிருக்குக் காவல் இருந்தார்கள். போல்ஷ்விக் கட்சியின் செயல்வீரர்களும் அப்படியே செய்தார்கள்.

என்றைக்குமே அரைப்பட்டினியாக இருந்து பழகி விட்ட தொழிலாளர்கள், குடியானவர்கள் ஆகியோர், ஏதாவது கூடுதல் தியாகம் செய்தார்களா? ஆம். செய்தார்கள். எப்படி? அதிகப்படி வேலை செய்து, ஊதியம் பெறாது ஓர் நாள் வேலை செய்து, அத்திப் பூத்தாற்போல் சிலரா? பலரா?

தொடக்கத்தில் சிலர்; ஒரே தொழிற்சாலையில் மட்டும், எந்தத் தொழிற்கூடத்தில்?

மாஸ்கோ-கசான் இரயில்வேயின் தலைமைத் தொழிற்கூடத்தில், இத்தொண்டுப் புரட்சி அரும்பிற்று.

அக்கூடத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள், ஓர் சனிக்கிழமை, வேலை முடிந்த பிறகு, வீடுகளுக்குத் திரும்பவில்லை, அங்கேயே தங்கிவிட்டார்கள். ஓய்வெடுக்கவா? இல்லை. பின் எதற்கு? தாங்களே விரும்பி, நாட்டிற்காக வேலை செய்ய நின்று விட்டார்கள். அது எவ்வுருவில் வெளிப்பட்டது; பழுது பார்க்கும் உருவில்; ஊதியம் வாங்காமல் பழுது பார்க்கும் தொண்டாக, வெளிப்பட்டது. இரவோடு இரவாக நான்கு எஞ்சின்களையும், பதினாறு இரயில் பெட்டிகளையும் செப்பனிட்டார்கள்.

மூலைக்கு மூலை, புரட்சியாளர்களுக்கும் எதிர்ப் புரட்சி யாளருக்குமிடையே கடும் போர் நடந்த அக்கால கட்டத்தில்,

இத்தகைய உதவி பெரிதும் பயனுடையதாகும். காலத்தினாற் செய்த உதவியாகும். வெற்றிக்கும் நாட்டின் புத்தமைப்புக்கும் உயிர் நாடி போன்றதாகும். இதை உணர்ந்த, பிரதமர் லெனின், 'மாபெரும் முன் முயற்சி' என்று இதைப் பற்றிய கட்டுரையை எழுதினார்.

இது, நாட்டின் நானா பக்கங்களிலும் பொதுமக்கள் கவனத்தை ஈர்த்தது. ஏராளமானோர், இதைப் பின்பற்ற முன் வந்தனர். சனிக்கிழமை நடந்த விருப்பத் தொண்டு, என்று பொருள்படும் அ'சுபோத்னிக்' நாட்டின் நாகரீகமாகி விட்டது. அந்நாகரீகம் எல்லா நிலையினரையும் பற்றிக் கொண்டது. அக்காலம் முதல், இக்காலம் வரை, சுபோத்னிக் நடந்து கொண்டிருக்கிறது. சமுதாயப் பொதுப்பணிகள் இலவசமாகப் பெருகுகின்றன.

1920ஆம் ஆண்டு, மே நாள் விழா வந்தது. எப்படிக் கொண்டாடினார்கள்? பயனுள்ள சமுதாயத் தொண்டு செய்து கொண்டாடினார்கள்.

மாஸ்கோ கிரெம்ளின் மாளிகையில், இளைஞர்கள், இராணுவப் பயிற்சி மாணவர்களாகத் தங்கியிருந்தார்கள். அவ்வாண்டு மே திங்கள் முதல்நாள் பொழுது சரியாகப் புலரும் முன்பே, பயிற்சியாளர்கள் திடலில் அணிவகுத்து நின்றார்கள். அணித் தலைவர், அன்று அவர்கள் செய்ய வேண்டிய சமுதாய வேலைகள் பற்றி, விரிவான ஆணையிட்டார். பிறகு, பயிற்சியாளர், துள்ளிக் குதித்துப் போய், வேலையில் ஈடுபட்டார்கள். என்ன வேலை? மாளிகைத் திடலில் இரைந்துகிடந்த கூளங்கள், கட்டைகள், பலகைகள் ஆகியவற்றை அகற்றுதல்; துப்புரவாக்குதல், இராணுவப் பயிற்சியாளர்களுக்கு இடப்பட்ட வேலை.

பயிற்சியாளர்கள், அதில் ஆர்வத்தோடு பங்கு கொண்டார்கள். கட்டைகளை எடுக்க முயலும் வேளை! என்ன! பிரதமர் லெனின் அங்கே! விரைப்பாக நின்று, அறிக்கை செய்து கொண்டார். என்ன அறிக்கை.

'தங்களின் கீழ் வேலை செய்ய வந்திருக்கிறேன். விருப்பத் தொண்டில் பங்கு கொள்வோருடன் என்னையும் சேர்த்துக் கொள்ள வேண்டுகிறேன்' இப்படி லெனின் கோரினார். அப்படியே சேர்த்துக் கொள்ளப்பட்டார். அகற்றப்பட வேண்டிய கட்டைகள் கனமானவை. ஒவ்வொன்றையும் ஆறு ஆறு பயிற்சியாளர்கள் சேர்ந்து, தூக்க வேண்டியிருந்தது. லெனினும் தூக்க முயன்றார்.

"தோழர் லெனின்! இப்படி நீங்களும் சுமக்க விட மாட்டோம்; என்றார்கள் மாணவர்கள்."

"நீங்கள் சுமக்கும்போது, நான் மட்டும் ஏன் சுமக்கக் கூடாது என்று மடக்கினார் லெனின்."

"எங்களால் சமாளிக்க முடியும். ஆகவே நீங்கள் போய் விடுங்கள்" என்றான் ஒருவன்.

"நான் போகமாட்டேன்" என்று லெனின் மறுத்தார்.

ஒரு பயிற்சியாளன் வெடுக்கென்று மடக்கினான்.

"விளாதிமிர் இலியீச்! உங்களுக்கு அய்ம்பது வயது ஆகப் போகிறதே!" என்றான்.

பிரதமர் லெனின் சினந்து கொள்ளவில்லை. 'சிரித்தபடியே,'

"வயதில் பெரிய என்னிடம் வாதாடாதிரும்" என்று பதில் கூறினார். பகல் முழுவதும் பயிற்சியாளர்களோடு சேர்ந்து உழைத்தார். அப்புறம்? இலட்சோப இலட்சம் மக்கள் விருப்புத் தொண்டு வழியை - ஊதியம் பெறாத தொண்டு புரியும் வழியை மேற்கொண்டது இயற்கை.

இளைஞர்களிடையே முன்னோடித் தொண்டு உணர்வு காட்டுத்தீ போல பரவிற்று.

சமதர்ம முறையை வெற்றி பெறச் செய்யும் துடிப்பால் உந்தப் பெற்று, இளைஞர்கள் ஆற்றிய அருஞ் செயல்கள் வீரகாவியமாகும்.

இளைஞர்கள் 'இளம் கம்யூனிஸ்டுகள்' சங்கத்தை அமைத் தார்கள். அவ்வமைப்பின் ஆணையை ஏற்று, போர்க்களங்களுக்கு விரைந்து சென்றார்கள். நெடும் போர் புரிந்தார்கள்; வெற்றி வாகை சூடினார்கள். வெற்றிக்கு முன் களத்திற்குக் களம் இன்னுயிர்களை ஈந்தார்கள். கைகால்களை இழந்து மண்ணை வளப்படுத்தினார்கள்.

போர்க்கள வீரத்திற்குக் குறையாத வீரத்தை, உறுதியை, கடும் உழைப்பை, கூட்டு முயற்சியை இளம் கம்யூனிஸ்டுகள் சாதாரணப் பணிகளிலும் காட்டினார்கள்.

பொது மக்களின் நலத்திற்காக, நெடுந்தொலைவில் நடந்த, ஆபத்து நிறைந்த, வேலைகளுக்குச் சென்றார்கள். சைபீரியாவின் கடுங்குளிரில் அமைக்கப்படும் அணைக்கட்டா? மின் நிலையமா? மனிதன் கைகளால் கிளறப்படாத பரந்த கன்னி நிலங்களில் நிறுவப்படும் பண்ணைகளா? மற்றவர்கள் தங்கி, வேலை செய்யத் தயங்கும் எப்பகுதியாயினும் ஆங்கே, முதலில் வந்து நின்றவர்கள் இளம் கம்யூனிஸ்டுகளே. இப்படியொரு நல்ல சூழ்நிலை, நாகரீகம், முன்னோடித் தொண்டு மரபு உருவாயிற்று.

இளம் கம்யூனிஸ்டுகள் மேலும் மேலும் தொழிற் திறனை, தொண்டின் சிறப்பை, வளர்த்துக் கொள்ளத் துடித்தார்கள். அப்போதைக்கப்போது, மாநாட்டில் கூடினார்கள். சாதனைகள், சோதனைகள், முந்தியவற்றை எப்படிப் பெருக்குவது, பிந்தியவற்றை

மேலும் திறமையாகச் சமாளிப்பதெப்படி என்பனவற்றை ஆய்ந்து, முடிவு எடுத்தார்கள்; அவற்றையொட்டி செயல்பட்டார்கள்.

1920ஆம் ஆண்டு அக்டோபர் இரண்டாம் நாள் மாஸ்கோவில், இளம் கம்யூனிஸ்டுகளின் மூன்றாவது மாநாடு நடந்தது.

அங்கு வந்திருந்தவர்களில் பலர் போர் முனைகளிலிருந்து நேரே வந்தவர்கள். லெனின் வருகைக்காக ஆவலோடு, துடிதுடிப்போடு காத்திருந்தார்கள்.

குறித்த நேரத்தில், லெனின் வந்து சேர்ந்தார்; பேசினார். என்ன சொன்னார்.

"போர் முனைகளுக்கு விரைந்து செல்லுங்கள்; எல்லா வித தியாகங்களையும் செய்து, வெண்படைகளை முறியடியுங்கள்" என்று சொல்வார் என்று எதிர்பார்த்தார்கள்.

லெனினோ, 'தற்போது இளங் கம்யூனிஸ்டுகளின் கடமை, கற்றுக் கொள்ளுவதே' என்றார். இளைஞர்கள் திகைத்தார்கள். அதை உணர்ந்த லெனின்.

"விரைவில் எதிரிகளை விரட்டி விடுவோம்! உள்நாட்டுப் போரை முடித்து விடுவோம். அப்புறம்? கட்டுமானம் தொடங்க வேண்டும். தொழிற்சாலைகளை, ஆலைகளை, டிராக்டர்களை, இயந்திரங்களைக் கட்டியாக வேண்டும். நாட்டை மின்சாரமயம் ஆக்க வேண்டும். மின்சாரம் என்ன என்பதை இளம்கம்யூனிஸ்ட் தோழர்கள் அறிய வேண்டும்; நிறைய அறிய வேண்டும்.

இயல் அறிவு இன்றி, கம்யூனிச சமுதாயத்தைக் கட்டி அமைக்க இயலாது.

உழைக்க வேண்டும்; அறிய வேண்டும்; தொழிலாளர்களோடும் குடியானவர்களோடும் சேர்ந்து உழைப்பதால் தான் ஒருவன் உண்மையான கம்யூனிஸ்ட் ஆக முடியும்" என்று அறிவுரை கூறினார்.

'படியுங்கள்; படியுங்கள்; மேலும் படியுங்கள்' என்னும் நன்னெறியை இடையறாது, சோவியத் இளைஞர்கள் பின்பற்றி வருகிறார்கள். பெருஞ் சாதனைகளின் இரகசியங்களில் இது ஒன்றாகும்.

★★★

13. கனவு உலகவாசியா லெனின்?

மற்றவர்கள் அறிவுக்கு எட்டாதவை அறிஞர்களின் அகத்தில் பளிச்சிடும், மாமேதை லெனின் வருங்காலப் போக்கை உணர்ந்தார். அதனைப் பயன்படுத்த ஆய்த்தமானார். சோவியத் நாட்டை ஆயத்தப்படுத்தினார்.

பொது உடமைக்கு அடிப்படை, விஞ்ஞானமும் இயந்திரத் தொழில்களும் ஆகும். இயந்திரத் தொழிலின் உந்து சக்தி, மின்சாரம் என்பதை லெனின் உணர்ந்தார். எனவே, சோவியத்நாடு முழுவதற்கும் மின்சாரம் கிடைக்க வேண்டும்; பட்டிதொட்டியெல்லாம் அது சென்று வேலை செய்ய வேண்டும். இது லெனினுடைய கருத்து. நல்லெண்ணம், நற்கருத்து மட்டும் போதா. நற்கருத்துகளை செயல் திட்டமாக்கக் கூடியவர்களின் துணையும், ஒத்துழைப்பும் தேவை.

'உலகத்தின் அறிவுக்கெல்லாம் வாரிசுகள், சோவியத் மக்கள்.' இப்படி நல்வழி காட்டிய லெனின், பல்துறை வல்லுனர்களின் ஆலோசனைகளை நாடத் தயங்கவில்லை. ஒத்துழைப்பைப் பெற மறுக்கவில்லை.

கருமமே கண்ணாயிருந்த லெனின், சோவியத் நாட்டை வளப்படுத்த விஞ்ஞானிகளின், பொறியியல் விற்பன்னர்களின் ஒத்துழைப்பைப் பெற்றார்.

சார் ஆட்சிக் காலத்திலேயே, புரட்சிக் கருத்துகளைக் கொண்டிருந்த பொறியியல் அறிஞர் கிளேப் க்ரிழிழனோவ்ஸ்கி ஆவார். அவர்பால் லெனினுக்கு நம்பிக்கை அதிகம். அவர் தலைமையில் இருநூறு விஞ்ஞானிகளிடம், மின் நிலையங்களை அமைக்கும் திட்டத்தை லெனின் ஒப்படைத்தார்.

அவர்கள், பொறுப்போடு, பணிபுரிந்தார்கள். எங்கெங்கே மின் நிலையங்கள் அமைக்கலாம். எங்கெங்கே மின்சாரத்தைக் கொண்டு செல்லலாம், எவ்வளவு மின்சாரம் கிடைக்கும்; ஒவ்வொன்றையும் கட்டி முடிக்க, என்னென்ன பொருள், எந்தெந்த அளவில், தேவை. எத்தனை ஆண்டுகளில் எது எது முடியும்? இவற்றைப் பற்றி ஆலோசித்தார்கள்; திட்டந்தீட்டினார்கள்; வரைபடங்களை

உருவாக்கினார்கள். குழுத்தலைவர், அடிக்கடி லெனினைக் கண்டு பேசினார். ஆட்சிக் கண்ணோட்டமும் வல்லுநர் நோக்கும் இணைந்ததால், மளமளவென்று பணிகள் நடந்தன.

1920 ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், சோவியத்துகளின் எட்டாவது அகில ருஷ்ஷியக் காங்கிரசு கூடியது.

எழுச்சிப் பேச்சுகளை மட்டும் கேட்டுவிட்டுப் போக அக்காங்கிரசு கூடவில்லை. அடுத்து வரும் ஆண்டுகளில் செய்ய வேண்டிய ஆக்கப் பணிகளை அவற்றின் குறியீடுகளைப் பற்றி முடிவெடுக்கவும் கூடினார்கள்.

முதல்நாள் உரையாற்றிய பிரதமர் லெனின்:

“சோவியத்களிடம் (மக்கள் மன்றங்களிடம்) ஆட்சியுரிமையும் நாடு முழுவதும் மின்சார மயம் ஆக்கப்படுவதும் சேர்ந்த கூட்டுத் தொகையே கம்யூனிசம்” என்று சுருங்கச் சொல்லி விளங்க வைத்தார்.

அரசின் சார்பில் ஆயத்தஞ் செய்துள்ள மின் நிலையங்களின் இணைத் திட்டத்தை விளக்கும் பொறுப்பு எவருக்கு? மின் குழுத் தலைவர் கிளேப், திட்டத்தை விளக்கினார்.

அவர், மேடை மேல் இருந்த பெரிய வரைபடத்தின் ஓர் இடத்தை கையிலிருந்த சுட்டுக்கோலால் அழுத்துவார். அடுத்த நொடி, அவ்விடம் ஒளிவிடும். பிறகு? மற்றோர் மையத்தைத் தொடுவார். அது ஒளிவிடும். ஒவ்வொன்றும் அமைக்கவிருக்கும் ஒரு மின் நிலையத்தைக் குறிக்கும். இப்படி, நாடு தழுவிய மின்மயத் திட்டத்தை காங்கிரசுக்கு விளக்கினார், காங்கிரசு அதை ஒப்புக் கொண்டது. மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

1920 டிசம்பரில் கூடிய காங்கிரசுக்கு முன்பு, ஆங்கில அறிஞர் ஒருவர் இரஷ்ஷியாவிற்கு வந்தார். அவர் பெயர் எச்.ஜி.வெல்ஸ் என்பதாகும். அவர் சிறந்த எழுத்தாளர்; முற்போக்கு எழுத்தாளர்; உலகப் புகழ் பெற்ற சில விஞ்ஞானப் புதினங்களை எழுதியவர். இவற்றிற்கும் மேலாக, முதலாளித்துவ வாழ்க்கை முறையின் குறைகளை அம்பலப்படுத்தி எழுதியவர்.

அம்முற்போக்கு எழுத்தாளர் புதிய சமதர்ம நாட்டைக் காண வந்தார். பீட்டர்ஸ்பர்க்கிலும் மாஸ்கோவிலும் தெருத்தெருவாகச் சுற்றிப் பார்த்தார். தொழிற்சாலைகளுக்குப் போனார். அவற்றில் பாதிக்கு மேல் இயங்கவில்லை. பள்ளிகளைப் பார்வையிட்டார். மாணவர்களுக்குப் போதிய பாட நூல்கள் இல்லை. ஒரே நூலை வைத்துக் கொண்டு மூன்று நான்கு பேர்கள் கற்றதைக் கண்டார். ஒரு பத்தை ரொட்டியே ஒவ்வொரு மாணவர்க்குக் கிடைத்த சிற்றுண்டி என்பதையும் தெரிந்து கொண்டார்.

சீரழிவு, பஞ்சம், பட்டினி ஆகியவற்றிற்கு யார் பொறுப்பாளி? புதிய ஆட்சியா? இவற்றைப்பற்றி, வெல்ஸ் பொது மக்களிடம் பேசிப் பார்த்தார். முந்தைய முதலாளித்துவ ஆட்சியும் அதை மீண்டும் உயிர்ப் பிக்க நடத்தும் எதிர்ப்புரட்சியுமே என்று புரிந்து கொண்டார். பிறகு?

பிரதமர் லெனினைக் கண்டார். அவரோடு உளந்திறந்து உரையாடினார். உரையாடலின் போது, சோவியத் நாட்டை மின்மயமாக்கத் திட்டம் போட்டுக் கொண்டிருப்பதைப் பற்றி லெனின் குறிப்பிட்டார். லெனின், சரளமான ஆங்கிலத்தில், நாடு தழுவிய மின் திட்டத்தை வெல்ஸுக்கு எடுத்துரைத்தார். கற்பனைக் கதைகள் எழுதும் வெல்ஸ் மலைத்துப் போனார். ஆனால் வாயடைத்துப் போகவில்லை.

"தோழர் லெனின்! உங்கள் நாடு மிகப் பெரியது. இப்பரந்த நாட்டில் அழிவு, நாசம் இவையே கண்முன்னே உள்ளன. பட்டினிச் சாவே தென்படுகின்றன. போர்க்குரலே கேட்கின்றன. இருப்புப் பாதைகள் உடைபட்டுக் கிடக்கின்றன. தொழிற்சாலைகள் தூங்குகின்றன."

"இத்தனை கோரங்களுக்கிடையிலும் இப்படியொரு கனவுகண்டு கொண்டிருக்கிறீர்கள்!" என்று மனந்திறந்து பேசிவிட்டார், வெல்ஸ்.

லெனின் எரிச்சல் கொள்ளவில்லை. பொறுமையோடு, உறுதியோடு,

"நீர் சொல்வது உண்மை. இருப்பினும் மின்நிலையங்களைக் கட்டி முடிப்போம். அவை உற்பத்தி செய்யும் மின்சாரத்தைத் தொழிற்கூடங்களுக்குக் கொடுப்போம். மின்சார இரயில்களும் ஓட்டுவோம்" என்றார்.

"நீர் அற்புத மனிதர்! கிரெம்ளின் மாளிகையில் இருந்து கொண்டு, கற்பனைக் கனவு காணுகிறீர்" என்று வெல்ஸ் மதிப்பிட்டார்.

"பத்தாண்டு கழித்து, திரும்பி வந்து பாரும்" என்பதே பிரதமர் லெனினுடைய பதிலாக அமைந்தது.

வெல்ஸ் அதைப் பேச்சுப் போக்காக மதிக்கவில்லை; ஆணையாகவே கொண்டார். பத்தாண்டுகளுக்குப் பின்னர், மீண்டும் சோவியத் நாட்டிற்குத் திரும்பி வந்தார்.

கண்டதென்ன? புதிய புதிய மின் நிலையங்கள்; ஊர்தோறும் மின்விளக்குகள்; மின்னாற்றலால் இயங்கும் தொழிற்கூடங்கள்.

பரந்த சோவியத் நாட்டை மின்மயமாக்குவது முன்னர் நினைத்தது போல், கற்பனைக் கனவல்ல திண்மையும், ஒருமையும் பெற்ற மக்களின் ஆற்றலுக்கு உட்பட்டதே என்பதை வெல்ஸ் உணர்ந்தார்.

இதற்கிடையில், உள்நாட்டுப்போர் ஓய்ந்தது; வெளிநாட்டுப் படையெடுப்புகள் தோற்றன; சோவியத் ஆட்சியை நாடு ஏற்றுக் கொண்டது. சமதர்ம முறையை சமுதாயம் ஏற்றுக் கொண்டது.

போரும், படையெடுப்பும் எப்போது நின்றன? 1921ஆம் ஆண்டு டிசம்பரில் நின்றது. அதாவது நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு ஓய்ந்தன. அதற்குள், ஒருகோடி உயிர்களைப் பலி கொண்டன. உழைக்கும், உற்பத்தி செய்யும், செயல்வீரர்களைக் கொள்ளை கொண்டன. வயல்களைப் பொசுக்கி விட்டன, தொழிற்கூடங்களை இடித்து பாழ்மேடுகளாக்கி விட்டன; உண்ண உணவில்லை. விதைக்க விதையில்லை. கதகதப்பூட்ட விறகும் இல்லை. இவை போதாதென்று இயற்கையும் தொல்லை கொடுத்தது. எப்படி?

குளிர்காலத்தில் வெண்பனி பெய்யவில்லை. எனவே, விளைநிலங்கள் ஈரத்தை இழந்தன. வசந்தம் வழிகாட்டும் என்று எதிர்பார்த்தார்கள்? உருகும் பனிக்கட்டிகள்தான் இல்லை. தூறல்களாவது இருந்ததா? இல்லை. வசந்தம், கோடை ஆகிய இரு பருவங்களிலும் தூறவே இல்லை. உள்நாட்டுப் போரிலும் வெளிநாட்டுப் படையெடுப்பிலும் இருந்து விடுபட்டாலும் பஞ்சத்தின் பிடி இறுகிற்று. எப்படிச் சமாளித்தார் லெனின்.

★★★

14. நோய்வாய்ப்பட்டார்

'போர் முடிந்த உடனே, பழைய நிலைக்குப் போக முடியாது. மேலும் சிறிது காலம் பற்றாக்குறைகளைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்.'

போர்க்காலத்தில் செய்ததைப்போல், 'உள்ளவற்றை முடிந்தவரை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்' என்று அரசு பொதுமக்களை வேண்டிக் கொண்டது. வேண்டுகோள் தந்திகள் பல ஊர்களுக்கும் பறந்தன.

உக்ரேய்னா பகுதியில் விளைச்சல் நிறைய இருந்தது. உக்ரேய்னா மக்களுக்கு லெனின் கடிதம் எழுதினார். பிரதமர் லெனின் வேண்டுகோள் கடிதம் எழுதினார். வேண்டுகோள் இதோ:

"உதவி விரைவாகத் தேவை; ஏராளமாகத் தேவை."

வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கும் உதவி கோரி செய்தி அனுப்பினார்.

நம்பிக்கை இருவழிப்பாதை சோவியத் ஆட்சி மக்களை நம்பிற்று; பொது மக்களும் நம்பிக்கைக்கு உரியவர்களாக நடந்தார்கள். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பினார்கள்.

இப்பருவம் விளையாவிட்டால், அடுத்த பருவ விதைக்குப் பஞ்சம் வரும். அதைச் சமாளிக்க முன்கூட்டியே, ஏற்பாடு செய்தார். சோவியத் வங்கிகளில் இருந்த தங்கத்தில் ஒருகோடியே இருபது இலட்சம் ரூபிள் தங்கத்தைச் செலவிட ஆணையிட்டார். எதற்காக அத்தங்கம்; வெளிநாடுகளில் விதைகள் வாங்க அத்தங்கம் என்றார்.

உள்நாட்டுப் பொருளாதாரக் கொள்கையில் சிறுமாற்றம் செய்தார். போர்க் காலத்தில், தானியம் அறுவடையானதும் விதைக்காகவும் வீட்டு செலவுக்கும் மட்டும் வைத்துக் கொண்டு மற்ற தானியத்தை அரசுக்குக் கொடுத்துவிட வேண்டும். இதில் கண்டிப்பாக இருந்ததால், செஞ்சேனைக்கு உணவு அளிக்க முடிந்தது. பொதுமக்கள் பட்டினியையும் ஓரளவு குறைக்க முடிந்தது. போர் முடிந்த பிறகும் அதே முறையைக் கையாளலாமா?

கூடாது என்றார்கள். எவர் சொன்னார்கள்? நாட்டுப் புறங்களிலிருந்து வந்த குடியானவர்கள் லெனிடம் அப்படிக் கூறினார்கள். அவர்களில் பலர், அரசியல் அறிவு அற்றவர்கள். ஏன் எழுத்தறிவும் அற்றவர்கள். இருப்பினும் லெனின், அவர்களுக்குச் செவி சாய்த்தார். ஏன்? அவர்கள் பட்டறிவில் மிகுந்தவர்கள். அவர்களுடைய கருத்துக்களை லெனின் ஆழ்ந்து சிந்தித்தார். குடியானவர்கள் சொன்னது என்ன?

உபரி வசூலிப்பைக் கைவிட்டு விடவேண்டும். அதற்குப் பதில், நிலப்பரப்புக்கு ஏற்றபடி, ஓர் குறிப்பிட்ட அளவு தானியத்தைக் குடியானவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதாவது நிலவரி வாங்க வேண்டும். அதைத் தானியமாக வாங்க வேண்டுமென்பது அவர்கள் ஆலோசனை. அப்படிச் செய்தால் நிறைய உற்பத்தி செய்தவருக்கு நிறையத் தானியம் மிச்சமாகும். அதை விற்று வீட்டுக்கு வேண்டிய துணிமணிகள், சோப்பு, மண்ணெண்ணெய், அரிவாள், கலப்பை ஆகியவற்றை வாங்கக்கூடும்.

பொதுமக்கள் மூச்சுவிட வழிசெய்யும் ஆலோசனை இது.

புதிய ஆட்சி வந்தும் நான்காண்டுப் பட்டினியால் தவித்தவர்களுக்குச் சற்று பரிகாரம் கிடைத்தால்தானே துளிர்ப்பார்கள். உலகியல் பட்டறிவு நிறைந்த குடியானவர்களுக்கு இது தெரிந்தது. அதை ஒளிக்காமல் சொல்ல உரிமை இருந்தது. அதைக் கேட்டதோடு, சிந்திக்கவும் முன்வந்த பிரதமர் லெனின் இருந்தார்.

லெனின், தோழர்களோடு கலந்து பேசினார். தாமேயும் தீர்க்க ஆலோசித்தார். கட்சியின் பத்தாவது காங்கிரசின் முன் புதிய பொருளாதாரக் கொள்கையை வைத்தார். அது என்ன?

இயந்திரத் தொழில்கள், போக்குவரத்துக்கள், வங்கிகள் ஆகியவை நாட்டுடைமையாகத் தொடரும், அவற்றை வலுவும் விரிவும் படுத்துவதில் அரசு முனையும். ஆனால், சிறு அளவில் தனியார் வாணிகத்தை அனுமதிப்போம்.

பத்தாவது போல்ஷ்விக் காங்கிரசு, இத்திட்டத்தை உறுதிபடுத்தியது. ஏன், அப்படிச் செய்தார்கள்? கொள்கை உறுதியின்மையாலா? இல்லை. அன்றைய சூழ்நிலைக்கு, அடுத்து நாடு தழுவிய நடக்க வேண்டிய ஆக்கப்பணிகளுக்கு, ஒன்று மிகத் தேவை என்று உணர்ந்தார்கள். அந்த ஒன்று எது? நகரங்களுக்கும், சிற்றூர்களுக்குமிடையே நட்பை வளர்ப்பதாகும். தொழிலாளர்களோடு உழவர்களும் ஒருங்கிணைந்து நிற்க வேண்டும்; உழைக்க வேண்டும். இது எவ்வளவு முன்னுரிமைக்குரியது என்பதை உணர்ந்த போல்ஷ்விக் கட்சி, புதிய பொருளாதாரத் திட்டத்தை ஏற்றுக்கொண்டது.

திட்டங்கள், எவ்வளவு உயர்ந்த குறிக்கோளைக் கொண்டிருந் தாலும் அவற்றை நடைமுறைப்படுத்துகையில் நீக்குப்போக்குக்கு இடமளித்தல், இன்றியமையாதது. இந்நடைமுறை நுணுக்கத்தை லெனினும் அவரைப் பின் பற்றிய தோழர்களும் புரிந்து அதற்கேற்ப நடந்தார்கள். எனவே வெற்றி பெற முடிந்தது.

உள்நாட்டுப் போரும் வெளிநாடுகளின் படையெடுப்பும் ஓய்ந்த பிறகு, சோவியத் பிரதமர் லெனின், நாட்டை மின்மயமாக்குவதிலும், தொழில்மயமாக்குவதிலும் தீவிரமாக ஈடுபட்டார். அதேநேரத்தில் புதிய சோவியத் சமதர்ம ஆட்சி, மக்கள் இனத்திற்கு ஆற்ற வேண்டிய கடமையை மறந்துவிடவில்லை. அதன் விளைவு?

கிரெம்ளினில், சார் மன்னனின் கொலு மண்டபத்தில் கம்யூனிஸ்ட் அகிலத்தில் நான்காவது காங்கிரசு கூடியது. அப்போது அனைத்துலக தொழிலாளர் கீதம் பாடப்பட்டது. பிரதமர் லெனினும் சேர்ந்து பாடினார். பின்னர் உரையாற்றினார்.

எம்மொழியில், இரஷ்ஷிய மொழியில் அல்ல, ஜெர்மன் மொழியில் திகைக்காதீர்கள். பேச்சு, பலருக்கும் கருத்துக்களை வாரி வழங்க; மொழிப்பற்றைக் காட்ட அல்ல. வந்திருந்தவர்களில் பலருக்கு இரஷ்ஷியமொழி தெரியாது. ஜெர்மன் மொழி தெரியும். எனவே அம்மொழியில் பேசினார்.

பேச்சு, ஒளிவு மறைவின்றி இருந்தது. புதிய ஆட்சிக்கு வந்த சோதனைகள், நெருக்கடிகள், இழப்புகள், வெற்றிகள், சீரமைப்புகள் ஆகியவற்றைப் படம்பிடித்துக் காட்டினார். இனி செய்ய வேண்டியவற்றைப்பற்றி மழுப்பவில்லை.

• 'வாணிகம் செய்யக் கற்கிறோம். இயந்திரங்களை ஓரளவே அமைத்துள்ளோம். இன்னும் நிறைய இயந்திரங்கள் செய்தல் தேவை. இயந்திரங்கள் இல்லாமல், கம்யூனிசத்தை நிறுவ முடியாது' என்றெல்லாம் பட்டாங்கமாகப் பேசினார். என்ன வழி காட்டினார்?

'எங்கள் குறிக்கோள், கம்யூனிசமே. வெளிநாட்டுத் தோழர்களே உங்கள் குறிக்கோள், புரட்சி' இப்படி வழிகாட்டினார், மாவீரர் லெனின்.

கூட்டத்திலிருந்த, வெளிநாட்டுச் சுரங்கத் தொழிலாளி ஒருவர், சோவியத் நாடு நம் கலங்கரை விளக்கு. அது காட்டும் வழியில் செல்வோம்? என்று முழங்கினார். எல்லோருடைய எண்ணங்களையும் பிரதிபலித்தார்.

அவ்வழியே நடக்கிறது, சோவியத் நாடு; விரைந்து செல்கிறது.

வெளிநாடுகள்? புரட்சி வழியே சில; வேறுவழியில் பல.

உயர்ந்த இலட்சியம், மிகப்பெரிய உந்தாற்றல்; தன்னை மறக்கச் செய்யும் உந்தாற்றல், இலட்சியத்தை அடையப் பாடுபடுதல், தொடர் உந்தாற்றல், அத்தகைய முயற்சியில் வழிபாடு அறைகூவல்கள், உந்தாற்றலைப் பெருக்குபவை. புதியதோர் உலகம் செய்யும் புரட்சிப் பணிக்கு தன்னை முழுமையாக ஒப்படைத்துவிட்ட லெனினுள் இத்தனை உந்தாற்றல்களும் வெள்ளமெனப் பெருகின. அவற்றின் ஓட்டத்தால் இரவு பகல் பாராது உழைத்தார். ஓயாத சிந்தனைகள், அவை பெற்றெடுக்கும் கருத்துக்களை எழுத்தில் வடிக்கும் வேலை, அவற்றைத் திட்டங்களாக்கும் பொறுப்பு; இதை, இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்தல்; அவர்களைத் தேடி ஒப்படைத்தல் கண்டிப்பும் கனிவும் கலந்த தோழமையால் அவர்களை இயக்குதல். இவ்வளவு பொறுப்புகளையும் மேற்கொண்ட லெனின், பலநாட்கள் இரவு முழுவதும் விழித்திருப்பார்; சிந்திப்பார்; அல்லது செயல்படுவார். எத்தனை நாட்கள்தான் உடல் தாங்கும்? பட்டினியைப் பங்கிட்டுக் கொண்ட உடல் ஆயிற்றே, லெனினும் நோய்வாய்ப்பட்டார்.

★★★

15. லெனின் உயிர் நீத்தார்

இயந்திரம் எவ்வளவு நன்றாகப் பராமரிக்கப்பட்டாலும் தேய்விலிருந்து தப்ப முடியாது. எவ்வளவு அற்புதமான, நுட்பமான கருவியானாலும் இவ்விதியிலிருந்து விலக முடியாது.

சிந்திக்கும் பருவம் முதல் ஆழ்ந்த சிந்தனை; புரட்சிகரமான சிந்தனைகள்; அவற்றிற்கு உருக்கொடுக்கும் ஓயாத எழுத்துக்கள். அவற்றின் சொற்களை அளந்து வைக்கும்பாடு.

இளமை தொட்டுப் போராட்ட வாழ்க்கை; சிறைப்படல்; வனவாசம்; நாடுவிட்டு நாடு செல்லுதல்; மாறுவேட வாழ்க்கை; தோழர்களோடு தோழராக பசியையும், பட்டினியையும் தாங்குதல். இத்தனைக்கிடையிலும் உருக்கு உள்ளமும், எஃகு உடலும் பெற்ற லெனின் பல்லாண்டு நலத்தோடு இருந்தார். அக்டோபர் புரட்சியை வெற்றிபெறச் செய்தார். எதிர்ப்புரட்சியை முறியடித்தார் எழுத்தறிவுப் புரட்சி வெல்வதைக் கண்டு மகிழ்ந்தார். பஞ்சத்தையும் பட்டினியையும் வெல்ல, வழிகாட்டினார். மின்மயமாக்கும் கனவு கண்டார். அதற்கான திட்டங்களை உருவாக்கினார். அவற்றை நிறைவேற்ற ஏற்பாடுகள் செய்தார்.

இரஷ்ஷியப் பேரரசில் அடிமைப்பட்டிருந்த நாட்டினங்களுக்கு மொழி உரிமையும், ஆட்சி உரிமையும், பிரிந்து போகும் உரிமையும் வழங்கினார். எல்லா வகையிலும் புதியதோர் வாழ்க்கை முறையை அமைப்பதில் வெற்றிக் கோட்டை அடைந்துவிட்டார்.

ஆயிரம் மீட்டர் ஓட்டம், பலரும் வழியில் வீழ்ந்து விட்டார்கள். மாவீரர் மட்டும் வெற்றிக் கோட்டையைக் கடந்து விட்டார். அடுத்த நொடி வீழ்ந்து விடுவார். இது இயற்கை.

மாவீரர் லெனினும் அந்நிலையை எட்டி விட்டார் போலும்.

பதினான்கு வல்லரசுகளின் படையெடுப்புகள் 1921இல் தோற்றன. அவ்வாண்டு உள்நாட்டுப் போரும் ஓய்ந்தது. புதிய பாட்டாளி ஆட்சி வேரூன்றி விட்டது. அதை எவரும் அழிக்க இயலாது என்பது புலனாகி விட்டது.

“சோவியத் ஆட்சி கவனிக்காவிட்டால் கிழவர்களை கவனிப்பார் எவர்?” என்று ஓர்முறை சுட்டிக்காட்டினார்.

“குழந்தைகளுக்கு அதிக உணவு தேவை, எப்படியாவது ஏற்பாடு செய்யுங்கள்” இப்படி ஆணையிட்டார்.

முதியோரையும், குழந்தைகளையும் கவனித்துக் கொள்ளுவார்கள். அவர்களுடைய வயிற்றுக்கு உணவு, அறிவுக்குக் கல்விக் கிடைக்கும் என்னும் விடியல் வெளிச்சம் தென்பட்டது.

அந்நிலையில் பிரதமர் லெனின் நோய்வாய்ப்பட்டார். 1922ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஓர் முறை நோய்க்கு ஆளானார். என்ன நோய்? அப்பேராசான், மனித சக்திக்கு மீறிய வேலை - கருத்தாலும் கரத்தாலும் செய்ததால், வந்த நோய். அதைப் போக்க மருந்து கொடுத்தார்கள், அதைவிட அதிகமாக ஒய்வு. இப்படி மருத்துவர்கள் வழிகாட்டினார்கள்.

சில திங்கள் ஒய்வு எடுத்துக் கொண்டார். ஆனால், லெனினைப் போன்றவர்கள் நெடு நாட்களாக ஒய்ந்திருக்க முடியாதே! சும்மா இருப்பதே, புது நோயாகிவிடுமோ என்று எண்ணி, முப்பது நாற்பது மணித்துளிகள், அலுவல் பார்க்கலாம்; கருத்துக்களை, கட்டுரைகளை, ஆணைகளைச் சொல்லலாம்; சுருக்கெழுத்துக்காரி, அதை எழுதிக் காட்டி, ஒப்புதல் பெறலாம். அந்த அளவுக்கு விட்டார்கள்.

நாற்பது மணித்துளிகள் சொல்ல, பல மணிகள் சிந்தித்தார்; பல சிக்கல்களைப் பற்றிச் சிந்தித்தார்; பல திட்டங்களைத் தீட்டினார். அதன் பொல்லாத விளைவு?

1922இன் பிற்பகுதியில் மீண்டும் நோய்வாய்ப்பட்டார். அவ்வாண்டு டிசம்பர் கடைசி நாட்களில், சோவியத் ஒன்றியத்தின் அனைத்து சோவியத்துகளின் முதலாவது காங்கிரசு நடந்தது. அக்காங்கிரசில்தான் சோவியத் சோஷியலிஸ்ட் குடியரசுகளின் ஒன்றியம் நிறுவும் உடன்படிக்கை உறுதிப்பட்டது.

உடல் நலமிழந்து, படுத்த படுக்கையாகிவிட்ட லெனின், அக்காங்கிரசில் நேரடியாகக் கலந்து கொள்ள முடியவில்லை. நேரில் பேசியிருந்தால் என்னென்ன சொல்லியிருப்பாரோ அவ்வளவும் சிந்தித்துச் சொல்லி, எழுத்தில் வடிக்க வைத்து விட்டார்.

லெனின் சோவியத்துகளின் காங்கிரசுக்குக் காட்டிய வழிக்கோடுகள் என்ன?

‘சோவியத் ஆட்சி, நாட்டு இனங்களிடம், சார் ஆட்சியின் அணுகுமுறையைப் பின்பற்றக் கூடாது. சார் ஆட்சியில், பிற பகுதிகளும் இரஷ்ஷியப் பகுதிகளாகக் கருதப்பட்டன. உஸ்பெக்,

உக்ரேய்னா, அர்மீனியா, ஆஜர் பெய்சான் மக்களெல்லாம், சாரின் அடிமைகள், அம்மக்களுக்கு எவ்வித உரிமையும் கிடையாது. எல்லாப் பகுதிகளும் இரஷ்ஷிய மொழியே ஆட்சி மொழி; பாடமொழி.'

'சோவியத் ஆட்சி, அந்த ஆதிக்கப் போக்கை விட்டு விட வேண்டும். அந்தந்தப் பகுதி வாழ் மக்கள், தத்தம் தாய்மொழியிலேயே கல்வி பெறலாம். ஆட்சி நடத்தலாம். இத்தகைய உரிமையை வழங்குவோம். என்ன மொழிகளுக்கும் சோவியத் நாட்டின், சம மதிப்பும், உரிமையும் கொடுக்க வேண்டும்.'

'பிற இன மக்கள் தாங்களாகவே விரும்பி, இரஷ்ஷிய சோஷியலிசக் குடியரசோடு இணைந்து, ஓர் ஒன்றியமாவதை ஏற்போம். சார் செய்தது போல் அவர்களை அடிமைப்படுத்திச் சேர்த்து வைக்கக் கூடாது' இப்படி வழிகாட்டினார். அவற்றை ஏற்றுக் கொண்டார்கள்.

சோவியத் ஒன்றியத்தில் சிறிய குடியரசுகள் உள்ளன. பெரிய குடியரசுகளும் உள்ளன; ஆனால், அவை அனைத்தும் சமம், எப்படி? நாடாளுமன்றத்தில் இரு அவைகள் உண்டு. ஓர் அவை மக்கள் அவை. மற்றொன்று குடியரசுகளின் அவை. முந்தியதற்கு மக்கள் எண்ணிக்கை அடிப்படையில் உறுப்பினர்கள் அதாவது சிறிய குடியரசுகளிலிருந்து சிலரும், பெரிய குடியரசுகளிலிருந்து பலரும் போவார்கள். ஆனால், குடியரசுகளின் அவைக்கோ, எல்லாக் குடியரசுகளுக்கும் ஒரே எண்ணிக்கையில் உறுப்பினர்கள். அடிப்படை மாற்றங்களை இரு அவைகளும் சேர்ந்தே செய்ய முடியும்.

ஒவ்வோர் குடியரசுக்கும் தனிக் கொடி உண்டு. பிரிந்து போகும் உரிமை உண்டு. எல்லா இன மக்களும் தெரிந்து, விரும்பி, இணைந்ததால் பிரிந்து போகும் நினைப்பே எழவில்லை.

1923ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 14ஆம் நாள் லெனினுடைய உடல்நிலை மோசமாகிவிட்டது. அவர் பேசும் திறனை இழந்துவிட்டார். 'அரசாங்க அறிவிப்பு' அச்செய்தியை வெளியிட்டது. நாடு கலங்கிற்று. மக்கள் கவலையோடு செய்தித்தாள்களை வாங்கிப் படித்தார்கள். தொடர்ந்து பல நாட்கள் ஏக்கத்தோடு இருந்தார்கள்.

மருத்துவர்கள் ஆலோசனைப்படி லெனின், 'கோர்க்கி' என்னும் ஊரில் குடியிருக்கப் போனார். அங்கிருந்த மாளிகையிலும் ஒரே ஒரு அறையை மட்டுமே பயன்படுத்தினார். வழக்கமான எளிய வாழ்க்கை, ஆறு திங்களுக்குமேல் ஓடிவிட்டன.

ஓர்நாள் லெனின், மாஸ்கோவைப் பார்க்க விரும்பினார். மருத்துவர்கள் வேண்டாமென்றார்கள். லெனின், நினைத்ததை முடித்தார்.

காரில் மாஸ்கோ சென்றார். கிரெம்ளினுக்குள் நுழைந்தார். அமைச்சர்களின் தலைமையக அறையில் புகுந்தார். பழைய நினைவுகள் பொங்கின.

எத்தனை இடங்களைச் சமாளித்தார்கள், தன் தோழர்கள்! எத்தனை அறிய செயல்களைப் புரிந்தார்கள்! பாட்டாளி இனம் பாராளும் இனமாக மாறி, வருவதை உணர்ந்து மகிழ்ந்தார்கள்.

அறையில் புகைபோக்கி கண்ணில் பட்டது. புன்னகை பீறிட்டது. புன்னகை பீறிட்டது ஏன்?

அமைச்சரவைக் கூட்டத்தில் எவரும் புகைப்பிடிக்கக் கூடாது. கூட்டம் நெடுநேரம் நடக்கும்போது? பொறுக்க முடியாத அமைச்சர், தனியே எழுந்து போய் புகைபோக்கிக்குப் பின்னால் ஒளிந்து புகைபிடித்துவிட்டு, தன் இடத்திற்கு வந்து அமர்வார். இது நினைவுக்கு வரவும் அவருக்குப் புன்னகை வந்தது.

லெனின், வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த மாஸ்கோவை சுற்றிப் பார்த்தார். சோவியத் பொருளாதார வளர்ச்சிப் பொருட்காட்சியைச் சுற்றி வந்தார். லெனினுடைய யோசனைப்படி அது புதிதாக அமைக்கப்பட்டது. சோவியத் ஆண்டுகளில் ஏற்பட்ட மாற்றங்களை, பல்துறை வளர்ச்சிகளை உள்ளவை உள்ளவாறே எடுத்துக் காட்டுகிறது. அக்காட்சி, அன்றுமுதல் இன்றுவரை நிலையான காட்சியாக விளங்குகிறது.

லெனின், மாஸ்கோவைப் பார்த்துவிட்டு கோர்க்கிக்குத் திரும்பினார். உள்ள நிறைவு சற்று உதவி செய்தது போலும். ஓரளவு உடல் நலம் பெற்றார். மற்றவர்களோடு சேர்ந்து, ஓர்முறை வேட்டைக்கும் சென்றார். நலமே திரும்பி வந்தார். எனவே, முழுநலம் பெற்று விடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. அத்தகைய நற்செய்தியை மக்கள் நாள்தோறும் எதிர்பார்த்தார்கள்.

நோய் வென்றது. உடல் நலம், கொடுப்பதுபோல் காட்டி ஏமாற்றியது. 1924ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 21ஆம் நாள் உலகின் தலையில் இடி விழுந்தது. பாட்டாளி வர்க்கம் பதைபதைத்தது. ஏன்? அன்று மாலை ஆறு மணி அய்ம்பது மணித்துளி லெனினை மீளாத் துயிலில் ஆழ்த்தியது.

உலகின் தன்னேரிலாத சிந்தனையாளர், சிந்தையின் அளவிற்கும், தன்மைக்கும் சமமான சாதனைகளைக் குவித்துக் காட்டிய, பெருஞ் செயல் வீரர், லெனின், நிலையான ஓய்வு பெற்றார்.

★ ★ ★

16. லெனின் வாழ்கிறார்; வாழ்விப்பார்

அறிவுச்சுடர் லெனின் மூச்சு அடங்கியது; சிந்தனைச் சுனை வற்றியது; புரட்சிக் கனல் தணிந்தது; சமதர்மச் சிற்பி ஓய்ந்து விட்டார்.

அச்செய்தி, காட்டுத்தீப்போல் பரவியது. கண்ணீர் வெள்ளம் பெருகிற்று; மக்கள் வெள்ளம் கோர்க்கியை நோக்கிப் புரண்டது. மாஸ்கோவை நோக்கிப் பாய்ந்தது. இடையிலுள்ள இரயில் பாதை முழுவதும் மூடிவிட்டது.

லெனின் அவர்களின் உடல், கோர்க்கியிலிருந்து, மாஸ்கோவிற்குக் கொண்டு செல்லப்பட்டது. முதலில் வீட்டிலிருந்து, இரயில்வே நிலையத்திற்கு சவப்பெட்டியை எடுத்துச் சென்றார்கள். ஆறு கிலோ மீட்டர் தூக்கிச் சென்றார்கள். சனவரித் திங்களின் ஊதல் காற்று சீறிற்று. வானம் அழுவதுபோல், வெண்பனி பொழிந்தது. அத்தகைய பருவ நிலையிலும், வழிநெடுகிலும் மக்கள் கூட்டம் ஆண்களோடு போட்டியிட்டுக் கொண்டு பெண்கள்; முதியோரோடு மோதிக் கொண்டு சிறுவர் சிறுமியர், கண்ணீரும் கம்பலையுமாக தங்கள் முதல் தோழருக்கு இறுதி அஞ்சலி செலுத்தக் குழுமியிருந்தார்கள். தண்டவாளங்களின்மேல் மக்கள் அசைவின்றி நின்றார்கள். எஞ்சின் எவ்வளவு ஊதியும் மக்கள் அசையவில்லை.

எஞ்சின் ஓட்டி, வெறும் தொழிலாளி அல்ல; தந்திரசாலியும்கூட. அவர் இருபத்தோரு ஆண்டுகள் அப்பணி புரிந்தவர். அதே எஞ்சின் 2-127-அய் ஓட்டியவர். அது போர்க் காலங்களில் ஆற்றிய பணி பெரிது. பஞ்சப் பகுதிகளுக்கு பொருட்களைக் கொண்டு சென்று, மக்கள் நெஞ்சில் இடம்பிடித்துக் கொண்டது.

அந்த எஞ்சின் ஓட்டி, இரயில் வண்டியை மக்களுக்கு அருகில் நிறுத்தினார்.

"தோழர்களே! இந்த எஞ்சின் ஓட்டி நான் மட்டுமல்ல. தோழர் லெனின், இதன் கௌரவ, இணை ஓட்டியாவர். ஒருபோதும் நேரம் தவற மாட்டேன் என்று அவருக்கு வாக்குறுதி கொடுத்திருக்கிறேன். இன்றும் அச்சொல்லைக் காப்பாற்ற உதவுங்கள்" என்று

விண்ணப்பித்தார்; அழுதார்; மக்கள் மட்டும் சும்மா இருந்தார்களா? தேம்பித்தேம்பி அழுதார்கள். நேரம் தவறாமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய தோழர் லெனினுக்கு உண்மையான அஞ்சலி, நேரங் காக்க உதவுவது என்று உணர்ந்தார்கள். வழி விட்டார்கள்.

மாஸ்கோவில், மக்கள் கடலுக்கு ஊடே, தோழர் லெனின் உடல் தாங்கிய பேழையை எடுத்துச் சென்றார்கள். பல தெருக்களின் வழியே சென்றார்கள். தொழிற் சங்க மாளிகையில், மக்கள், அஞ்சலிக்கு வைத்தார்கள். நாள்தோறும் சாரை சாரையாக மக்கள் வந்தார்கள்? இறுதி வணக்கம் செலுத்தினார்கள். வந்தவர்கள் பல மொழியினர், பல பணியினர்; பல வயதினர்; ஏன்? பல நாட்டவர்கள் கூட.

ஊசிபோல் குத்தும் பனிமழை; நடுங்கும் கடுங்குளிர். மக்கள் எதையும் பொருட்படுத்தவில்லை; பொதுமக்கள், என்று கண்டார்கள், தோழமை நிறைந்த, அத்தகைய தலைவரை யாரென்று அடையாளம் தெரியாத பொது மக்களைப் பற்றியே சிந்தித்த பேரறிஞரை என்று கண்டார்கள்? அத்தகைய சாதனையாளரை என்று கண்டார்கள்? பிரதமராயிருந்தும் சிறிதளவும் கூடுதலாக உணவு பெற மறுத்த மாமனிதரை என்று கண்டார்கள்?

மாஸ்கோ, செஞ்சதுக்கத்தில், லெனின் சடலம் அடக்கம் செய்யப்பட்டது. சடலத்திற்கு மருந்திட்டு கண்ணாடிப் பேழையில் வைத்து அடக்கம் செய்யப்பட்டது. இது நடந்தது 1924 சனவரி 27ஆம் நாள்.

அன்றுபோல் இன்றும் லெனின் கண்ணாடிப் பேழையில், கண் உறங்குகிறார். வாடாமல் வதங்காமல் உறங்குகிறார்.

மக்கள் உறங்குகிறார்களா? இல்லை. கொட்டும் மழையிலும், பொழியும் வெண் பனியிலும், கொளுத்தும் வெய்யிலிலும், மக்கள் தொடர். அஞ்சலி செலுத்தக் காணலாம்.

புதுமணத் தம்பதிகள் தம் திருமணத்தைப் பதிவு செய்ததும் விரைந்து செல்லுமிடம் லெனின் சமாதிக்கே! ‘மாஸ்கோவைக் காண வருவோர், தவறாது சென்று தலை தாழ்த்திவிட்டுச் செல்லும் இடம் அச்சமாதியே.

அய்ம்பத்தாறு ஆண்டுகளாக, எல்லா நாட்களும் எல்லா நேரங்களிலும் சிற்றெரும்புகள்போல், மக்கள் நீண்ட வரிசைகளில் நிற்கிறார்கள்; ஊர்ந்து செல்கிறார்கள்; அஞ்சலி செலுத்துகிறார்கள்; கால்களைத் தொட்டுக் கும்பிட்டல்ல, லெனினது பொலிவுள்ள முகத்தைப் பார்த்து ஊக்கம் பெறுகிறார்கள்

அமைதி தவழும் திருமுகத்தைப் பார்ப்போர்க்கு நல்லுணர்வு பொங்கும்; வீர உணர்வு பொங்கும்; நம்பிக்கை கொப்பளிக்கும்;

துடிப்பு ஏற்படும்; எல்லோருக்கும் எல்லாம் இருப்பதான திசை நோக்கிச் செல்லத் தெம்பு பிறக்கும்.

லெனின் தனி மனிதரல்ல; இயக்கம்; பேரியக்கம்; புரட்சி இயக்கம்; கருத்துகளின் கருவூலம்; வாழ்க்கை நெறித் தண்டவாளம்.

பாட்டாளி ஆள முடியுமா? இப்படிக் கேட்ட தோழர்கள் உண்டு. ஆம்; ஆள முடியுமென்று பதில் கூறி அதை மெய்ப்பித்தவர், லெனின்.

பாட்டாளி ஊதிய உயர்வோடு நிறைவு கொள்ள வேண்டும்; அரசியல் ஈடுபாடு அவர்களுக்குத் தேவையில்லை' அப்படி லெனினோடு வாதித்த சகாக்கள் உண்டு.

எல்லோருக்கும் வாழ உரிமையுண்டு; நன்றாக வாழவும் உரிமையுண்டு. சமதர்ம சமுதாயத்தில்தான் இரண்டும் இயலும். சமதர்ம சமுதாயத்தை உருவாக்கும் கடமை, தொழிலாளி வர்க்கத்தின் முதற் கடமையாகும்.

தொழிலாளர், வர்க்க உணர்வு கொண்டு, போராடி, ஒருவரை ஒருவர் சுரண்டாத, ஒரு கூட்டத்தை ஒரு கூட்டம் சுரண்டாத, பொது உடைமை முறையை உருவாக்க வேண்டும். அப்பெரு முயற்சியில் அவர்கள், உழவர்களோடு தோழமைகொண்டு கூட்டணி அமைத்துப் பாடுபட வேண்டும். அப்படி வழிகாட்டியவர் லெனின். அவ்வழியே, இரஷ்ஷியக் குடியானவர்களையும், தொழிலாளர்களையும், படை வீரர்களையும் சேர்த்து அழைத்துச் சென்று வெற்றிக் கொடி நாட்டியவர் லெனின்.

'இரஷ்ஷியப் பாட்டாளி சர்வாதிகாரம் இரஷ்ஷியாவோடு நிறைவு கொள்ளாது, அதே சூட்டில் பன்னாட்டுப் புரட்சிக்கு பொறுப்பேற்க வேண்டும்; உலகத்தொழிலாளர்களை ஒன்றுபடுத்தி, பல நாடுகளிலும் புரட்சியைத் தூண்ட வேண்டும்' இப்படி அடம்பிடித்த தோழர்கள் உண்டு.

'ஆவதறிவார் அறிவுடையார்', 'அகலக்கால் வைத்தல் ஆகாது' போன்ற, பட்டறிவு விவேகத்தைக் கொண்டவர் லெனின். எனவே, உலகத்தின் ஆறிலொரு பரப்பில் விளைந்த சமதர்மப் பயிரைக் காத்து வளர்த்தலே, அக்கால கட்டத்தில் அறிவுடைய செயலாகும் என்று கூறி உறுதியாக நின்றார்.

சோவியத் நாடு, மாறுபட்ட சமூக, அரசியல், பொருளியல், அமைப்புகளை உடைய நாடுகளோடும் சக வாழ்வு வாழ்வதோடு அந்நாடுகளுக்கு ஒல்லும் வகையெல்லாம் உதவி புரிய வேண்டும். அந்நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாது, உதவ வேண்டும். இது லெனின் காட்டிய வழி.

அவர் உலக நாடுகளின் புரட்சிக்குத் தலைமை என்னும் அவாவால் உந்தப்பட்டிருந்தால், சோவியத் ஆட்சி, வேரூன்றி யிருக்குமா? தழைத்திருக்குமா? கேள்விக்குறிகளே.

முதல் பாட்டாளி ஆட்சியை, சமதர்ம வாழ்க்கை முறையை நிலைபெறச் செய்வதற்கே முன்னுரிமை என்று லெனின் வழிகாட்டியது சரியென்று, பிந்திய வரலாறு, மெய்ப்பித்து விட்டது.

பற்பல நாடுகள், தாமே கனிந்து, சமதர்ம நாடுகளாகி விட்டன. இன்று உலகில் மூன்றிலொரு பகுதி சமதர்ம நெடுஞ்சாலையில் வீறு நடைபோடுவது, லெனினுடைய கோட்பாட்டின் வெற்றியாகும்.

இரஷ்ஷியா போன்ற மிகப்பரந்த நாட்டில், எல்லோரும் கற்பதும், பயிற்சி பெறுவதும் லெனினுடைய வெற்றி.

எல்லோருக்கும் வேலை. எல்லோருக்கும் வாழ்க்கைக்குப் போதிய ஊதியம். பல்லாண்டுகளாக ஒரே விலை; எல்லோருக்கும் இலவச மருத்துவம்.

கலையும், இசையும் மேலோரிடம் முடங்கிக் கிடந்தது மாறி, பொது மக்களின் உயிரோட்டமாக மாறியுள்ளது.

இச்சாதனைகள், லெனின் காட்டிய நல்வழியில் சென்றதால் விளைந்தன.

இறந்தும் இறவாதவர்கள் உளர். அவர்கள், சீரிய சிந்தனையாளர்கள்; சொல்லும் செயலும் இணைந்த சான்றோர்கள்; செயற்கரிய செய்த பெரியோர்கள். இத்தனை இலக்கணங்களுக்கும் இலக்கியமாக விளங்கிய, உலகப் பெரும் புரட்சியாளர், இன்றும் வாழ்கிறார். உயிரோட்டமுள்ள கருத்துக்களாக, கொள்கைகளாக, இலட்சியங்களாக, மாமனிதர் லெனின் வாழ்கிறார்; என்றும் வாழ்வார். வாழ்விப்பார்.

★★★

1. குடகு
2. தமிழகம்
3. சதுரகராதி
4. வள்ளுவம்
5. கோபுர தீபம்
6. நீதி நூல்கள்
7. மொழிவளம்
8. கல்வி நிலை
9. இசைத்தமிழ்
10. ஔவையார்
11. முத்தொள்ளாயிரம்
12. லெனின் வாழ்கிறார்
13. பழந்தமிழர் நாகரிகம்
14. புகழேந்தி நளன் கதை
15. இலக்கியக் கட்டுரைகள்
16. வெளிச்சத்தை நோக்கி...
17. பாரதியின் புதிய ஆத்திசூடி
18. தமிழர் திருமணத்தில் தாலி
19. சங்கப் புலவர் சன்மார்க்கம்
20. கனவுகளின் பலாபலன்கள்
21. பாரதிதாசனின் சிறு கதைகள்
22. சுதந்திரப் போரின் எழுச்சிக் களம்
23. அண்ணா போற்றிய பெருமக்கள்
24. தொல் திராவிட மொழி கண்டுபிடிப்பு
25. புதுமைப்பித்தன் கதைகள் விமர்சனங்களும் விஷமதனங்களும்
26. அன்புப் பணிக்கு ஓர் அன்னை தெரேசா
27. 19ஆம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்

T157

50.00

தமிழ் வளர்ச்சித் துறை